ஜாதக கணிதம்

ஸீதாராம தபோவன
வாசக சாலை.

என்னும்

ஜோதிட கிரகசட்பலம் ஆயுள் கணிதம்.

இதில் கிரக சட்பலம், துவாதசபாவ பலம், சப்த்தவர்க்கம் பாவச் சக்கிரம் ஆயுள் கணிதம் ஆகிய இவைகளை வெகு சுலபமாய்ப்போட வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இது சென்னை முத்தியாலுப்பேட்டை ஐஸ்கூலில் சையன்ஸ் உபாத்தியாயராயிருந்தவரும் கணித சாஸ்திரத்தில் பி. ஏ. பட்டம் வகித்தவரும் திருக்சித்த ஆரிய சூரிய சித்தாந்தவாக்கிய கணிதப் பயிற்சியுள்ளவரும் "ஆனந்த போதினி சுத்ததிருக்கணித பஞ்சாங்க" கணிதருமாகிய

C. G. ராஜன், B A. (*Mathematics*).

அவர்களால் எழுதப்பட்டது.

...28.

[**All rights reserved**]

PRINTED AT
THE ST. JOSEPH'S ORPHANAGE PRINTING WORKS
CHINGLEPUT.

உ

கடவுள் துணை

ஜாதக கணிதம்

என்னும்

ஜோதிட கிரக சட்பலம், ஆயுள் கணிதம், (Hindu Calculations etc).

இது

வராஹமிகிராச்சாரியார் அருளிச்செய்த "பிருஹத் ஜாதகம்" அதற்கு வியாக்கியானமாக ஸ்ரீபதி அருளிச்செய்த ஜோதிடகணிதமாகிய "ஸ்ரீபதிபத்ததி" என்ற இந்த இரண்டு கிரந்தங்களுக்குங்கூட வியாக்கியானமாகும்.

இதில்

கிரக சட்பலம், துவாதசபாவ பலம், சப்தவர்க்கம், பாவச்சக்கிரம், ஆயுள்கணிதம் ஆகிய இவைகளை வெகு சுலபமாகப்போட வாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இது "பல தீபிகை" என்ற கிரந்தப் பிரகாரம் பலன் அறிவதற்கு மிகவும் அவசியமானது.

மற்றும் இதில்

சட்பலத்தைக் கணிக்கும் விதத்தையும், சப்தவர்க்கம், பாவச்சக்கிரம், ஆயுள் கணிதம் ஆகிய இவைகளைப்போடும் வழியையும் கிரகஸ்புடம், லக்கினஸ்புடம், ஜாதகம் இவைகளைக்கணிக்க வேண்டிய முறையையும் ஒரு ஜாதகத்தை உதாரணமாக வைத்துக்காட்டப் பட்டிருக்கின்றது.

இது

சென்னை முத்தியாலுப்பேட்டை ஐஸ்கூலில் சையன்ஸ் உபாத்தியாயராயிருந்தவரும், கணித சாஸ்திரத்தில். பி. ஏ. பட்டம் வகித்தவரும், திருக்சித்த ஆரிய சூரிய சித்தாந்த வாக்கிய கணிதப்பயிற்சியுள்ளவரும், "ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கக்" கணிதருமாகிய

C. C. ராஜன், B. A. (*Mathematics*).

அவர்களால் இயற்றப்பட்டது.

All rights reserved] 1928. [Indian Edition

முன்னுரை.

ஜ்யோதிஷம் என்பது ஆகாயத்தில் ஜோதியாய் நமக்குப் புலப்படுகின்ற அண்டங்களால் உண்டாகின்ற நன்மை துன்மைகளைப் பற்றி முந்தியாகவே தெரிவிக்கின்ற ஒரு சாஸ்திரமாகும். இது ஒரு புராதீனமான சாஸ்திரம். துன்மையை நீக்கி நன்மையைக் கோருவது மனிதருடைய இயல்பாதலாலும், மனிதருடைய வாழ் நாளில் இனிமேல் வரப்போகின்ற நன்மை துன்மைகளைப்பற்றி முன்னமே அறிவது அவசியமாதலாலும், இயற்கையாதலாலும், இந்த சாஸ்திரம் எக்காலத்திலும் எல்லோராலும் நன்குமதிக்கப் படும் சாஸ்திரமாகும். இந்த சாஸ்திரம் இந்தியர்களால் மிகவும் பெருமையாகப் பாராட்டப்பட்டு வருகின்ற வேதத்தில் ஒரு அங்கமாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்த சாஸ்திரம் மிகவும் பெருமை வாய்ந்தது என்று கருதுவதற்கு யாதொரு ஐயமுமில்லை. இதை அநேக நிபுண இந்திய வானசாஸ்திரிகளும் ஜோதிடர்களும் படித்து கையாண்டு கொண்டு வந்திருப்பதாக நம்முடைய தேசத்து வானசாஸ்திர நூல்களாலும், ஜோதிட நூல்களாலும் இன்னம் இதர சாஸ்திரங்களாலும் புலப்படுகின்றது.

இந்த சாஸ்திரம் இரண்டு பெரிய வகுப்புகளாகப் பிரிக்கப்படும். அவை (1) வானசாஸ்திரம், (2) மானிடஜென்மம் முதலாயுள்ள ஜீவராசிகளுக்கு நேரிடும் நன்மை துன்மைகளைத் தெரிவிக்கின்ற ஜோதிடம் என்பனவாம். வானசாஸ்திரம் என்பது ஆகாயத்திலுள்ள அநேக வருடங்கள் சென்றாலுங்கூட அசைவற்றிருப்பதுபோலத் தோற்றுகின்ற நட்சத்திரங்களைப்பற்றியும், ஓரே விடத்தில் தங்கி இராமல் அடிக்கடி நகர்ந்து கொண்டேயிருக்கின்ற அண்டங்கள் என்று சொல்லப்படுகின்ற கிரகங்களைப் பற்றியும், தூமகேது முதலியவைகளைப்பற்றியும் நமக்குத் தெரிவிக்கும். அதாவது நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியவைகளின் உருவத்தையும், அளவையும், அவைகள் எந்த உலோகங்களால் உண்டாக்கப் பட்டிருக்கின்றன வென்பதையும் தெரிவிப்பதுடன், கிரகங்கள் எவ்விதமாக அசை

கின்றன என்பதையும், அப்படி அசைவதற்குக் காரணத்தையும், அந்த காரணத்தைக்கொண்டு நமக்குத் தேவையான ஒரு காலத்தில் கிரகங்கள் ஆகாயத்தில் எவ்விடத்தில் இருக்கும் என்பதை அறியும் மார்கத்தையும், கிரஹணங்கள் சம்பவிக்கும் காலத்தையும் தெரிவிக்கும். ஆனால் இந்த சாஸ்திரம், நட்சத்திரம், கிரகங்கள் தூமகேதுக்கள் முதலியவைகளால் இந்த பூமண்டலத்தி லுள்ள ஜீவபிராணிகளுக்குச் சம்பவிக்கும் நன்மை துன்மைகளைப் பற்றி ஒன்றுந்தெரிவிக்கின்றதில்லை. ஜோதிடசாஸ்திரமோ இப்பிரபஞ்சத்திலுள்ள ஜீவராசிகள், தாவரவர்க்கங்கள் முதலியவைகளுக்கும் ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள் கிரகங்கள் முதலிய அண்டங்களுக்கு முள்ள ஒருவித சம்மந்தத்தை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் ஜீவராசி முதலியவைகளுக்கு உண்டாகின்ற நன்மை துன்மைகள் கிரகங்கள் ஆகாயத்திலிருக்கும் இடத்திற்குத் தக்கவாறு மாறுபடுகின்றனவென்றும் ஜோதிடந்தெரிவிக்கும். ஆகையால் ஆகாயத்தில் கிரகங்கள் இருக்குமிடங்களை மிகவும் துல்லிபமாக அறிய வேண்டியதவசியமென்று புலப்படுகின்றது. ஆகாயத்தில் கிரகங்கள் இருக்கின்றவிடங்கள், ஜோதிடத்திற்கு முக்கியமானதால், இந்த விடங்களைப்பற்றி தெரிவிக்கின்ற வானசாஸ்திரம் ஜோதிடத்திற்கு முதற் கருவியாகவும் துணைக்கருவியாகவுமிருக்கின்றது என்பது எடுத்துக்காட்டாமலே நன்றாய்ப் புலப்படுகின்றது. ஆகையால் ஜோதிடசாஸ்திரத்தைக் கையாளுகின்றவர்களுக்கு வானசாஸ்திரந் தெரிந்திருப்பது மிகவும் நன்மையை விளைவிக்கும்.

சோதிடசாஸ்திரத்தைக்கொண்டு சொல்லப்படும் பலாபலன்கள் தவறிப்போகாமல் சரியாக விருக்கவேண்டுமானால் மேலே சொல்லிய காரணத்தினால் வானசாஸ்திரமும் தவறுதலாயில்லாமல் சரியாக விருக்கவேண்டுமென்பது அவசியமாகின்றது. நமது இந்து தேச வானசாஸ்திரம் அனேக[illegible]ருஷங்களாகக் கையாளப்பட்டு வந்திருந்தும் சுமார் மூன்னூறு நாஞூ[illegible] வருடங்களாக விருத்தியில்லாமலிருந்து கொண்டிருக்கின்றது. இது இப்படி இருப்பதற்குப் பல காரணங்களுள. அவைகளைப்பற்றி இங்கு விவரமாகச்சொல்லுவது அனுவசியமானது. வானசாஸ்திரம் அனேக காலமாக நாளுக்குநாள் விருத்தி செய்யப்பட்டு அப்போதைக்கப்போது கூடியமட்டும்

துல்லியமாக விருக்கும்படியாக நமது முன்னோர்கள் வானசாஸ்திரப் புத்தகங்களை எழுதி இருக்கின்றார்கள். இப்படி எழுதப்பட்ட புத்தகங்கள் அனேகமாயும், ஒன்றுக்கொன்று வித்தியாசமாயுமிருக்கின்றன. இப்புத்தகங்களுக்குச் சித்தாந்தமென்றும், கரணக்கிரந்தங்கள் என்றும் வாக்கிய கணிதங்கள் என்றும் பலவாராகப் பெயரிடப்பட்டிருக்கின்றது. சோதிடத்திற்குவேண்டிய கிரகங்களிருக்கின்ற ஸ்தானங்களைப் பெரும்பான்மையோர் பஞ்சாங்கங்கள் மூலமாய் அறிவதாலும், சோதிடத்திற்குப் பஞ்சாங்கங்கள் சரியாக விருக்க வேண்டுமென்பது அவசியமாகின்றது. பஞ்சாங்கங்கள் வானசாஸ்திரப்புத்தகங்களினுதவியால் கணிக்கப்படுவதாலும், இந்துதேசத்து வானசாஸ்திர புத்தகங்கள் கிரகங்களினுடைய நிலையில் ஒன்றுக்கொன்று வித்தியாசம் விளைவிக்கக்கூடியனவாயிருப்பதாலும், பஞ்சாங்கங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகவிருக்கின்றன. இவ்வித வித்தியாசமாக விருக்கின்ற பல பஞ்சாங்கங்களைப் பலர் உபயோகப்படுத்துவதால் ஒரே ஜாதகம் பலரால் பலவித வித்தியாசத்துடன் எழுதப்பட்டு வருகிறது சகஜமாக விருக்கின்றது. இவ்விதமாக விருப்பதறகு இந்துதேச வானசாஸ்திரப்புத்தகங்கள் எவ்வளவு வரையிலும் சரியானதாக விருக்கின்றனவென்றும், இந்தியர்களால் செய்யப்பட்ட சரியான வானசாஸ்திரப் புத்தகம் ஒன்றமில்லாமலிருந்தால் சரியான வானசாஸ்திரப் புத்தகங்கள் எந்த தேசத்தாரால் செய்யப்பட்டு வருகின்றன என்று அறிந்து அந்த புத்தகங்களைக் கையாளாமலிருப்பதே முக்கிய காரணமாகும். தற்காலத்தில் சரியானவான சாஸ்திரபுத்தகங்களைக்கொண்டு திருக்கணித பஞ்சாங்கங்கள் என்று பெயரிட்டுச் சிலர் பஞ்சாங்களைக் கணித்து வருகின்றார்கள். இப்பஞ்சாங்கங்களினுதவியால் அல்லது சரியான வானசாஸ்திரபுத்தகளினுதவியால் கிரகங்களின் ஸ்புடத்தைக் கணித்தல் மிகவும் அவசியமானது.

மேலும் ஜாதகபலாபலன்களை அறிவதற்குக் கிரகங்களிருக்கும் நிலையையும் அவைகளினுடைய வலிவையும் அறிய வேண்டும். உதாரணமாக ஒரு ஜாதகருக்கு ஆயுள், அல்லது ஜீவனயோகம் அல்லது களத்திரயோகம், அல்லது புத்திரயோகம் அறியவேண்டுமானால் அந்தந்த பாவங்களை எந்த கிரகங்கள்

பார்க்கின்றனவென்றும், பார்க்கின்ற கிரகங்களின் பலாபலத்தையும், அந்தந்த பாவங்களுக்கு அதிபதியாயிருக்கின்ற கிரகங்களினுடைய பலத்தையும் அவைகளுடன் சம்பந்தப்பட்ட அல்லது அவைகளைப் பார்க்கும் கிரகங்களின் பலத்தையும் அந்தந்த பாவங்களிலிருக்கின்ற கிரகங்களின் பலத்தையும் அறியவேண்டியது மிகவும் அவசியமாகவிருக்கிறது. ஆகையால் எவ்வித பலாபலன்களைச் சொல்லுவதற்குக் கிரகங்களின் பலாபலத்தை முதலில் அறியவேண்டுமென்று ஏற்படுகின்றது. கிரகங்களின் பலத்தை அறியவேண்டுமானால் கணிதம் செய்து அறியவேண்டுமேயல்லாமல் ஜாதகத்தை சும்மாய்ப் பார்த்துவிட்டுக் கணிதம் செய்யாமல் சொல்லமுடியாது; ஒரு சமயம் சொல்லினும் அது தோராயமானதே தவிற துல்லியமானதல்ல. ஏனென்றால் கிரகங்களின் பலத்தை அறிவதற்கு அநேக அம்சங்களைக்கொண்டு பலம் ஆராயவேண்டுமாதலால் ஜாதகத்தைப் பார்த்தமாத்திரத்தில் கிரகபலத்தை நிர்ணயிப்பது அசாத்தியமாகும். ஆகையால் தான் உதாரணமாக ஒரு இராசியில் குரு, சனி என்ற இரண்டு கிரகங்களும் சம்மந்தப்பட்டிருந்தால் இரண்டு ஜோதிடர்களில் ஒருவர் சனியைவிட குரு வலுவாயிருக்கின்றார் என்றும், மற்றொருவர் அப்படித் தோன்றவில்லை என்றும் குருவைவிட சனிதான் வலுவாயிருக்கின்றதாகத் தோன்றுகின்றதென்றும் சொல்லுவது மிகவும் சகஜமாகவிருக்கின்றது. இப்படிச்சொல்வதற்கு, இவ்விரண்டு கிரகங்களின் வலிவைக் கணிதரீதியாய் இவ்விரண்டு ஜோதிடர்களும் கணித்துப்பார்க்காமல் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு அவர்களுடைய மனதிற்குத் தோன்றியபடி சொல்லுவதுதான் காரணமாகும். இப்படிச் செய்யாமல் கணிதரீதியாய்க் கணித்துப்பார்த்தால் இரண்டு ஜோதிடர்களும் வித்தியாசமாய் அபிப்பிராயப்படுவதற்குக் காரணமிராது. ஒரு கிரகத்தினுடைய பலம் 6 வகைப்படும். அவை (1) ஸ்தானபலம், கிரகதிருஷ்டி பலம் (2) காலபலம், (3) அயனபலம், கிரகயுத்தபலம் (4) நைசர்க்கிகப்ப[illegible] (5) திக்குப்பலம் (6) ஜேஷ்டாபலம், என அறுவகைப்படும். இந்த 6 விதபலங்களும் சட்பலம் என்று சொல்லப்படும். இந்த 6 விதபலங்களில் சில அநேக அம்சங்களுடையனவாகும். உதாரணமாக ஸ்தானபலம் என்பது (1) உச்சபலம் (2) கேந்திராதிபலம் (3) திரேகாணபலம் (4) யுக்மாயுக்மபலம் (5, சப்த்த

வர்க்கஜ பலம் என 5 வகைப்படும். இந்த சப்த்தவர்க்கஜ பலம் என்பது (1) இராசிவர்க்க பலம் (2) நவாம்சை வர்க்கபலம் (3) திரேக்காணவர்க்க பலம் (4) துவாதசாம்ச வர்க்கபலம் (5) சப்தமாம்ச வர்க்க பலம் (6) ஓராவர்க்க பலம் (7) திரிம்சாம்சவர்க்க பலம் என 7 வகைபடும். ஆகையால் ஸ்தானபலம் என்பது மொத்தத்தில் 11 அம்சங்களுடையது. மேலும் காலபலம் என்பது (1) நதஉன்னதபலம் (2) தினராத்திரிதிரிபாகப்பலம் (3) தினபலம் (4) மாசபலம் (5) வருஷபலம் (6) ஓராபலம் (7) பட்சபலம் என 7 வகைப்படும். ஆகையால் கிரகங்களினுடைய சட்பலம் என்று சொல்லப்பட்டது அடியிற்கண்ட பலங்கள் அடங்கியுள்ளதென்று அறியவேண்டியது.

1.	கிரகதிருஷ்டிபலம்	13.	நதஉன்னத பலம்
2.	உச்சபலம்	14.	தினராத்திரிதிரிபாக பலம்
3.	கேத்திராதிபலம்	15.	தினபலம்
4.	திரேகாணபலம்	16.	மாசபலம்
5.	யுக்மாயுக்மபலம்	17.	வருஷபலம்
6.	இராசி வர்க்கபலம்	18.	ஓராபலம்
7.	நவாம்சவர்க்க பலம்	19.	பட்சபலம்
8.	திரேக்காண வர்க்கபலம்	20.	அயனபலம்
9.	துவாதசாம்ச வர்க்கபலம்	21.	கிரகயுத்தபலம்
10.	சப்த்தமாம்ச வர்க்கபலம்	22.	நைசர்க்கிக பலம்
11.	ஓராவர்க்க பலம்	23.	திக்குப்பலம்
12.	திரிம்சாம்ச வர்க்கபலம்	24.	ஜேஷ்டாபலம்

ஆகையால் ஒரு கிரகத்தினுடைய பலம் 24 அம்சங்களால் ஏற்பட்டதாகும். ஒரு கிரகத்தின் பலத்தை அறியவேண்டுமானால் மேலே சொல்லிய 24 வித அம்சங்களையும் இந்த அம்சங்களை அறிவதற்காகத் தேவையான கணிதங்களையும் அறியவேண்டியது அவசியம். இவைகளெல்லாம் பெரும்பாலும் கணித்துப் பார்க்க வேண்டியனவாயிருப்பனவே தவிற மனதிலேயே அறியக்கூடியனவாகவில்லை. ஆகையால் ஒரு ஜாதகத்தைப் பார்த்தவுடனே கிரகங்களின் வலிவைப்பற்றி கணித்துப் பார்க்காமல் மனதிலேயே அபிப்பிராயப்படுவது பிசகாகும் அல்லது தோராயமாகும் என்பது எடுத்

துக்காட்டாமலே தெரியவரும். ஆகையால் அநேக ஜோதிடர்கள் சொல்லும் பலாபலன்கள் தவறிப்போகின்றது மிகவும் சகஜமாகவிருக்கின்றது. மேலும் மேலே சொல்லியபடி கிரகங்களின் பலத்தைக் கணித்துத் தெரிந்து கொள்ளுவது சிரமமானதாலும் சிரமத்திற்குத் தக்கபடி சோதிடர்களுக்கு வெகுமானம் கிடைக்காததாலும் பெரும்பான்மையோர் சட்பலத்தைக் கணித்துப் பார்க்காமலே பலாபலன்களைச் சொல்லி விடுகின்றார்கள். இப்படிச் செய்வதால் பலாபலன்கள் பெரும்பான்மையும் தவறிப்போகின்றன. பலாபலன்கள் தவறிப்போவதால் சோதிட சாஸ்திரம் பொய்யான சாஸ்திரம் என்று சிலர் அபிப்பிராயப் படுவதற்கு முகாந்தரம் ஏற்படுகின்றது. மேலே சொல்லிய சட்பலத்தைச் சோதிடர்கள் கணித்துப்பார்த்து பலாபலன்களைச் சொல்லத் துணிவார்களேயானால் சோதிட சாஸ்திரத்திற்குத்தற்காலம் உண்டாயிருக்கும் அபகீர்த்தி நீங்கி அதனுடைய பெருமை நாளுக்கு நாள் விர்த்தியடையும் என்பதற்குச் சந்தேகமே இராது.

மேலும் மேலே சொல்லிய ஒவ்வொரு பலத்தையும் கணிக்க வேண்டுமானால் கணிதவித்தை தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். கணிப்பதற்கு வேண்டிய சிரமத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதவசியமாகவிருக்கின்றது. முக்கியமாக இவ்விரண்டு காரணங்களைப்பற்றியே அநேக சோதிடர்கள் கிரகங்களின் சட்பலத்தைக்கணித்துப் பார்க்கின்றதில்லை. கணிப்பதனாலுண்டாகும் சிரமத்தையும் கணிதவித்தை தெரியாமலிருப்பதனாலுண்டாகும் கஷ்டத்தையும் நிவர்த்தி செய்யும் பொருட்டே இந்த புத்தகத்தில் அநேக வாக்கியங்கள் கணிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாக்கியங்களினுதவியால் யாதொரு சிரமமுமில்லால் வெகு சுலபமாகக் கிரகதிருக்பலம், உச்சபலம், திக்குப்பலம், பட்சபலம், காலபலம், அயனபலம், வருஷபலம், மாசபலம், தினபலம், ஓராபலம், தசமலக்கினம் என்ற மத்தியலக்கினம், ஜெனன காலத்தில் கெற்பச் செல்லுபோய் நின்ற கிரகதி[illegible]ன் அளவு, கேந்திரபலம், திரேஸ்காணபலம், சப்த்தவர்க்கம் ஆகிய முதலியவைகளைப் போடலாம் மேலும் கணிக்கும்போது அநேக சந்தேகங்களுண்டாகுவது சகஜமானதால் அவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும் கணிக்கும் முறை

யை நன்றாய் விளக்கிக்காட்டும் பொருட்டும், அநேக உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கணிக்கும் முறையை நன்றாய் விளங்கும்படியாய் விவரித்துச் சொல்லியிருப்பதில் கூறுவதையே கூறுவது என்ற குற்றம் ஒரு சமயமிருந்தபோதிலுங்கூட அதை கவனியாமல் நன்றாய் விளங்கும்படிச் சொல்லுவது விசேஷமென்றே கருதி ஒவ்வொன்றையும் விபரமாகச் சொல்லியிருக்கின்றது. ஆகையால் ஒருவர் இந்த புத்தகத்தைப்பிறருடைய உதவியில்லாமலேதானே படித்துத்தெரிந்து கொள்ளலாம். மேலும் ஜாதகத்தைச் சரியாய்க் கணிக்கத் தெரியாதவர்களுக்கு ஜாதகத்தைச் சரியாய்க் கணிக்க வேண்டிய முறையையும், கிரகங்களின் சட்பலத்தைக் கணிக்கும் வழியையும், இராசிச்சக்கிரம், நவாம்சச்சக்கிரம், திரேகாணச் சக்கிரம், துவாதசாம்சச் சக்கிரம், சப்தமாம்சச்சக்கிரம், ஓரை, திரிம்சாம்சம் என்று சொல்லப்பட்ட 7 வித வர்க்கங்களென்ற சப்தவர்க்கங்களையும், பாவச்சக்கிரத்தைப் போடும் வழியையும், பாவபலம் முதலியவைகளைக் கணிக்கும் வழியையும் ஒரு ஜாதகத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு அந்த ஜாதகத்திற்கு கணித்தும்போட்டும் காட்டியிருக்கின்றது.

இந்த புத்தகம் ஜோதிட சாஸ்திரமும் வானசாஸ்திரமும் நன்றாய் அறிந்த சுமார் தொள்ளாயிரம் வருஷங்களுக்கு முந்தி இந்தியாவில் ஜீவித்திருந்த ஸ்ரீபதி பட்டாச்சாரியார் எழுதிய ஸ்ரீபதி சோதிட சாஸ்திர கணிதம் அல்லது ஸ்ரீபதிபத்ததி என்று சொல்லப்பட்ட ஜாதககர்மபத்ததியில் கொடுத்துள்ள விதிகளைப் பெரும்பாலும் அனுசரித்து எழுதப்பட்டது. இந்த ஸ்ரீபதிபத்ததி என்ற கிரந்தம், உலக பிரசித்திபெற்ற வராஹமிகிராச்சாரியாரவர்களால் செய்யப்பட்ட பிருஹத் ஜாதகத்திற்கு ஒரு வியாக்கியானமாகும். ஆகையால் இந்த புத்தகம் பிருஹத்ஜாதகம், ஸ்ரீபதிபத்ததி என்ற இவ்விரண்டு கிரந்தங்களுக்குங்கூட ஒரு வியாக்கியானம் என்று அறியவேண்டியது. வராஹமிகிரர் ஸ்ரீபதி இவர்கள் சொல்லிய பிரகாரம் ஒவ்வொருதடவையும் ஒவ்வொரு கிரகத்திற்கும் முதலிலிருந்து சட்பலத்தைக் கணிப்பது மிகவும் சிரமமாதலால் இந்த சிரமத்தை நீக்கும் பொருட்டே இந்த புத்தகத்தில் அநேக வாக்கியங்கள் கணிக்கப்பட்டு வேண்

டியபோது தயாராய் உபயோகப்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த புத்தகம் மூன்று பிரிவுகளாக எழுதப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பிரிவிற்கும் அத்தியாயம் என்று பெயரிட்டிருக்கின்றது. முதல் அத்தியாயத்தில் ஜாதகம் என்பது என்ன என்பதையும், ஜாதகத்தைச்சரியாய்க் கணிக்கவேண்டிய முறையையும் சொல்லியிருப்பபதுந்தவிற ஒரு ஜாதகத்திற்கு உதாரணமாகச் சட்வர்க்கமும், சட்பலமும், பாவச்சக்கிரமும், பாவபலமும் கணித்துக்காட்டப் பட்டிருக்கின்றன. மூன்ருவது அத்தியாயத்தில் சட்வர்க்கம், சட்பலம், பாவச்சக்கிரம், பாவபலம் முதலியவைகளைச் சுலபமாகக் கணிக்கும் பொருட்டுத் தேவையான வாக்கியங்களைக் கணித்துக்கொடுத்திருக்கின்றது. இரண்டாவது அத்தியாயத்தில், மூன்ருவது அத்தியாயத்தில் கொடுத்துள்ள வாக்கியங்களை உபயோகப்படுத்தும் வழிகளை கொடுத்திருக்கின்றது.

சில வருடங்களுக்கு முந்தி தமிழ் வசன நடையில் என்னுல் எழுதி வைத்து இப்போது தயாராயிருக்கின்ற பிரஹத் ஜாதகத்திற்குங்கூட இந்த புத்தகத்தை வியாக்கியானமாக விருக்கும்படி எண்ணி இதை நான் எழுத ஆரம்பித்தேன். என்னுடைய பிருஹத் ஜாதகத்திற்கும், வேறு எவராலும் அச்சிடப்பட்ட பிருஹத் ஜாதகத்திற்கும், ஸ்ரீபதிசோதிஷம் என்று சொல்லப்பட்ட ஸ்ரீபதிபத்ததிக்கும் பல தீபிகை என்ற கிரந்தத்திற்குங்கூட மிகவும் அவசியமான வியாக்கியானமாகும். இந்த புத்தகத்தை அச்சிடும்போது புரூப் முதலியவைகளைப் பார்த்து எனக்கு உதவி செய்த சோதிட சாஸ்திரம் தெரிந்த என்னுடைய மூத்த தமையனுருக்கு என்னுடைய அன்பார்ந்த வந்தனத்தை நான் அளிக்கின்றேன்.

இந்த புத்தகத்தில் எழுத்துப் பிழை, சொற்பிழை முதலியவைகளிருந்தால் அவைகளை மன்னித்து இதிலுள்ள சாராம்சத்தை ஏற்றுக்கொண்டு இந்த புத்தகத்தை ஆமோதிக்கும்படியாய் இதை வாசிக்கும் பெரியோர்களையும் சிறியோர்களையும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் இந்த புத்தகத்தை இன்னம்

விருத்தி செய்வதற்காக யாராகிலும் தெரியப்படுத்தும் அபிப்பிராயங்களை வந்தனத்துடன் அங்கிகாரஞ் செய்வதுடன், அந்த அபிப்பிராயங்களுக்கிணங்க விருத்திகளை அடுத்த பதிப்பில் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

27—12—1928.
நெ. 7 வெங்கடேசமேஸ்திரி
தெருவு சௌகார்பேட்டை
சென்னை.

C. G ராஜன் B. A.,

விஷய அட்டவணை.

1-வது அத்தியாயம். பக்கம்

1.	ஜாதகம் என்பதின் விபரம்	1
2.	ஜாதகம் எழுதவேண்டிய முறை	4
3.	ஜெனன நாழிகை கணித்தல்	6
4.	கிரகஸ்புடங் கணித்தல்	6
5.	ஜெனன காலதிதி அறிதல்	7
6.	ஜெனனகால நட்சத்திரம் அறிதல்	8
7.	ஜெனனகால தெசை அறிதல்	8
8.	ஜெனனகாலத்தில் லக்கினம் கணித்தல் ...	8
9.	ஜெனன காலத்தில் ஓரை கணித்தல்	19
10.	சப்த்தவர்க்கச் சக்கிரங்கள்	19
11.	இராசிச்சக்கிரம் போடும் விதம்	20
12.	நவாம்சைச் சக்கிரம் போடும் விதம்	21
13.	திரேகாணச்சக்கிரம் போடும் விதம்	22
14.	துவாதசாம்சம் போடும் விதம்	22
15.	கிரக ஓராதிபதி கணித்தல்	22
16.	கிரக திரிம்சாதிபதி கணித்தல்	23
17.	சப்த்தமாம்சச்சக்கிரம் போடும் விதம். ...	24
18.	பாவச்சக்கிரம் போடும் விதம்	24
19.	கிரகங்களின் ஷட்வர்க்கப்பலம் அறிதல் ...	29
20.	கிரகதிருக்பலம் கணித்தல்	29
21.	கிரக உச்சபலம் கணித்தல்	32
22.	கிரக கேந்திரபலம் கணித்தல்	33
23.	கிரக திரேகாணபலம் கணித்தல்	33
24.	கிரகயுக்மாயுக்ம பலம் கணித்தல்	34
25.	சப்த்தவர்கஜபலம் கணித்தல்	34
26.	தற்காலசத்துருமித்துரு அறிதல்	35
27.	நைசர்க்கிக நட்பு அறிதல்	36

28. இராசி வர்கஜபலம் கணித்தல் 37
29. நாவாம்சைவர்கஜபலம் கணித்தல் 38
30. திரேகாணவர்கஜபலம் கணித்தல் 38
31. துவாதசாம்சவர்கஜபலம் கணித்தல் 39
32. துவாதசாம்சவர்கஜபலம் கணிதல் 39
33. திரிம்சாம்சவர்கஜபலம் கணித்தல் 40
34. கிரகஸ்தானபலம் கணித்தல் 41
35. கிரக காலபலம் கணித்தல் 42
36. கரக நத உன்னத பலம் கணித்தல் 42
37. கிரக தின ராத்திரி திரிபாகப் பலம் கணித்தல் ... 43
38. தினாதிபலம் கணித்தல் 43
39. மாசாதிபலம் கணித்தல் 44
40. வருஷாதிபலம் கணித்தல் 44
41. ஓராதிபலம் கணித்தல் 45
42. பட்சபலம் கணித்தல் 45
43. அயனபலம் கணித்தல் 46
44. கிரகநைசர்க்கிக பலம் கணித்தல் 48
45. கிரகதிக்குப்பலம் கணித்தல் 48
46. கிரகஜேஷ்டாபலம் கணித்தல் 48
47. கிரகசட்பலம் கணித்தல் 49
48. பாவதிருக்பலம் கணித்தல் 51
49. பாவாதிபலம் கணித்தல் 54
50. புதகுரு பாவதிருக்பலம் கணித்தல் 55
51. பாவதிக்குப்பலம் கணித்தல் 56
52. பாவ பலம் கணித்தல் 56
53. இஷ்டபலம் கணித்தல் 58
54. கஷ்டபலம் கணித்தல் 59
55. இஷ்ட சட்பலம் கணித்தல் 59
56. கஷ்ட சட்பலம் கணித்தல 60
57. இஷ்ட கிரக திருக்பலம் கணித்தல் 60
58. கஷ்ட கிரக திருக்பலம் கணித்தல் 61
59. இஷ்ட கஷ்ட சப்தவர்கஜபலம் கணித்தல் ... 62

60. சுப அசுப பங்க்தி கணித்தல் 64
61 சுப அசுப மத்தியபலம் கணித்தல் 66
62. ஸ்பஷ்டசுப அசுபபலம் கணித்தல் 68

2-வது அத்தியாயம்.

வாக்கியங்களை உபயோகப்படுத்தும் விதம்.

63. 1, 2, 3, 4-வது வாக்கியங்கள் 71
64. 5-வது வாக்கியம் 71
65. 6-வது „ 73
66. 7-வது „ 80
67. 8-வது „ 80
68. 9-வது „ 81
69. 10-வது „ 86
70. 11-வது „ 87
71. 12-வது „ 90
72. 13-வது „ 90
73. 14-வது „ 91
74. 15-வது „ 92
75. 16-வது „ 93
76. 17-வது „ 93
77, 18-வது „ 94
78. 19வது 20வது „ 94
79, 21வது „ 99
80. 22வது „ 100
81. 23வது „ 102
82. 24வது „ 102
83. 25வது „ 103
84. 26வது „ 103
85. 27வது „ 103
86. 28வது „ 104
87. 29வது „ 105
88, 30வது „ 105
89. 31வது „ 105

90. 32வது வாக்கியம் 106
91. 33-43வது ,, ... 110

3-வது அத்தியாயம் வாக்கியங்கள்.

92. செ. 1 இந்து தேசத்து காலவாய்ப்பாடு ... 111
93. ,, 2 இங்கிலீஷ் காலவாய்ப்பாடு ... 111
94. ,, 3 இந்து தேசத்து வட்ட வாய்ப்பாடு ... 111
95. ,, 4 இங்கிலீஷ் வட்ட வாய்ப்பாடு ... 112
96. ,, 5 மணி, நிமிஷம், நாழிகை, விநாடி வாய்ப்பாடு 112
97. ,, 6 தினராசிக் கணித வாக்கியம் ... 114
98. ,, 7 நட்சத்திரங்களின் பெயர்கள் ... 120
99. ,, 8 திதிகளும் அவைகளின் ஸ்புடமும் ... 121
100. ,, 9 மத்திய லக்கினஸ்புட வாக்கியம் ... 123
101. ,, 10 ஜெனன தெசைகணித வாக்கியம் ... 134
102. ,, 11 இராசி, நவாம்ச திரேகாணஸ்புட வாக்கியம் 137
103. ,, 12 துவாதச ராசிகளின் ஸ்புடம் ... 141
104. ,, 13 நவாம்ச சக்கிரஸ்புடம் ... 141
105. ,, 14 திரேகாண சக்கிரஸ்புடம் ... 144
106. ,, 15 துவாதசாம்ச சக்கிரஸ்புடம் ... 145
107. ,, 16 ஓரை கணிதஸ்புடம் 147
108. ,, 17 திரிம்சாம்சாதி கணிதஸ்புடம் ... 148
109. ,, 18 சப்தமாம்ச சக்கிரஸ்புடம் 149
110. ,, 19 கிரகதிருக்பல வாக்கியம் 150
111. ,, 20 செவ்வாய், குரு, சனி சேபபலம் 153
112. ,, 21 கிரக உச்சபல வாக்கியம் 157
113. ,, 22 சப்த்தவர்கஜபல வாக்கியம் 169
114. ,, 23 யுக்மாயுக்ம பலம் வாக்கியம் ... 173
115. ,, 24 கேந்திரபல வாக்கியம் 174
116. ,, 25 திரேஷ்காண பல வாக்கியம் ... 174
117. ,, 26 திக்குப்பல வாக்கியம் 175
118. ,, 27 நைசர்க்கிகபல வாகக்யம் 178
119. ,, 28 நதஉன்னதபல வாக்கியம் 178
120. ,, 29 பட்சபல வாக்கியம் 180

121.	,, 30	தினராத்திரி திரிபாகபல வாக்கியம் ...	181
122.	,, 31	அயனபல வாக்கியம்	183
123.	,, 32	உப அஹர்கண வாக்கியம்	184
		ஓராதிபதி வாக்கியம்	187
124.	,, 33	ஜேஷ்டாபலம்	187
125.	,, 34	பாவபலம்	199
		பாவாதிபதி பலம்	199
		பாவதிருக்பலம்	201
		புத குரு பாவபலம்	201
		பாவதிக்குப்பலம்	201
126.	,, 35	இஷ்ட கஷ்ட கணிதம்	204
127.	,, 36	இஷ்ட கஷ்ட சட்பலம்	212
128.	,, 37	இஷ்ட கஷ்ட கிரகத்திருக்பலம் ...	214
129.	,, 38	இஷ்ட கஷ்ட சப்தவர்க்கஜ பலம் ...	215
130.	,, 39	சுப அசுப பங்க்தீ கணிதம்	217
131.	,, 40	சுப அசுப மத்திய பல கணிதம் ...	220
132.	,, 41	ஸ்பஷ்ட சுப அசுபபலம்	222
133.		கிரக யுத்தபலம்	227
134.		ஆயுள் நிர்ணய கணிதம்	230
135.		பிண்டாயுர்தாயமும் நைசர்க்கிக ஆயுர்தாயமும் அம்சாயுர்தாயமும் ...	237
136.		பிண்டாயுர்தாய வாக்கியம்	239
137.		அம்சாயுர்தாய வாக்கியம்	240
138.		நைசர்கிக ஆயுர்தாய வாக்கியம்	242
139.		நைசர்கிக ஆயுர்தாய கணிதம்	244
140.		பிண்டாயுர்தாய கணிதம்	251
141.		அம்சாயுர்தாய கணிதம்	257
142.		சௌரமான ஆயுர்தாய கணிதம்	263
143.		அயனாம்சம்	265
144.		அயனாம்சஸ்புடம்	268
145.		நிராயன, சாயன இராசிமான சங்கியை ...	271

பிழை திருத்தம்.

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
4	5	நட்ச்த்திரத்திலும் ...	நட்சத்திரத்திலும்
5	5	நாழிகைகளை ...	நாழிகைககளை
15	27	சொல்லாக ...	செல்லாக
21	13	நாவம்சை ...	நவாம்சை
24	18	உபயோகப ...	உபயோசப்
29	7	பாபவித்தின் ...	பாவத்தின்
32	1	அசுபலத்திற்கு ...	அசுபபலத்திற்கு
38	12	கனனியா ...	கன்னியா
43	19	1879ஹு ...	1869 ஹு
44	24	நிஜதிபதியாகவுப் ...	திஜதிபதியாகவும்
51	2	கிரகத்திற்கூச் ...	கிரசத்திற்குச்
51	17	வந்தால ...	வந்தால்
62	12	இஷ்ட ...	இஷ்ட
71	22	காலை மணி 5 ...	காலை மணி 6
76	23	பாகை என்று ...	பாகை என்ற
81	19	மத்தியலக் ...	மத்திய
83	13	4 நிமிஷத்திகும் ...	4 நிமிஷத்திறகு
84	23	வித்தியாதத்தின் ...	வித்தியாசத்தின்
90	30	ராசியை சம ...	ராசியை 9 சம
92	4	பாக 20 ...	பாகை 20
94	4	வாக்கியம்ச ...	வாக்கியம்
99	4	குருனுடைய ...	குருவினுடைய
101	19	நாவம்ச ...	நவாம்ச
102	21	இருப்பதாய் ...	இருப்பதால்
102	22	விஷேமாய் ...	விஷேசமாய்
103	13	உபயோகப்படுத்து ...	உபயோகப்படுத்தும்
103	20	சந்திரனுக்கூ ...	சந்திரனுக்கு
104	29	சத்திரன் ...	சந்திரன்
106	28	பூஜஜியமாக ...	பூஜ்ஜியமாக
121	9	திதிமை ...	திதியை
153	34	56 (பாகை) ...	59 (பாகை)

பக்கம்.	வரி	பிழை.	திருத்தம்.
173	11	வாக்கங்களாகிய ...	வர்க்கங்களாகிய
173	12	அகிய ...	ஆகிய
175	25	தளளிவிட ...	தள்ளிவிட
179	6	என் ...	எண்
180	18	சூயன் ...	சூரியன்
180	31	சுபங்கிரகங்களாகவும் ...	சுபக்கிரகங்களாகவும்
181	17	எனறு ...	என்று
181	18	பஞ்சாங்கங்களில் ...	பஞ்சாங்கங்களில்
181	22	மனி ...	மணி
183	3	சுந்திரன் ...	சந்திரன்
184	2	1778-ஸு செப்டம்பர் ...	1798-ஸு செப்டம்பர்
184	5	1779 (வருஷம்) ...	1799 (வருஷம்)
195	7	பதன் சுக்கிரன் ...	புதன் சுக்கிரன்
233	32	கிரகங்ளுக்கூட ...	கிரகங்களுக்குக்கூட
245	20	வாக்கியம் ...	வாக்கியங்
247	16	மனதிலிருப்பதும் ...	மனத்திலிருப்பதும்
247	22	யுதன் ...	புதன்
247	22	சளி ...	சனி
81		தலைப்பு ஜெனன நாழிகை கணித்தல்	தசம மத்தியலக்கினம்
83		ஷை	துவாதச பாவச்சக்கிரம்
87		ஷை	இராசி, நட்சத்திர நவாம்ச திரேகாணஸ்புடம்
21		இரண்டாவது கட்டத்தில் கன்னியிலிருக்குப் -சூ- என்பதை மிதுனத்தில் போடவும்.	

கடவுள் துணை

"ஜாதக கணிதம்"

என்னும்

ஜோதிட கிரக சட்பலம்-ஆயுள் கணிதம்.

(*Hindu Calculations etc.*)

அத்தியாயம். 1

ஜாதகம் என்பதின் விவரம்.

ஜாதகம் என்பது ஏதாகிலும் ஒரு குறித்த காலத்தில் ஆகாயத்தில் அல்லது பாதாளத்தில் கிரகங்கள் இருக்கும் நிலையையும், பாதாளத்தை விட்டு பூமட்டத்திற்கு மேலே கிளம்பும் இராசியையும் காட்டும் ஒரு முகாந்தரம் என்பதாம். கிரகங்கள் வானத்தில் சஞ்சரிக்கும் பாகத்திற்கு இராசிமண்டலம் என்று பெயர். இந்த இராசி மண்டலத்தை 12 சமபாகங்களாகப்பங்கிட வரும் ஒவ்வொரு பாகத்திற்கும் இராசி என்று பெயர். மேற் சொல்லிய 12 சமபாகங்கள் அல்லது இராசிகள் முறையே வரிசையாக மேஷராசி, ரிஷபராசி, மிதுனராசி, கடகராசி, சிம்மராசி, கன்னியாராசி, துலாராசி, விருச்சிகராசி, தனுசுராசி, மகரராசி, கும்பராசி, மீனராசி, என்று சொல்லப்படும். மேற்குத் திக்கிலிருந்து கிழக்குத் திக்காக 23 மணி-56 நிமிஷத்திற்கு ஒரு தரம் பூமி தன்னைத்தானே சுற்றுவதால் வானத்தி

இந்த புத்தகம் பிறருடைய உதவியின்றி ,தானுகவே ஜோதிடங்கற்றுக்கொள்வதற்கும, முந்தியே ஜோதிடம் தெரிந்த ஜோதிடர்களுககும், பிருஹத் ஜாதகம், ஸ்ரீபதி ஜாதக கர்மபத்ததி, பல தீபிகை, என்ற இந்த புத்தகங்களைச்சுலபமாயும் நன்ருயும் அறிந்து இவைகளில் சொல்லியபடி பலன்கள் அறிவதற்கும் மிகவும் உபயோகப்படும்.

துள்ள நட்சத்திரங்களும் சூரியனும் மற்ற கிரகங்களும், கிழக்குத் திக்கிலிருந்து மேற்குத்திக்கில் செல்லுவதாக நமது கண்களுக்குப் புலப்படுகின்றன. இராசி மண்டலமும், வானத்திலிருப்பதால் அதுவும் கிழக்கு திக்கிலிருந்து மேற்கு திக்காகச் சொல்லுவதாகத் தோற்றுகிறது. பாதாளத்திலிருக்கும் இராசிமண்டலத்தின் பாகம் கொஞ்சங் கொஞ்சமாகக் கிழக்கில் உதயமாகி மேற்குத்திக்காக நோக்கிச்சென்று கடைசியாக மேற்கில் அஸ்தமனமாகும். ஒரு குறித்த காலத்தில் இராசிமண்டலத்தில் எந்த பாகம் கிழக்கில் உதயமாகுமோ அந்த பாகத்திற்கு உதயலக்கின மென்றுபெயர். உதாரணமாக இராசிமண்டலத்தின் முதல் பாகமாகிய மேஷராசி ஒரு குறித்த காலத்தில் உதயமாகுமானால் அந்த மேஷராசியே அந்த குறித்த காலத்தில் உதயலக்கினம் என்பதாம். அதாவது அந்த குறித்த காலத்தில் லக்கினம் என்னவென்று யாராகிலும் கேட்டால் மேஷ ராசிதான் லக்கினம் என்று சொல்லவேண்டும். அந்த குறித்த காலம் ஒரு குழந்தை பிறந்த காலமானால் அந்த குழந்தை பிறந்த ஜென்மலக்கினம் மேஷம் என்று சொல்லவேண்டும். அந்த குறித்த காலம் ஒரு பெண் ருதுவான காலமானால், அந்த பெண் ருதுவான ருதுலக்கினம் மேஷம் என்று சொல்லவேண்டும். இவ்விதமாக ஜென்மலக்கினம் அல்லது ருதுலக்கினம் அல்லது பலவிதமான முகூர்த்தங்களின் லக்கினம் அறியவேண்டும். உதயலக்கினம் என்று விவரமாகச் சொல்லாமல் லக்கினம் என்று சொன்னாலுங்கூட உதயலக்கினம் என்று அர்த்தமாகும்.

கிரகங்கள் வானத்தில் சஞ்சரிக்கின்றனவென்று சொன்னோம். அவைகளில் முக்கியமானவை ஒன்பது. அவை சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது எனப்படும். இந்த ஒன்பது கிரகங்களுக்கும் நவக்கிரகங்கள் என்று பெயர். இவைகளில் இராகு, கேது தவிர மற்றவைகள் உருவமும் அளவும் பிரகாசமுமுடையன. ஆகையால் நாம் இவைகளைப் பார்க்கின்றோம். இராகு கேது என்ற இவ்விரண்டு கிரகங்களுக்கு அளவும் உருவமும் பிரகாசமும் இல்லை. ஆகையால் இவைகளை நாம் பார்க்கமுடியாது. இவைகளுக்கு இக்காரணத்தினாலேயே "சாயாக்கிரகம்" என்று பெயர். மேற்சொல்லிய இந்த 9-கிரகங்களும் நமது ஜோதிட சாஸ்திரபுத்தகங்

களில் சொல்லப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மேல் நாட்டு சோதிட சாஸ்திரங்களில் மேற்சொல்லிய நவக்கிரகங்களும் இன்னும் யுரேனஸ், நெப்தியூன் என்று சொல்லப்பட்ட இரண்டு புதிய கிரகங்களும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு புதிய கிரகங்கள் சொற்ப காலத்திற்கு முந்தி கண்டுபிடிக்கப்பட்டதாலும், நமது வெறுங்கண்களுக்குப் புலப்படக்கூடியவைகளாயில்லாததாலும் நமது ஜோதிட சாஸ்திரங்களில் சொல்லப்படாமலிருப்பதாலும், இவைகளைப்பற்றி நாம் கவனிக்க வேண்டிய கவலை இல்லை. மேலும் மேற்சொல்லிய நவக்கிரகங்கள் தவிற, குளிகன் என்ற ஒரு உபக்கிரகத்தையும் தென் இந்தியாவிற் சில ஜோதிட வகுப்பார் உபயோகப்படுத்துகிறார்கள்.

நாம் முந்தி இராசி மண்டலத்தை 12 சமபாகமாகப் பங்கிட வரும் ஒவ்வொரு பாகத்திற்குப் பெயர் இராசி என்று சொன்னோம். இந்த இராசிமண்டலத்தை 27 சமபாகமாகப்பங்கிடவரும் ஒவ்வொரு பாகத்திற்கும் கூடிய மட்டும் அதன் அருகில் இருக்கும் நட்சத்திரத்தின் பெயரைக் கொடுத்திருக்கின்றார்கள். உதாரணமாக அஸ்வனி நட்சத்திரத்திற்கு அருகிலிருக்கும் பாகத்திற்கு அஸ்வனி என்றும், பரணி நட்சத்திரத்திற்கு அருகிலிருக்கும் பாகத்திற்குப் பரணி என்றும் சொல்லப்படும். இராசிமண்டலத்தில் 12 இராசிகளிருப்பதாலும், 27 நட்சத்திரங்கள் இருப்பதாலும், 12 இராசிகளுள் 27 நட்சத்திரங்களும், அல்லது 27 நட்சத்திரங்களுள் 12 இராசிகளும் அடங்கும் என்று ஏற்படுகின்றது 27யை 12-ஆல் வகுக்க $2\frac{1}{4}$ வரும். ஆகையால் ஒரு இராசியில் $2\frac{1}{4}$ நட்சத்திரங்கள் அடங்கி இருக்கின்றனவென்றும் அல்லது $2\frac{1}{4}$ நட்சத்திரங்களில் ஒருஇராசி அடங்கி இருக்கின்றதென்றும் ஏற்படும். இராசிமண்டலத்தை 360 சமபாகங்களாகப் பங்கிட வரும் ஒவ்வொரு பாகத்திற்கும் பாகை என்று பெயர். ஒரு பாகையை 60 சமபாகமாகப் பங்கிட வரும் ஒவ்வொரு பாகத்திற்கும் கலை என்று பெயர். இராசிமண்டலத்தில் 12 இராசிகளும் அல்லது 360 பாகைகளும் இருப்பதால் ஒரு இராசியில் 360யை 12 ஆல் வகுக்க வருகின்ற 30-பாகைகள் இருக்கின்றன. மறுபடியும் இராசிமண்டலத்தில் 360 பாகைகளும் அல்லது 27 நட்சத்திரங்களும் இருப்பதால், ஒரு நட்சத்திரத்தில் 360யை

27 ஆல் வகுக்க வருகின்ற 13 பாகையும் 20 கலையும் இருக்கின்றன. ஒவ்வொரு நட்சத்திரத்தையும் 4-சமபாகமாகப் பங்கிட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு பாகத்திற்கும் நட்சத்திரப்பாதம் என்று பெயர். ஒரு இராசிமண்டலத்தில் 27 நட்சத்திரங்கள் இருப்பதாலும் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் 4-பாதங்களிருப்பதாலும், இராசிமண்டலத்தில் மொத்தத்தில் 27யை 4ஆல் பெருக்க வருகின்ற 108நட்சத்திரப்பாதங்கள் இருக்கின்றன. 4 பாதங்கள் கொண்ட ஒரு நட்சத்திரத்தில் 13 பாகை 20 கலை இருப்பதால், ஒரு பாதத்தில் 13 பாகை—20 கலையை 4-ஆல் வகுக்க வருகின்ற 3 பாகை—20 கலை இருக்கின்றன என்று ஏற்படும். மேற்சொல்லிய இராசிகளும். நட்சத்திரங்களும், நட்சத்திரப்பாதங்களும், அவைகளுள் ஒன்றுக்கொன்றுள்ள சம்மந்தங்களும் 11-வது வாக்கியத்தில் (டேபிலில்) காட்டப்பட்டுள்ளன. இந்த வாக்கியம் ஜாதகம் கணிப்பதற்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

ஜாதகம் எழுத வேண்டிய முறை.

இனிமேல் ஜாதகம் கணிக்க வேண்டிய வழியைப்பற்றி பேசுவோம். ஜாதகம் எவ்வளவு துல்லியமாகக்கணிக்கிறோமோ அவ்வளவும் நல்லது. இப்படியிருக்க அனேக ஜோதிடர்கள் தாங்கள் கணிக்கும் ஜாதகத்தில் பல பிழைகளைச்செய்கின்றார்கள். இப்பிழைகள் கீழே சொல்லியனவாகும்:—(1) குழந்தை ஜெனனமாகுந்தினத்தில் சூரிய உதயம் அல்லது அஸ்தமனம் எப்போது நேரிட்டதென்பதைக் கவனிக்கின்றதேயில்லை. சூரியன் எப்போதும் எல்லாவிடங்களிலும் காலை 6-மணிக்கு உதயமாகின்றான் அல்லது மாலை 6-மணிக்கு அஸ்தமனமாகின்றான் என்று எண்ணி காலை அல்லது மாலை 6-மணியிலிருந்து ஜெனன நாழிகையைக் கணக்கிட ஆரம்பிக்கின்றார்கள். சூரிய உதய காலமும், அஸ்தமன காலமும் நாளுக்கு நாள் வித்தியாசப்படுவதாலும், இடத்துக்கு இடம் வித்தியாசப்படுவதாலும் குழந்தை ஜெனனமான இடத்தில் ஜெனனதினத்தில் சூரிய உதய காலத்தை அல்லது அஸ்தமன காலத்தை முதலில் அறிய வேண்டியது.

(2) இலக்கினம் கணிப்பதில் மேஷாதி இராசிமான சங்கியையை எல்லாவிடங்களுக்கும் ஒரேவிதமான தென்று கருதி அதை உபயோ

கப்படுத்துகின்றார்கள். உதாரணமாக மேஷம் மீனம் $4\frac{1}{4}$ நாழிகை, ரிஷபம், கும்பம் $4\frac{3}{4}$ நாழிகை, மிதுனம், மகரம் $5\frac{1}{4}$ நாழிகை, கடகம், தனுசு $5\frac{1}{2}$ நாழிகை, சிம்மம், விருச்சிகம் $5\frac{1}{4}$ நாழிகை, கன்னி துலாம் 5 நாழிகை என்று எண்ணி அனேக ஜோதிடர்கள் இந்த நாழிகைகளை உபயோகப்படுத்துகின்றார்கள். இது சுத்த பிசகு. இப்போது சொல்லிய நாழிகைகளெல்லாம் தோராயமானவைகளே தவிற துல்லிபமானவைகள் அல்ல. மேலும் ஒரே இராசிமான சங்கியை எல்லாவிடங்களுக்கும் பொருந்தாது. அதாவது மேஷம் ஒரு இடத்திற்கு $4\frac{1}{4}$ நாழிகையானல் அது அந்த இடத்திற்கு வடக்கு தெற்குகளிலுள்ள எல்லாவிடங்களுக்கும் பொருந்தாது நமது "ஆனந்த போதினி பஞ்சாங்கத்தில்" கொடுத்துள்ள நிராயன இராசிமான சங்கியைப்பார்த்தால் இராசிமான சங்கியை இடத்திற்குத் தகுந்தவாறு வித்தியாசப்படுகின்றதென்று புலப்படும். மேலும் மேஷம் மீனம் $4\frac{1}{4}$, ரிஷபம் கும்பம் $4\frac{3}{4}$ என்று வலது பக்கமாக மேஷம் முதல் 6 இராசிகளுக்கும், இடது பக்கமாக மீனம் முதல் 6 இராசிகளுக்கும் ஒரே நாழிகையைக்கொடுத்துள்ள இராசிமான சங்கியை சாயனஇராசிமான சங்கியை ஆகும். சாயனம் என்பது அயனும்சம் சேர்த்து கணித்த சங்கியை என்பதாம். நமது பஞ்சாங்கங்கள் எல்லாம் நிராயன பஞ்சங்களாகும். ஜோதிடமும் நிராயனம் பிரகாரம் பார்த்து வருகிறார்கள். நிராயனம் என்பது அயனும்சம் இல்லாமல் என்பதாம், அப்படியிருக்க நமது ஜோதிடத்திற்குச்சாயன இராசிமான சங்கியை உபயோகித்து அதற்குவேண்டிய கிரிகைகளைச்செய்யாமல் சும்மாவிட்டுவிடுவது பிசகு. நிராயன இராசிமான சங்கியைக்கொண்டு உதயலக்கினம் கணிப்பதைவிட சாயன இராசிமான சங்கியைக்கொண்டு உதயலக்கினம் கணித்து அதற்கு வேண்டிய அயனும்ச கிரியை செய்வது மிகவும் துல்லிபம் என்று அனேகருடைய கொள்கை. இந்த காரணத்தைக்கொண்டுதான் நமது "ஆனந்தபோதினி பஞ்சாங்கத்தில்" சாயன இராசிமான சங்கியையும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

(3) சரியான பஞ்சாங்கங்களை உபயோகப்படுத்துகிறதில்லை. வானசாஸ்திரம் மற்ற எல்லா சாஸ்திரங்களைப்போலவே நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டு வரப்பட்ட சாஸ்திரம். அப்படியிருக்க அனேக வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட வான சாஸ்திரப்புத்த

கங்களை அனுசரித்து கணிக்கப்படும் பஞ்சாங்கங்களைக்கொண்டு ஜாதகம் கணிப்பதால் கிரக சாரங்களில் பிழைகள் ஏற்படுகின்றன. ஏனென்றால் அந்த வான சாஸ்திரங்கள் தற்காலத்திற்குச்சரியாக இல்லை.

ஜாதகம் கணிக்க ஒரு உதாரணம்.

மேற்சொல்லிய பிழைகளில்லாமல் ஜாதகம் கணிக்கும் முறையை ஒரு உதாரணத்தால் விளக்கிக்காட்டுவது விசேஷமென்று தோற்றுவதால், உதாரணமாக ஒரு ஜெனன ஜாதகத்தைக்கணிப்போம்.

வர்த்தமான சாலிவாகன சகாப்தம் 1792வது வருஷம் கலியுகாதி 4971-வது வருஷமாகிய சுக்கிலஹு புரட்டாசிமீ 18உக்குச் சரியான இங்கிலீஷ் 1869-வது வருஷம் அக்டோபர்மீ 2உ சனிக்கிழமை பம்பாய் இராஜதானியிலுள்ள கத்தியவார் என்றநகரத்திற்கு அடுத்த போர்பந்தர் என்ற ஊரில் காலை சூரிய உதயாதி நாழிகை 3 விநாடி 12½க்குக் கெடியாரரீதியாய் காலை மணி 7-நிமிஷம் 13க்கு ஜெனித்த ஜெயசீலர் என்ற ஒரு புண்ணிய மகாத்மாவின் ஜாதகத்தைக்கணிப்போம்,

(1) ஜெனன நாழிகை கணிக்க:—ஜெனனமான தினத்தில் சூரிய உதையம், காலை மணி 5-நிமிஷம் 56க்கும் அஸ்தமனம் மாலை 5மணி-44 நிமிஷத்திற்கும் நேர்ந்தது. ஜெனனம் காலை 7மணி-13 நிமிஷத்திற்கு நேர்ந்ததால் 5வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியிற் சொல்லிய பிரகாரம் கணிக்க ஜெனனம் சூரிய உதயத்திலிருந்து நாழிகை 3-விநாடி $12\frac{1}{2}$ என்று ஏற்படுகின்றது.

(2) நவக்கிரகங்களின் ஸ்புடம் கணிக்க:—பஞ்சாங்கங்களில் அல்லது புத்தகங்களில் கிரகஸ்புடம் 10 நாளுக்கு ஒருதரம் அல்லது, இரண்டு தினங்களுக்கொருதரம் அல்லது தினந்தோறும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதன் உதவியால் நமக்குத்தேவையான காலத்திற்குக் கிரகஸ்புடஞ்செய்யவேண்டியது. (ஆனந்தபோதினி பஞ்சாங்கத்தில் கிரகஸ்புடம் கொடுக்கப்பட்டிருக்கின்றதுஎன்பதைக்கவனிக்கவும்). 1869வது வருஷம் அக்டோபர்மீ 1உ பகல் 4 மணி-36 நிமிஷத்திற்கும், 2உ பகல் 4 மணி-36 நிமிஷத்திற்கும் அடியிற்கண்டபடி கிரகங்களின் ஸ்புடங்கள் கொடுக்கப்பட்டிருப்ப

தாக வைத்துக்கொண்டு நமக்கு வேண்டிய காலமாகிய 1869-வது வருஷம் அக்டோபர்மீ 2உ காலே 7 மணி-13 நிமிஷத்திற்குக் கிரக ஸ்புடங்களைக் கணிப்போம்.

கிரகங்களின் பெயர்	1உ பகல் 4மணி 36 நிமிஷத்திற்கு ஸ்புடம்	2உ பகல் 4மணி 36 நிமிஷத்திற்கு ஸ்புடம்
	பாகை—கலே	பாகை—கலே
சூரியன்	166—26	167—25
சந்திரன	109—24	123—47
செவ்வாய்	206—4	206—46
புதன்	191—29	192—7
குரு	28—19	28—15
சுக்கிரன்	203—47	205—0
சனி	230—25	230—29
இராகு	102—19	102—16
கேது	282—19	282—16

இவ்விதமாகக்கிரகங்களின் ஸ்புடங்கள் இருந்தால் 6வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியிற் சொல்லியபடி கணிக்க, 2உ காலே 7 மணி-13 நிமிஷத்திற்குக் கிரகஸ்புடங்கள் அடியிற் கண்டபடி ஆகும்.

	பாகை—கலே		பாகை—கலே
சூரியன்	167—2	சுக்கிரன்	204—32
சந்திரன்	118—10	சனி	230—27
செவ்வாய்	206—30	இராகு	102—17
புதன்	191—52	கேது	282—17
குரு	28—17 (வக்ரி)		

(3) **ஜெனன காலத்தில் திதி அறிய:**—பஞ்சாங்கத்தைப் பார்த்து நமக்கு தேவையான ஜெனன காலத்திலுள்ள திதியை அறியலாம்; இது ஒருவழி. இன்னம் ஒரு வழியுண்டு. அதாவது சூரிய சந்திராளுடைய ஸ்புடத்திலிருந்து அறியலாம். ஜெனன காலத்தில் சந்திர ஸ்புடம் பாகை 118-கலே 10 என்றும் சூரியனுடைய ஸ்புடம் பாகை 167-கலே 2 என்றும் முன்னமே 2-வது அயிட்டத்தில் கணித்திருப்

பதால் 8-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியிற் சொல்லியபடி கணிக்க ஜெனன காலத்தில் தேய்பிறை ஏகாதசி திதி என்று ஏற்படும்.

(4) **ஜெனன காலத்தில் நட்சத்திரம் அறிய**:—ஜெனன காலத்தில் சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118-கலை 10 என்று முன்னமே 2-வது அயிட்டத்தில் கணித்திருக்கின்றது பிறகு 11-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தில் 2-வது அயிட்டம் முதல் 6-வது அயிட்டம் வரையிலும் சொல்லியுள்ளதைப் படிக்க சந்திரன் ஆயில்ய நட்சத்திரம் 4-வது பாகையில் இருப்பதாக ஏற்படும்.

(5) **ஜெனன காலதேசையும் அதன் இருப்பும் கணிக்க**:—ஜெனனகாலத்தில் சந்திரன் ஸ்புடம் பாகை 118-கலை 10 என்றும், சந்திரன் ஆயிலியம் 4-ம் பாதத்தில் இருக்கின்றதென்றும் முன்னமே அறிந்தோம். பிறகு 10-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் வழியிற் சொல்லியபடி கணிக்க ஜெனன காலத்தில் புதன் தெசையில் செற்பச்செல்லுபோய் இருப்பு நின்றது வருஷம் 2-மீ 4-நாள் 1—நாழிகை 30 என்று ஆகும்.

(6) **ஜெனன காலத்தில் உதய இலக்கினம் (அதாவது இலக்கினம் கணிக்க)**:—முதலில் ஜெனனமான தினத்தில் சூரிய உதயகாலத்தில் சூரியனுடைய ஸ்புடத்தைக் கணிக்கவேண்டியது. இதைக்கணித்தால் ஜெனனதினத்தில் சூரிய உதய வேளையில் உதய இலக்கினமும் அந்த இலக்கினத்தில் எவ்வளவு பாகை கலை உதயமாகி இருக்கின்றதென்றும் இன்னம் எவ்வளவு பாகை கலை உதயமாகவேண்டும் என்றும் இன்னம் உதையமாக வேண்டிய பாகை-கலை உதயமாவதற்கு எவ்வளவு நாழி விநாடி செல்லவேண்டுமென்று ஏற்படும். இந்த நாழிகை விநாடியைத்தான் சில பஞ்சாங்கங்களில் ஒவ்வொரு தினமும் இராசி இருப்பு நாழிகை என்று போடுகின்றார்கள். ஆனந்த போதினி பஞ்சாங்கம் 32-வது கலத்தைப் பார்த்தால் இராசி இருப்பு என்று ஒவ்வொரு தேதிக்கும் எதிரில் போட்டிருப்பதைக் கவனிக்கலாம். ஜெனனதினத்தில் சூரிய உதயகாலமாகிய மணி 5-நிமிஷம் 56க்குச் சூரிய ஸ்புடம் கணிக்க:—1869வது௵ அக்டோபர்மீ 1உ பகல் 4மணி 36 நிமிஷத்திற்குச் சூரிய ஸ்புடம் பாகை 166-கலை 26 ஆகும். 1869வது௵ அக்டோபர்மீ

2உ பகல் 4மணி-36 நிமிஷத்திற்குச்சூரிய ஸ்புடம் பாகை 167-கலை 25 ஆகும். ஆகையால் சூரியனுடைய தினகதி, பாகை 167-கலை 25ல் இருந்து பாகை 166-கலை 26ஐக்கழிக்க வருகின்ற பாகை 0-கலை 59 ஆகும். சூரிய ஸ்புடம் கொடுத்துள்ள 1உ பகல் 4மணி-36 நிமிஷத்திலிருந்து சூரிய உதய காலமாகிய காலைமணி 5-நிமிஷம் 56 வரையிலும் இடையில் செல்லான காலம் 13 மணி-20 நிமிஷம் ஆகும். இப்போது நமக்குத் தினகதியும், 1உ, 2உ இவைகளில் சூரிய ஸ்புடமும், சூரிய ஸ்புடம் கொடுத்துள்ள காலத்திலிருந்து சூரிய உதயம் வரையிலுமுள்ள காலமாகிய 13 மணி-20 நிமிஷமும் கொடுத்திருப்பதால் 6-வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தில் சொல்லிய பிரகாரம் கணிக்க சூரிய உதய வேளையில் சூரியனுடைய ஸ்புடம் பாகை 166-கலை 59 என்று ஏற்படும். 12வது வாக்கியத்தைப் பார்த்தால் சூரியன் கன்னியாராசியில் இருப்பதாகவும் இன்னம் கன்னியாராசியில் பாகை 180-கலை 0-த்திலிருந்து பாகை 166-கலை 59ஐக் கழிக்க வருகின்ற 13 பாகை-1 கலை செல்லவேண்டும் என்றும் ஏற்படும் அதாவது சூரிய உதய காலத்தில் கன்னியா ராசி உதயம் என்றும் இன்னம் கன்னியாராசியில் உதயமான பாகம் போக உதயமாக வேண்டியது பாகை 13-கலை 1 என்று ஏற்படும். இதை ஒருஇடத்தில் எழுதிவைத்துக்கொள்ளவும். பஞ்சாங்கங்களில் நிராயன இராசிமான சங்கியைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதாவது ஒவ்வொரு ஊரிலும் மேஷாதி முதலிய 12 இராசிகளும் உதயமாகும் காலத்தைக் கொடுக்கப்பட்டிருக்கும். உதாரணமாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஜெயசீலர் பிறந்த ஊர் போர்பந்தர் ஆனதாலும், அந்த ஊரின் அட்க்ஷாம்சம் $21\frac{1}{2}$ பாகையானதாலும் அந்த ஊரில் மேஷாதி முதலிய 12 இராசிகளும் உதயமாகும் காலம் அடியிற்கண்டபடி ஆகும்.

இராசியின் பெயர்	நிராயன இராசி மானம் நாழிகை—விநாடி	இராசியின் பெயர்	நிராயன இராசி மானம் நாழிகை—விநாடி
மேஷம்	... 4—12	துலாம்	... 5—32
ரிஷபம்	... 4—54	விருச்சிகம்	... 5—39
மிதுனம்	... 5—32	தனுசு	... 5—16
கடகம்	... 5—37	மகரம்	... 4—31
சிம்மம்	... 5—27	கும்பம்	... 3—57
கன்னி	... 5—23	மீனம்	... 3—50

மொத்தம் நாழி 59—விநாடி. 50 மேலே கொடுத்துள்ள 12 இராசிமான சங்கியையில் பார்த்தால் சூரியன் இருக்கின்ற கன்னியா ராசி முழுதும் உதயமாக நாழி 5—விநாடி 23 ஆகின்றது. சூரிய உதய காலத்தில் கன்னியில் இன்னம் உதயமாக வேண்டியது பாகை 13-கலை 1 முன்னமே கணித்து வைத்திருக்கின்றோம். 30பாகைகள் அடங்கிய கன்னியாராசி உதயமாக நாழிகை 5—விநாடி 23 ஆகுமென்றால் பாகை 13-கலை 1 உதயமாக எவ்வளவு நாழிகை விநாடி செல்லும் என்பதை அறிய வேண்டியது. இதைப்பின் வருமாறு அறியவும். கன்னியாராசியின் சங்கியையாகிய நாழிகை 5-விநாடி 23யை விநாடியாகமாற்ற 323விநாடி வரும். பாகை 13-கலை 1யை கலையாக மாற்ற781 கலைவரும். ஒரு ராசியின் பிரமாணமாகிய 30 பாகையைக் கலையாக மாற்ற 1800 கலைவரும். இன்னம் கன்னியாராசியில் உதயமாக வேண்டிய பாகமாகிய 781ஐ இராசிமான மாகிய 323ஆல் பெருக்கி ஒரு இராசியின் பிரமானமாகிய 1800 ஆல் வகுக்க வருகின்ற ஈவு விநாடி ஆகும். இப்படிப்பெருக்கி வகுக்க ஈவு 140 விநாடிவரும். இதை நாழிகையாக மாற்ற 2 நாழிகை-20 விநாடி ஆகும். ஆகையால் சூரிய உதையகாலத்தில் கன்னியாராசியில் இன்னம் உதயமாக வேண்டிய பாகமாகிய பாகை13—கலை 1 உதயமாக நாழிகை 2-விநாடி 20 ஆகும். இந்த 2 நாழிகை-20 விநாடியைத்தான் ஜெனனமானதினத்தில் கன்னியாராசி இருப்பு என்று சொல்லுகிறது வழக்கம். கன்னியாராசி இருப்பு நாழிகை 2-விநாடி 20 ஆகும். அதாவது கன்னியாராசி முடியுங்காலம் சூரிய உதயத்திலிருந்து. நாழிகை 2-விநாடி 20 ஆகும். உடனே அடுத்தஇராசியாகிய துலாராசி உதயமாகி அதற்குரிய இராசிமானமாகிய நாழிகை 5—விநாடி 32 வரையிலும் இருக்கின்றது. அதாவது சூரிய உதயாதி நாழிலக 2-விநாடி 20க்கு துலாலக்கினம் ஆரம்பித்து இந்த 2 நாழி-20 விநாடியுடன் துலாராசியின் இராசிமானமாகிய நாழிகை5— விநாடி 32ஐக் கூட்டவருகின்ற 7 நாழிகை-52 விநாடியில் முடிவு பெருகின்றது. நமக்கு வேண்டிய ஜெனன காலமாகிய நாழிகை 3—விநாடி $12\frac{1}{2}$, நாழிகை 2-விநாடி 20க்கு மேற்பட்டு நாழிகை 7—விநாடி 52க்குள் இருப்பதால் ஜெனன காலத்தில் துலாலக்கினம் என்று ஏற்படுகின்றது. மேலும் துலாலக்கினம் 2 நாழிகை-20 விநாடிக்கு ஆரம்பிப்பதால் ஜெனன காலமாகிய

நாழிகை 3-விநாடி $12\frac{1}{2}$யில் இருந்து நாழிகை 2-விநாடி 20யைக்கழிக்கவருகின்ற 0 நாழிகை–$52\frac{1}{2}$ விநாடிதான் துலாலக்கினத்தில் செல்லான நாழிகை விநாடியாகும். இப்போது துலாலக்கினத்தில் எவ்வளவு பாகம் அதாவது எவ்வளவு பாகை கலை செல்லானதுஎன்பதைக் கணிப்போம். துலாலக்கினத்தில் செல்லான நாழிகை 0–விநாடி $52\frac{1}{2}$யை விநாடியாக மாற்ற $52\frac{1}{2}$ விநாடி வரும். துலா ராசியின் இராசிமானமாகிய நாழிகை 5-விநாடி 32யை விநாடியாக மாற்ற 332 விநாடி வரும். துலாராசியின் பிரமானமாகிய 30 பாகையைக் கலையாக மாற்ற 1800 கலை வரும். இந்த இராசிபிரமானமாகிய 1800 யை. இராசியில் செல்லான விநாடியாகிய $52\frac{1}{2}$ ஆல் பெருக்கி துலாராசியின் இராசிமானமாகிய 332 ஆல் வகுக்க வருகின்ற ஈவு கலை ஆகும். இப்படிப்பெருக்கி வகுக்க ஈவு 285 கலை வரும். இதைப் பாகையாக்க 4 பாகை–45 கலை வரும். ஆகையால் ஜெனன காலத்தில் துலா ராசியில் செல்லானது பாகை 4–கலை 45 ஆகும். 12வது வாக்கியத்தைப் பார்த்தால் துலாராசியின் ஆரம்ப ஸ்புடம் பாகை 180-கலை 0–ஆகும். இத்துடன் மேலே வந்த பாகை 4–45 கலையைக்கூட்ட வருகின்ற 184 பாகை–45 கலையே ஜெனன காலத்தில் உதயலக்கினத்தின் ஸ்புடமாகும். இதைத்தான் இலக்கின ஸ்புடம் என்று சொல்லுகிறது வழக்கம். ஆகையால் இலக்கின ஸ்புடம் பாகை 184–கலை 45 என்பதாம்.

மேலே சொல்லியபிரகாரம் இலக்கினஸ்புடங்கணிப்பது ஒருவழியாகும். இன்னொருவழி இருக்கின்றது. அது மேலேசொல்லிய வழியைவிட கொஞ்சந் துல்லிபமானது. இந்தவழியில் சாயன இராசிமான சங்கியை உபயோகித்து இலக்கின ஸ்புடத்தைச் சாயன ரீதியாய்க்கணித்து அதிலிருந்து அயனம்ச ஸ்புடத்தைக் கழித்து நமக்குத் தேவையான நிராயனலக்கின ஸ்புடத்தை அடைவது. (முந்தி சொல்லிய "ஜாதகம் எழுதவேண்டியமுறை என்பதை" இங்கு ஒருமுறை வாசிக்கவும்.)

இப்போது சாயனரீதியாய் இலக்கின ஸ்புடங்கணிப்போம். ஜெனனதினத்தில் சூரிய உதய வேளையில் சூரியனுடைய ஸ்புடம் 166 பாகை-59 கலை என்று முந்தி கணித்தோம். இந்தஸ்புடம் நிராயனஸ்புடமாகும். இத்துடன் 43 வது வாக்கியத்தில் 1869ம் வரு

ஷத்திற்குக்கொடுத்துள்ள அயனும்ச ஸ்புடமாகிய 21 பாகை-54கலையைக்கூட்ட 188 பாகை-53-கலைவரும். இது சாயன ஸ்புடமாகும். அதாவது சூரியஉதய வேளையில் சூரியனுடைய சாயனஸ்புடம் 188 பாகை-53 கலை ஆகும். ஆகையால் 12வது வாக்கியத்தைப் பார்த்தால் சூரியன் சாயன துலாராசியில் 8 பாகை-53 கலையில் இருப்பதாக ஏற்படும். ஆகையால் சூரியஉதயவேளையில் சாயன துலா ராசியில் 8 பாகை-53 கலை உதயமாகி இன்னம் அதில் 21 பாகை-7 கலை உதயமாக வேண்டியதாக இருக்கின்றது. ஜெயசீலர் பிறந்தவிடம் போர்பந்தர் ஆனபடியால் அவ்வூருக்குச்சாயன இராசி மான சங்கியைஅடியிற்கண்டபடி ஆகும்,

இராசியின் பெயர்	சாயன இராசி மானம். நாழி—விநாடி	இராசியின் பெயர்	சாயன இராசி மானம். நாழி—விநாடி
மேஷம்	3—50	துலாம்	5—24
ரிஷபம்	4—18	விருச்சிகம்	5—37
மிதுனம்	5— 7	தனுசு	5—39
கடகம்	5—39	மகரம்	5— 7
சிம்மம்	5—37	கும்பம்	4—18
கன்னி	5—24	மீனம்	3—50

மொத்தம் நாழிகை 59-50 விநாடி

மேலே கொடுத்துள்ள 12 இராசிமான சங்கியையில் பார்த்தால் சூரியன் இருக்கின்ற சாயன துலாராசி முழுவதும் உதயமாக நாழிகை 5-24 விநாடி ஆகின்றது. சூரியஉதய காலத்தில் சாயன துலாராசியில் இன்னம் உதயமாக வேண்டியது 21 பாகை-7 கலை ஆகும். 30 பாகைகள் அடங்கிய சாயன துலாராசி உதயமாக 5 நாழிகை-24 விநாடி ஆகும் என்றால் 21 பாகை-7 கலை உதயமாக இன்னும் எவ்வளவு நாழி விநாடி செல்லும் என்பதை அறியவேண்டியது. இதைப்பின் வருமாறு அறியவும். சாயன துலாராசியின் சங்கியையாகிய 5 நாழி-24 விநாடியை விநாடியாக மாற்ற 324 விநாடிவரும். 21 பாகை-7 கலையைக் கலையாகமாற்ற 1267 கலைவரும். ஒருராசியின் பிரமானமாகிய 30 பாகையைக்கலையாக மாற்ற 1800 கலைவரும். இன்னமீ சாயன

துலாராசியில் உதயமாகவேண்டிய பாகமாகிய 1267ஐ இராசிமானமாகிய 324ஆல் பெருக்கி இராசிபிரமானமாகிய 1800ஆல் வகுக்க வருகின்ற ஈவு விநாடியாகும். இப்படிப் பெருக்கி வகுக்க ஈவு 228 ஆகும். இதை நாழிகையாக்க 3 நாழிகை 48 விநாடி வரும். ஆகையால் சாயன துலாராசி முழுவதும் உதயமாக இன்னம் நாழி 3-48 விநாடி செல்லவேண்டும் என்பதாம் அதாவது சாயன துலாராசி சூரிய உதயத்திலிருந்து 3 நாழிகை-48 விநாடியில் முடிகிறது என்பதாம் ஆகையால் ஜெயசீலரின் ஜெனன நாழிகை 3-12½ விநாடியானதால் ஜெனனமாகும்போது ஜெனன லக்கினம் சாயன துலாராசி என்று அறியவும். இப்போது ஜெனனமான தினத்தில் சூரிய உதயத்திலிருந்து ஜெனன நாழிகை 3-12½ விநாடியில் சாயன துலாராசியில் எவ்வளவு உதயம் என்பதை அறியலாம் 3 நாழிகை-12½ விநாடியை விநாடியாக மாற்ற 192½ விநாடி வரும். இராசிமானமாகிய நாழிகை 5-24 விநாடியை விநாடியாகமாற்ற 324 விநாடிவரும் இராசிப்பிரமானமாகிய 30 பாகையை கலையாக்க 1800 கலைவரும். நமக்குத் தேவையான விநாடியான 192½யை இராசிப்பிரமானமாகிய 1800ஆல் பெருக்கி இராசிமானமாகிய 324ஆல் வகுக்க வருகின்ற ஈவு கலையாகும். இப்படிப் பெருக்கி வகுக்க ஈவு 1069 வரும். இதைப்பாகையாக்க 17 பாகை-49 கலைவரும். ஆகையால் சூரியஉதயத்திலிருந்து ஜெனனகாலம் வரையில் சாயன துலாராசியில் 17 பாகை-49 கலைஉதயம் என்று ஏற்படும். சூரிய உதயவேளையில் சாயன சூரியஸ்புடம் 188 பாகை-53 கலை என்று கணித்து வைத்திருக்கின்றோம் இந்த 188 பாகை-53 கலையுடன் 17 பாகை-49 கலையைக்கூட்ட 206 பாகை-42 கலை ஆகும். இந்த 206 பாகை-42 கலைதான் சாயன ஜென்மலக்கினம் அல்லது சாயன இலக்கினமாகும். ஆகையால் சாயன ரீதியாய் இலக்கினஸ்புடம் பாகை 206-42 கலை ஆகும். இதிலிருந்து அவ்வருஷத்திற்குறிய அயனும்சமாகிய 21 பாகை-54 கலையைக்கழிக்க வருகின்ற 184 பாகை-48 கலையே நிராயனலக்கினஸ்புடமாகும் ஆகையால் நமக்குக் கடைசியாய்த் தேவையான இலக்கினஸ்புடம் 184 பாகை-48 கலைஆகும். 12வது வாக்கியத்தைப்பார்த்தால் ஜென்மலக்கினம் கன்னியாராசி என்றும் அதில் 4 பாகை-48 கலை செல்லானது என்றும் ஏற்படும்.

இலக்கினம் கணிக்கவேண்டிய முறையை ஜெயசீலரின் ஜெனன வேளையில் நேரிட்ட இலக்கினத்தைக் கணிக்கும் உதாரணத்தால் இதுவரையிலும் விளக்கிக் காட்டினோம். இந்தமுறையை இன்னொரு உதாரணத்தால் விளக்கிக்காட்டுவோம். வர்த்தமான கலியுகாதி 5029 பிரபவஸூ சித்திரைமீ 2ந்தேதிக்குச்சரியான இங்கிலீஷ் 1927ஸூ ஏப்ரல்மீ 14ந்தேதி வியாழக்கிழமை சூரிய உதயாதி நாழிகை 37-விநாடி 19க்கு ஒரு குழந்தை சென்னையில் ஜெனனமானால் அதனுடைய ஜென்ம இலக்கினம் கணிப்போம். 2ந்தேதி சூரிய உதயங் கணிக்க. பிரபவஸூத்திய ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கத்தில் 10-வது பக்கத்தைப் பார்த்தால் சித்திரைமீ 1ந்தேதியில் சூரிய உதயம் காலை 6 மணி-1 நிமிஷத்தில் நேரிட்டது என்றும் 11-ந்தேதி காலை 5மணி-56 நிமிஷத்தில் நேரிட்டதென்றும் ஏற்படும். ஆகையால் சூரிய உதயத்தில் வித்தியாசம் 6-1ல் 5–56ஐக் கழிக்க 5 நிமிஷம் வரும். இந்த 5 நிமிஷ வித்தியாசம் 10 தினத்தில் நேரிடுகின்றது. ஆகையால் தினம் 1-க்கு வித்தியாசம் $\frac{1}{2}$ நிமிஷம் ஆகும். நமக்குவேண்டிய தினமாகிய 2-தேதி 1ந்தேதியிலிருந்து ஒருதினமானதால் இந்த ஒரு தினத்திற்குச் சூரிய உதயத்தில் வித்தியாசம் ½ நிமிஷம் ஆகும். சூரிய உதயம் 1-ந்தேதிக்குமேல் 11-ந்தேதி வரையிலும் பார்த்தால் நாளுக்கு நாள் முந்தியாக நிகழ்வதால் சூரிய உதயம் 2ந்தேதியில் 1-ந்தேதியை விட ½ நிமிஷம் முந்தி நேரட வேண்டும். அதாவது 2-ந்தேதி சூரிய உதயம் 6மணி-$\frac{1}{2}$ நிமிஷத்தில் நேரிட்டது என்று ஏற்படும்.

(2) பிறகு சூரிய உதய வேளையில் சூரியனுடைய சாயன ஸ்புடம் கணிக்க வேண்டியது இதைப் பின்வருமாறு கணிக்கவும். பிரபவஸூத்திய ஆனந்த போதினி பஞ்சாங்கத்தில் 42வது பக்கத்தில் நவக்கிரகஸ்புடத்தில் சித்திரைமீ 1ந்தேதிக்கு எதிரில் சூரியனுடைய கலத்தில் பாகை 0—21 கலை போட்டிருக்கின்றது. அதாவது 1ந்தேதி விடியற்காலை (அதாவது பொழுது விடிந்தால் 2ந்தேதி) 5மணி-30 நிமிஷத்தில் சூரியனுடைய ஸ்படும்பாகை 0-21 கலை ஆகும் என்பதாம். இந்த மணி 5-நிமிஷம் 30ல் இருந்து கணக்கிட சூரிய உதய வேளையாகிய மணி 6—$\frac{1}{2}$ நிமிஷப் என்பது மணி 5-நிமிஷம் 30ல் இருந்து 30$\frac{1}{2}$ நிமிஷ நேரமாகும். மேலும் 2-ந்தேதியின் ஸ்புடமாகிய

1 பாகை-20 கலையிலிருந்து 1ந் தேதியின் ஸ்புடமாகிய பாகை 0-21 கலையைக் கழிக்க வருகின்ற பாகை 0—59 கலையே சூரியனுடைய தின கதியாகும். (தினகதி என்றால் என்ன என்பதைப்பற்றி 6வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதத்தைப்படித்தால் தெரிய வரும்) இப்போது நமக்கு 1-ந்தேதியும் 2-ந்தேதியும் காலை 5மணி-30 நிமிஷத்திற்குச் சூரிய ஸ்புடமும், சூரியனுடைய தினகதியும், தெரிந்திருப்பதால் சூரிய உதய வேளையாகிய 6மணி-½ நிமிஷத்தில் சூரியனுடைய ஸ்புடத்தை 6வது வாக்கியத்தை உபயோகிக்கும் விதத்தில் சொல்லிய பிரகாரம் கணிக்கவேண்டியது. இப்படிக்கணிக்க சூரிய உதய வேளையில் சூரிய ஸ்புடம் 0 பாகை-22 கலை ஆகும். இது நிராயன ஸ்புடமாகும். பிரபவஞூ்த்திய ஆனந்தபோதினி பஞ்சாங்கம் 15-வது பக்கத்தின் தலைப்பில் அயனஸ்புடம் பாகை 22–42–23 என்று போட்டிருக்கின்றது. அதாவது இவ்வருஷத்தில் அயன ஸ்புடம் பாகை 22-கலை 42-விகலை 23 அல்லது பாகை 22-கலை 42 ஆகும். (43-வது வாக்கியம் பார்க்கவும்). இந்த அயனும்சமாகிய 22 பாகை-42-கலையை முந்தி கணித்து வந்த நிராயன சூரிய ஸ்புடமாகிய பாகை 0—22 கலையுடன் கூட்ட வருகின்ற 23 பாகை-4 கலையே சாயன ஸ்புடமாகும், ஆகையால் சூரிய உதய வேளையில் சூரியனுடைய சாயனஸ்புடம் பாகை 23-4 கலை ஆகும்.

(3) சூரிய உதய வேளையில் உதய லக்கினமும் இந்த உதய லக்கினத்தில் இருப்பும் கணிக்க:—சாயன சூரிய ஸ்புடம் 23பாகை-4 கலை என்று மேலே கணித்தோம். 12வது வாக்கியத்தைப் பார்த்தால் சூரியன் சாயன மேஷ ராசியில் இருப்பதாகவும், அந்த ராசியில் 23 பாகை-4 கலை சென்றிருப்பதாகவும் ஏற்படும், அதாவது சூரிய உதய வேளையில் சாயன மேஷராசி உதயமாகி அதில் 23 பாகை-4 கலை செல்லான தென்றும், 30 பாகையில் 23 பாகை-4 கலையைக் கழிக்க வருகின்ற 6 பாகை-34 கலை இன்னம் செல்லாக வேண்டியதென்றும் ஏற்படும். இந்த 6 பாகை-34 கலை செல்ல எவ்வளவு நேரம் ஆகுமென்பதைக்கணிப்போம். இந்த 6 பாகை-34 கலையைக்கலையாக மாற்ற 394 கலைவரும். மேலும் பிரபவஞூ்த்திய ஆனந்தபோதினி பஞ்சாங்கம் 45வது பக்கத்தில் சாயன இராசிமான சங்கியையில் ஜெனனவிடமாகிய சென்னைக்குரிய 13வது அட்சாம்சத்

திற்கு நேராய் மேஷாதி 12 இராசிகளுக்கும் அடியிற் கண்டபடி இராசிமானம் கொடுக்கப்பட்டிருக்கின்றது,

இராசிகளின் பெயர்	சாயன இராசிமான சங்கியை நாழி—விநாடி	இராசிகளின் பெயர்	சாயன இராசி மான சங்கியை நாழி—விநாடி
மேஷம்	4—11	துலாம்	5— 3
ரிஷபம்	4—36	விருச்சிகம்	5—20
மிதுனம்	5—13	தனுசு	5—32
கடகம்	5—32	மகரம்	5—13
சிம்மம்	5—20	கும்பம்	4—36
கன்னி	5— 3	மீனம்	4—11

ஆக மொத்தம் நாழிகை 59—50 விநாடி ஆகும்.

சாயன மேஷராசிக்கு மேலே கொடுத்துள்ள 4 நாழிகை-11 விநாடியை விநாடியாக மாற்ற 251 விநாடி வரும். ஆகையால் சாயன மேஷராசியிலுள்ள 30 பாகை அல்லது 1800 கலை முழுவதும் உதயமாக 251 விநாடி ஆகும் என்றால் அந்த சாயன மேஷராசியில் 6 பாகை-34 கலை அல்லது 394 கலை உதயமாக எவ்வளவு விநாடியாகும் என்பதை இப்போது கணிக்கவேண்டியது. உதயமாக வேண்டிய பாகமாகிய 394ஐ இராசிமான மாகிய 251 ஆல் பெருக்கி இராசி பிரமானமாகிய 1800 ஆல் வகுக்க வருகின்ற ஈவு விநாடியாகும். இப்படி வகுக்க 55 விநாடிவரும். ஆகையால் சாயன மேஷராசியில் இன்னம் உதயமாக வேண்டிய பாகமாகிய 6 பாகை-34 கலை உதயமாக சூரிய உதயத்திலிருந்து 55 விநாடி செல்லும் என்பதாம். இந்த 55 விநாடியைத்தான் ஜெனன தேதியில் இராசியிருப்பு என்று சொல்லுவது வழக்கம்.

(21) **இஷ்டகிரக திருக்பலம் கணிக்க:**—இங்கு முதலில் 37வது வாக்கியத்தில் சொல்லியதை வாசிக்கவும். கிரக திருக்பலத்தை முன்னமே கணித்து 8வது கட்டத்தில் போட்டிருக்கின்றது. இஷ்ட பலத்தை 43வது கட்டத்தில் கொடுத்திருக்கிறது. இந்த கட்டத்தின் உதவியால் 37வது வாக்கியத்தில் 1வது அயிட்டத்தில் சொல்லியது போல கணிக்க வேண்டியது. சூரியனுடைய இஷ்ட கிரக திருக்பலத்தை 37வது வாக்கியத்தில் 1வது அயிட்டத்தில் உதாரணமாகக் கணித்துக் காட்டப்பபட்டிருக்கின்றது. இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் கணிக்க இஷ்டகிரக திருக்பலம் கீழே 47வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

இஷ்டகிரக திருக்பலம்-47வது கட்டம்.

வரிசை எண்	பார்க்கும் கிரகம்.	பார்க்கப்படும் கிரகங்கள்.						
		சூ	சந்	செ	பு	குரு	சு	சனி
1	சூரியன்	0	0	2	0	15	2	7
2	சந்திரன்	6	0	27	18	10	26	22
3	செவ்வாய்	0	13	0	0	57	0	0
4	புதன்	0	10	0	0	75	0	6
5	குரு	26	55	68	34	0	64	60
6	சுக்கிரன்	0	7	0	0	29	0	0
7	சனி	7	43	0	0	19	0	0

(22) **கஷ்ட திருக்பலம் கணிக்க:—** இங்கு முதலில் 37வது வாக்கியத்தில் சொல்லியதை வாசிக்கவும். கிரக திருக்பலத்தை முன்னமே கணித்து 8வது கட்டத்தில் போட்டிருக்கின்றது. கஷ்டபலத்தை 44வது கட்டத்தில் கொடுத்திருக்கின்றது. இந்த கட்டத்தின் உதவியால் 37வது வாக்கியத்தில் 2வது அயிட்டத்தில் சொல்லியது போல கணிக்க வேண்டியது. சூரியனுடைய கஷ்டதிருக்பலத்தை 36வது வாக்கியத்தில் 2வது அயிட்டத்தில் உதாரணமாகக் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்விதமாகவே மற்ற கிரகங்களுக்கும் கணிக்க கஷ்ட திருக்பலம் கீழே 48வது கட்டத்தில் கண்டபடி ஆகும்.

கஷ்டதிருக்பலம்-48வது கட்டம்.

வரிசை எண்	பார்க்கும் கிரகம்	பார்க்கப்படும் கிரகங்கள்.						
		சூ	சந்	செ	பு	குரு	சு	சனி
1	சூரியன்	0	0	5	0	47	5	21
2	சந்திரன்	9	0	42	28	15	40	34
3	செவ்வாய்	0	9	0	0	41	0	0
4	புதன்	0	2	0	0	12	0	1
5	குரு	9	18	22	11	0	21	20
6	சுக்கிரன்	0	13	0	0	57	0	0
7	சனி	3	17	0	0	7	0	0

(23) **இஷ்ட கஷ்ட சப்த்தவர்கஜபலம் கணிக்க:**—முதலில் 38 வது வாக்கியத்தில் சொல்லியதைப் படித்துவிட்டு அதில் சொல்லிய பிரகாரம் இஷ்டகஷ்டசப்த்தவர்கஜபலத்தைக் கணிக்க வேண்டியது. இஷ்டகஷ்ட இராசி வர்க்கபலத்தையும், இஷ்டகஷ்டநாவாம் சவர்க்க பலத்தையும் உதாரணமாக 38வது வாக்கியத்தில் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது இ.வ்விதமாகவே மற்ற வர்கங்களுக்கும் கணிக்க அடியில் 49வது 50வது கட்டங்களில் கண்டபடி இஷ்டகஷ்டசப்த்த வர்கஜபலம் வரும்.

இஷ்ட சப்த்தவர்கஜபலம்-49வது கட்டம்.

கிரகங்கள்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி	
இஷ்ட ராசி வர்க்கம்	6	50	6	13	13	75	3	
இஷ்ட நவாம்சவர்க்கம்	3	13	3	3	25	25	25	
இஷ்ட திரேகாண வர்க்கம்	2	13	7	3	25	7	7	
இஷ்ட திவாதசாம்சவர்க்கம்	19	19	7	3	25	7	7	
இஷ்ட சப்த்தமாம்சவர்க்கம்	3	25	25	13	2	3	7	
இஷ்ட ஓராவர்க்கம்	25	7	19	7	19	7	2	
இஷ்ட திரிம்சாம்ச வர்க்கம்	19	13	3	13	2	7	25	
கூட்ட மொத்தம்	77	140	70	55	111	131	76	

கஷ்டசப்த்தவர்கஜபலம் 50வது கட்டம்.

கிரகங்கள்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி
கஷ்டராசிவர்க்கம்	94	50	94	87	87	25	97
கஷ்ட நவாம்ச வர்க்கம்	47	37	47	47	25	25	25
கஷ்ட திரேக்காண வர்க்கம்	48	37	43	47	25	43	43
கஷ்ட துவாதசாம்ச வர்க்கம்	31	31	43	47	25	43	43
கஷ்ட சப்த்தமாம்ச வர்க்கம்	47	25	25	37	48	47	43
கஷ்ட ஓராவர்க்கம்	25	43	31	43	31	43	48
கஷ்ட திரிம்சாம்ச வர்க்கம்	31	37	47	37	48	43	25
கூட்ட மொத்தம்	323	260	330	345	289	269	324

(24) சுப அசுப பங்க்தீ கணிக்க:--சுப அசுப பங்க்தீ என்றால் என்ன வென்பதை தெரிந்து கொள்ளவும், இவைகளைக் கணிக்கவும் 39வது வாக்கியத்தைப்படிக்கவும். சுப அசுப பங்க்தீகளை 39வது வாக்கியத்தில் உதாரணமாகக் கணித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. அவைகள் அடியில் 51வது, 52வது கட்டங்களில் கண்டபடி ஆகும்.

சுப பங்க்தி—51-வது கட்டம்.

கிரகங்கள்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி
இராசிவர்க்க சுபபங்க்தி	19	35	18	14	28	33	19
நாவம்சவர்க்க சுபபங்க்தி	10	18	9	7	14	17	10
திரேகாணவர்க்கசுப பங்க்தி	10	18	9	7	14	17	10
துவாதசாம்சவர்க்கசுப பங்க்தி	10	18	9	7	14	17	10
சப்த்தமாம்ச வர்க்க சுப பங்க்தி	10	18	9	7	14	17	10
ஓராவர்க்க சுபபங்க்தி	10	18	9	7	14	17	10
திரிம்சாம்சவர்க்கசுப பங்க்தி	10	18	9	7	14	17	10

அசுப பங்க்தீ—52-வது கட்டம்.

கிரகங்கள்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி
இராசிவர்க்கஅசுபபங்க்தீ	81	65	83	86	72	67	81
நவாம்சவர்க்க அசுபபங்க்தீ	41	33	42	43	36	34	41
திரேகாணவர்க்கஅசு பங்க்தீ	41	33	42	43	36	34	41
துவாதசாம்சவர்க்க அசுப பங்க்தீ	41	33	42	43	36	34	41
சப்த்தமாம்சவர்க்கஅசுப பங்க்தீ	41	33	42	43	36	34	41
ஓராவர்க்கஅசுபபங்க்தீ	41	33	42	43	36	34	41
திரிம்சாம்சவர்க்க அசுப பங்க்தீ	41	33	42	43	36	34	41

(25) **சுப அசுப மத்தியபலம் கணிக்க:**—முதலில் 40வது வாக்கியத்தை இங்கு படிக்கவேண்டியது. இந்த 40வது வாக்கியத்தில் காட்டிய உதாரணங்கள் பிரகாரம் கணிக்க சுப அசுப மத்தியபலம் அடியில் 53வது 54 வது கட்டங்களில் கண்டபடி ஆகும்.

சுபமத்தியபலம்—53-வது கட்டம்.

கிரகங்கள்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி
இராசிவர்க்கசுப மத்தியபலம்	10	49	24	18	20	43	13
நவாம்ச வர்க்கசுப மத்தியபலம்	6	20	12	5	16	22	7
திரேகாணவர்க்கசுப மத்தியபலம்	7	20	5	5	16	22	14
துவாதசாம்சவர்க்கசுப மத்யபலம்	11	10	7	5	16	24	14
சப்த்தமாம்வர்க்கசுபமத்தியபலம்	6	25	6	8	18	19	6
ஓராவர்க்கசுபமத்தியபலம்	8	14	13	5	20	24	8
திரிம்சாம்சவர்க்கசுபமத்தியபலம்	11	13	12	8	18	9	7
மொத்த சுபமத்தியபலம்	59	151	79	54	124	163	69

அசுபமத்தியபலம்—54-வது கட்டம்.

கிரகங்கள்	சூ	சந்	செ	பு	குரு	பு	சனி
இராசிவர்க்க அசுபமத்திய பலம்	279	169	223	231	238	180	267
நவாம்சவர்க்கஅசுபமத்தியபலம்	141	95	113	139	104	91	133
திரேகாணவர்க்கஅசுபமத்திய பலம்	133	86	145	139	104	117	107
துவாசாம்சவர்க்க அசுபமத்திய பலம்	118	114	136	139	104	88	107
சப்த்தமாம்சவர்க்கஅசுபமத்திய பலம்	141	86	139	124	97	98	141
ஓராவர்க்கஅசுபமத்தியபலம்	132	107	109	139	94	88	132
திரிம்சாம்சவர்க்கஅசுபமத்திய பலம்	118	109	113	124	97	117	133
மொத்தஅசுபமத்தியபலம்	1062	766	978	1035	838	779	1020

(26) **ஸ்பஷ்ட சுபபலம் கணிக்க:**—முதலில் 41வது வாக்கியத்தை இங்கு படிக்கவேண்டியது. இந்த 41வது வாக்கியத்தில் கொடுத்துள்ள உதாரணங்கள் பிரகாரம் கணிக்க ஸ்பஷ்ட சுப அசுபபலம் அடியில் 55வது, 56வது, கட்டங்களில் கண்டபடி ஆகும்.

ஸ்பஷ்ட சுபபலம்—55-வது கட்டம்.

கிரகங்கள்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி
இராசிவர்க்கஸ்பஷ்டசுப பலம்	32	126	63	71	98	87	56
நவாம்சவர்க்கஸ்பஷ்ட சுபபபலம்	19	84	32	32	111	44	37
திரேகாணவர்க்க ஸ்பஷ்டசுபபலம்	18	84	26	32	111	86	52
துவாதசாம்சவர்க்க ஸ்பஷ்டசுபபலம்	33	44	15	32	111	55	52
சப்த்தமாம்சவர்க்க ஸ்ப ஷ்டசுபபலம்	19	64	21	58	67	71	38
ஓராவர்க்கஸ்பஷ்டசுப பலம்	11	26	39	16	85	55	21
திரிம்சாம்சவர்க்கஸ்பஷ் டசுபபலம்	33	39	32	58	67	35	37
மொத்தஸ்பஷ்டசுபபலம்	165	467	228	299	650	433	293

ஸ்பஷ்ட அசுபபலம்—56-வது கட்டம்.

கிரகங்கள்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி
இராசிவர்க்க ஸ்பஷ்ட அசுபபலம்	628	674	700	513	566	716	606
நவாம்சவர்க்க ஸ்பஷ்ட அசுபபலம்	317	287	355	222	237	362	275
திரேகாணவர்க்க ஸ்பஷ்ட அசுபபலம்	386	260	254	222	237	260	307
துவாதசாம்ச வர்க்க ஸ்பஷ்ட அசுபபலம்.	360	253	432	222	237	351	307
சப்த்தமாம்சவர்க்க ஸ்பஷ்ட அசுபபலம்	317	343	345	208	292	295	226
ஓராவர்க்க ஸ்பஷ்ட அசுபபலம்	537	431	343	313	284	351	383
திரிம்சாம்சவர்க்க ஸ்பஷ்ட அசுபபலம்	360	343	355	208	292	260	275
மொத்தஸ்பஷ்ட அசுபபலம்	2905	2591	2784	1908	2145	2595	2379

2-வது அத்தியாயம்.

இந்த புத்தகத்தின் மூன்றுவது அத்தியாயத்தில் கொடுத்துள்ள வாக்கியங்களை உபயோகப்படுத்தும் விதம்:—

1-வது, 2-வது, 3-வது, 4-வது வாக்கியங்கள் :—இந்த நான்கு வாக்கியங்களும் வாய்ப்பாடுகளானபடியாலும், இவைகள் தாமே நன்ருய் விளங்கக்கூடியனவாயிருப்பதாலும், இவைகளைப்பற்றி இங்கு விவரிப்பது அவசியமில்லை.

5-வது வாக்கியம் (மணி நிமிஷமும் நாழிகை விநாடியும்) :— இந்த வாக்கியத்தால் மணி நிமிஷத்தை நாழிகை விநாடியாகவும், நாழிகை விநாடிகளை மணி நிமிஷங்களாகவும் வெகு சுலபத்தில் மாற்றலாம்.

உதாரணம்:—உதாரணமாக ஒரு குழந்தை 1869ம்ஸு அக்டோபர் மீ 2ந்தேதி காலை கெடியாரமணி 7-நிமிஷம் 13க்கு ஜெனனமான தென்றும், அன்று சூரிய உதயம் காலை மணி 5-நிமிஷம் 56க்கு நேர்ந்த தென்றும் வைத்துக்கொண்டால், சூரிய உதயத்திலிருந்து ஜெனனகாலம் வரையிலும் செல்லான நாழிகை விநாடியை பின் வருமாறு இந்த 5-வது வாக்கியத்தால் அறிவோம்.

காலை மணி 7 நிமிஷம் 0-க்கு நாழிகை 2—விநாடி 30 ஆகும்.

மணி 0 நிமிஷம் 13-க்கு நாழிகை 0—விநாடி $32\frac{1}{2}$ ஆகும்.

ஆகவே காலைமணி 7, நிமிஷம் 13க்கு நாழிகை 3—விநாடி $2\frac{1}{2}$ கூட்டவரும். அதாவது காலை மணி 6-நிமிஷம் 0த்திலிருந்து காலை மணி 7-நிமிஷம் 13 வரையிலும் கணக்கிட நாழிகை 3—விநாடி $2\frac{1}{2}$ வரும். ஆனுல் அன்று சூரியன் காலை மணி 5-நிமிஷம் 0-த்தில் உதயமாகாமல் முந்தியாக காலை மணி 5-நிமிஷம் 56க்கு உதயம். அதாவது சூரியன் (மணி 6-நிமிஷம் 0-த்திலிருந்து மணி 5-நிமிஷம் 56யைக் கழிக்க வருகின்ற) 4 நிமிஷம் முந்தியாக உதயம். இந்த 5-வது வாக்கியத்தில் 4 நிமிஷத்திற்கு விநாடி 10 ஆவதால்

சூரியன் 10 விநாடி முந்தியாக உதயம் என ஏற்படும். சூரிய உதயம் 6 மணிக்கு முந்தியாக விருப்பதால் * இங்கு வந்த 10 விநாடியை முந்தி மேலே வந்த நாழிகை 3—விநாடி $2\frac{1}{2}$யுடன் கூட்டவேண்டும். அப்படி கூட்ட நாழிகை 3-விநாடி $12\frac{1}{2}$ வரும். ஆகையால் மேல் கண்ட தேதியில் ஜெனன காலமாகிய காலை மணி 7—நிமிஷம் 13க்குச் சூரிய உதயத்திலிருந்து நாழிகை 3-விநாடி $12\frac{1}{2}$ ஆகும். அதாவது ஜெனனம் காலை நாழிகை 3-விநாடி $12\frac{1}{2}$க்கு நேர்ந்தது என்று ஏற்படும்.

* குறிப்பு :—சூரிய உதயம் காலை 6 மணிக்கு முந்தி எவ்வளவு நிமிஷத்தில் நேரிடுகின்றதோ அவ்வளவு நிமிஷத்திற்குரிய நாழிகை விநாடியைக்கூட்ட வேண்டும். ஆனால் சூரிய உதயம் 6 மணிக்கு பிந்தி எவ்வளவு நிமிஷத்தில் நேரிடுகின்றதோ அவ்வளவு நிமிஷத்திற்கு உரிய நாழிகை விநாடியைக் கழிக்க வேண்டும். உதாரணமாக சூரியனுடைய உதயம் காலை 6 மணி—4 நிமிஷத்திற்கு நேர்ந்தால் 4 நிமிஷத்திற்கு 10 விநாடியாவதால் இந்த 10 விநாடியை மேலே வந்த நாழிகை 3—விநாடி $2\frac{1}{2}$ யிலிருந்து கழிக்கவேண்டும். அப்படி கழிக்க நாழிகை 2-விநாடி $52\frac{1}{2}$ வரும். அதாவது சூரிய உதயம் காலை மணி 6—நிமிஷம் 4-க்கு நேரிடுகிற தினத்தில் காலை மணி 7-நிமிஷம் 13க்கு சூரிய உதயத்திலிருந்து நாழிகை 2-விநாடி $52\frac{1}{2}$ ஆகும் என்பதாம்.

உதாரணம் (2). ஒரு தினத்தில் சூரிய உதயம் காலை மணி 5-நிமிஷம் 56 க்கு நேர்ந்தது. அன்று ஒரு குழந்தை சூரிய உதயத்திலிருந்து நாழிகை 3-விநாடி $12\frac{1}{2}$க்கு ஜெனனமானால் அப்போது கெடியார ரீதியாய் மணியை அறிவோம். இந்த நாழிகை 3—விநாடி $12\frac{1}{2}$க்கு அடுத்த சிறிய நாழிகை விநாடியை 5-வது வாக்கியத்தில் கண்டெடுத்து அதற்குத்தகுந்தாற்போல் இந்த நாழிகை 3-விநாடி $12\frac{1}{2}$யை பிரித்துக்கொள்ள வேண்டியது. அதாவது இதற்கு அடுத்த சிறிய நாழிகையானது 2—விநாடி 30 ஆகும். ஆகவே நாழிகை 3—விநாடி $12\frac{1}{2}$யை அடியிற் கண்டபடிப் பிரித்துக்கொள்ளவும்.

(1) நாழிகை 2 விநாடி 30 இதற்குமணி 7 நிமிஷம் 0 ஆகும்
(2) நாழிகை 0 விநாடி 30 ஷை 0 நிமிஷம் 12 ,,
(3) நாழிகை 0 விநாடி $12\frac{1}{2}$ ஷை 0 நிமிஷம் 5 ,,

ஆகவே கூட்ட, நாழி 3-விநாடி $12\frac{1}{2}$, இதற்கு மணி 7-நிமி 17 ஆகும்.

ஆகையால் நாழிகை 3—விநாடி $12\frac{1}{2}$க்கு மணி 7-நிமிஷம் 17 என்று அறியவும்.

அன்று சூரிய உதயம் காலே மணி 5-நிமிஷம் 56க்கு அதாவது 6 மணிக்கு * முந்தியே 4 நிமிஷத்தில் உதயமானதால் இந்த 4 நிமிஷத்தை மேலே வந்த மணி 7-நிமிஷம் 17ல் இருந்து கழிக்கவேண்டும். அப்படிக்கழிக்க மணி 7-நிமிஷம் 13 வரும். ஆகையால் மேல் கண்ட தினத்தில் சூரிய உதயத்திலிருந்து நாழிகை 3—விநாடி $12\frac{1}{2}$க்குக்கெடியார ரீதியாய் காலே மணி 7-நிமிஷம் 13 என்று அறியவேண்டியது.

*குறிப்பு :—சூரிய உதயம் 6 மணிக்குப் பிந்தியானல் எவ்வளவு நிமிஷம் பிந்தியாகின்றதோ அவ்வளவு நிமிஷத்தை மணி 7-நிமிஷம் 17 உடன் கூட்டவேண்டும்.

விசேஷ குறிப்பு :—ஜெனனகால மணியோ அல்லது நாழிகையோ அறியவேண்டுமானல் அநேக சோதிடர்கள் சூரிய உதயத்தைக் கவனிக்கிறதே கிடையாது. அதனுல் லக்கின சந்தியான ஜாதகங்களில் லக்கினத்தைத் தவறுதலாய்க் கணித்து விடுகின்றுர்கள். சூரிய உதயத்தைக்கவனியாமல் கணிக்கின்ற லக்கினங்களும் அம்சாலக்கினங்களும் பெரும்பான்மையும் தவறுதலாய் இருக்கும் என்பதற்குச் சந்தேகமே கிடையாது. மேலும் ஜெனனமான குழந்தை ஆணு பெண்ணு என்று அறிவதற்கு ஒரு தினத்தை 48 சமபாகமாகப் பங்கிடுகிருர்கள். அப்படிப்பங்கிட பாகம் ஒன்றுக்கு $1\frac{1}{4}$ நாழிகை வரும். ஞாயிற்றுக்கிழமையில் முதல் பாகமாகிய $1\frac{1}{4}$ நாழிகைக்குள் குழந்தை ஜெனனமானல் அந்தக்குழந்தை ஆண் என்றும் இரண்டாவது பாகத்தில் ஜெனனமானல் பெண் என்றும் இவ்விதமாகக் கிழமையையும் ஜெனன நாழிகையும் அனுசரித்து பிறந்த குழந்தை ஆணு பெண்ணு என்று அறிய ஒரு வழி இருக்கின்றது. இந்த வழியை அனுசரிக்கவேண்டுமானல் சூரிய உதயத்தைக் கவனித்தல் மிகவும் அவசியமாகும். இல்லாவிட்டால் ஆண் பெண் என்று சொல்லுகின்ற வழி தவறிப்போகும் என்பதற்குச் சந்தேகமே கிடையாது.

6-வது வாக்கியம்-திரைராசிக் கணிதம் :—இதற்குத் திரைராசிக் கணிதவாக்கியம் என்று பெயர். கிரகங்களின் ஸ்புடஞ்

செய்வதில் இது மிகவும் உபயோகமானது. உதாரணமாக அடியிற் கண்டபடி குரு, சுக்கிரன், சந்திரன் இவர்களுடைய ஸ்புடம் இருப்பதாக வைத்துக்கொள்வோம்.

	(1)	(2)	(3)
	1869ஞு அக்டோபர்மீ 1உ பகல் 4 மணி-36 நிமி ஷத்திற்கு கிரகஸ்புடம்	1869ஞு அக்டோபர்மீ 2உ பகல் 4 மணி-36 நிமி ஷத்திற்குக் கிரகஸ்புடம்	தினகதி
	பாகை—கலை	பாகை—கலை	பாகை—கலை
குருஸ்புடம்	28—19	28—15	வக் 0—4
சுக்கிரஸ்புடம்	203—47	205—0	1—13
சந்திரஸ்புடம்	109—24	123—47	14—23

இவ்விதமாக கிரகஸ்புடமிருந்தால், 1869ஞு அக்டோபர்மீ 2உ காலை மணி 7-நிமிஷம் 13க்குக் கிரகஸ்புடம் கணிப்போம்.

முதலில் மேலே கிரகஸ்புடங் கொடுத்துள்ள காலத்திலிருந்து ஜெனனகாலம் வரையிலுமுள்ள காலத்தின் அளவை அறியவேண்டும். கிரகஸ்புடம் கொடுத்துள்ள காலமாகிய 1ம் தேதி பகல் 4 மணி 36 நிமிஷத்திலிருந்து ஜெனனகாலமாகிய 2ந்தேதி காலை மணி 7-நிமிஷம் 13 வரையிலும் கணக்கிட 14-மணி 37 நிமிஷம் வரும். உதாரணமாக 1ந் தேதி குருவின் ஸ்புடம் பாகை 28—19ம், 2ந்தேதி குருவின் ஸ்புடம் பாகை 28—15ம், மேல் கண்டபடி ஆனால் 2ந்தேதி காலை மணி 7-நிமிஷம் 13க்குக் குருவின் ஸ்புடம் எவ்வளவு என்பதை கணிப்போம். 1ந்தேதி குருவின் ஸ்புடம் பாகை 28—19 கலையும், 2ந்தேதி பாகை 28—15 கலையுமாய் இருப்பதால் 24 மணி கொண்ட ஒரு தினத்தில் குரு பாகை 0—4 கலை தூரம் செல்லுகிறது. இந்த 4 கலைதான் குருவினுடைய தினகதி ஆகிறது. இந்த 4 கலை, பாகை 28–கலை 19ல் இருந்து பாகை 28–கலை 15யைக் கழிக்க வருகின்றது என்று அறியவும். இதற்கு மேல் குருவின் தினகதி பாகை 0–கலை 4 ஆனால் அதாவது குரு 24 மணி நேரத்தில் பாகை 0–கலை 4 செல்லுமானல் மேற்கண்ட 14 மணி-37 நிமிஷ நேரத்தில் எவ்வளவு தூரம் செல்லும் என்பதைக் கணிக்கவேண்டியது. இதை 6-வது வாக்கியத்தால் வெகு சுலபமாகக் கணிக்கலாம். இந்த வாக்கியத்தில் தலைப்பில் இடது புரமிருந்து வலது புரமாகப்பாகைகள் 0, 1, 2, 3 என்று

14 வரையிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 1வது கலத்தில் மேலிருந்து கீழ் நோக்கி கலைகள் 0, 1, 2, 3, 4 என்று 59 வரையிலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த பாகை கலைகள் நாம் கணிக்கவேண்டிய கிரகத்தின் தினகதியிலுள்ள பாகை கலைகள் என்று வைத்துக்கொள்ள வேண்டியது. மேலும் இந்த வாக்கியத்தில் தலைப்பில் மணியும், முதல் கலத்தில் நிமிஷமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை நாம் எத்தனை மணி, நிமிஷத்திற்கு ஸ்புடஞ் செய்ய வேண்டுமோ அத்தனைமணிநிமிஷம்என்று வைத்துக்கொள்ளவும். குருவினுடைய தினகதி பாகை 0—கலை 4 ஆனதால் பாகை 0 என்று குறிப்பித்துள்ள கலத்தில் கலை 4 என்று குறிப்பித்துள்ளவரிக்கு எதிரில் 2556 என்று இருக்கிறது. இந்த 2556யை எடுத்து ஒரு இடத்தில் எழுதி வைக்கவும். பிறகு நமக்குத் தேவையான 14 மணி-37 நிமிஷம் ஆனதால் 14 மணி கலத்தில் 37 நிமிஷத்திற்கு எதிரில் 215 இருக்கிறது. இதை மேலே பிரத்தியேகமாக எழுதி வைத்த 2556 உடன் கூட்ட வேண்டியது. அப்படிக்கூட்டினால் 2771 வரும். இந்த வாக்கியத்தில் 2771 அல்லது அதற்கு சமீபித்த எண் எங்கு இருக்கிறது என்று பார்க்கவும். அப்படிப்பட்ட சமீபித்த எண் 2857 இருக்கிறது. அது 0 பாகை என்று குறிப்பிட்ட கலத்தில் 2 கலைக்கு நேரில் இருக்கின்றது. ஆகையால் இந்த பாகை 0—கலை 2 தான் குரு 14 மணி-37 நிமிஷ நேரத்தில் செல்லக்கூடிய தூரம் என்று ஏற்படுகின்றது. அதாவது குரு 24 மணி கொண்ட ஒரு தினத்தில் பாகை 0—கலை 4 செல்லுமானால் 14 மணி-37 நிமிஷத்தில் பாகை 0—கலை 2 செல்லும் என்று ஏற்படுகின்றது. குருவக்கிரகதியில் இருப்பதால் இங்கு வந்த பாகை 0—கலை 2யை 1ந்தேதியின் ஸ்புடமாகிய பாகை 28 கலை—19ல் இருந்து கழிக்க பாகை 28—கலை 17 வரும். இதுதான் 2ந்தேதி காலை 7 மணி-313நிமிஷத்திற்கு குருவின் ஸ்புடம் என்று ஏற்படுகின்றது.

இவ்விதமாகவே சுக்கிரனுடைய ஸ்புடம் கணிப்போம்:—அதாவது 1ந்தேதி சுக்கிரனுடைய ஸ்புடம் பாகை 203-கலை 47ம், 2ந்தேதி பாகை 205-கலை 0 யானால், 2ந்தேதி காலை 7 மணி-13 நிமிஷத்திற்குச் சுக்கிரன் ஸ்புடம் என்ன?—பாகை 205-0 கலையில் இருந்து

பாகை 203-கலை 47யைக் கழிக்கப் பாகை 1-கலை 13 வரும். ஆகையால் சுக்கிரன் தினகதி பாகை 1-கலை13 ஆகும். முன்போல வாக்கியத்தில் பாகை 1-கலை 13க்குப் பார்த்தால் பாகை 1 என்று குறிப்பிட்ட கலத்தில் கலை 13க்கு நேராய் 1295 இருக்கிறது. மறுபடியும் 14 மணி-37 நிமிஷத்திற்கு முன்போல வாக்கியத்தில் பார்த்தால் 14 மணி கலத்தில் 37 நிமிஷத்திற்குஎதிரில் 215 இருக்கிறது. இந்த 215 யை1295யுடன் கூட்ட 1510 வரும். இந்த 1510 அல்லது இதற்குச் சமீபித்த எண் எங்கு இருக்கின்றது என்று வாக்கியத்தில் பார்க்க 1505 என்ற எண் ஒன்று 0-கலத்தில் 45 கலைக்கு நேரில் இருக்கிறது. ஆகையால் இந்த பாகை 0-கலை 45தான் சுக்கிரன் 14 மணி-37 நிமிஷத்தில் செல்லக்கூடிய தூரம் என்று ஏற்படுகின்றது. சுக்கிரன் வக்கிரகதியில் இல்லாமல் நேர் கதியில் இருப்பதால் மேலே வந்த பாகை 0-கலை 45யை 1ந்தேதியில் சுக்கிரனுடைய ஸ்புடமாகிய பாகை 203-கலை 47யுடன் கூட்டவேண்டும். அப்படிக் கூட்ட வருகின்ற பாகை 204-கலை 32 தான், 2ந் தேதி காலை 7 மணி-13 நிமிஷத்திற்குச் சுக்கிரனுடைய ஸ்புடம் என்று அறியவும்.

இப்பொழுது சந்திரனுடைய ஸ்புடம் கணிப்போம்:—மேற்சொல்லியபடி சந்திரனுடைய தினகதி பாகை 14-கலை 23 வரும் இதற்கு வாக்கியத்தில் மேற் சொல்லியபடி 222 வரும்.—மேலும் 14 மணி-37 நிமிஷத்திற்கு வாக்கியத்தில் 215 வரும். ஆகையால் முன்போல 222யையும் 215 யையும் கூட்ட 437 வரும். இந்த 437 அல்லது அதற்கு அருகிலுள்ள எண்எங்கே இருக்கின்றதென்று பார்க்க 8 பாகை என்று கலத்தில் 46 கலைக்கு எதிரில் இருக்கின்றது. ஆகையால் இந்த பாகை 8-கலை 46 தான் சந்திரன் 14 மணி-37 நிமிஷத்தில் செல்லக்கூடிய தூரம். சந்திரன் எப்போதும் நேர் கதியில் செல்வதால் இந்த பாகை 8-கலை 46யை 1ந் தேதியில் சந்திரனுடைய ஸ்புடமாகிய பாகை 109—கலை 24 உடன் கூட்ட வேண்டியது. அப்படிக்கூட்ட வருகின்ற பாகை 118—கலை 10 தான் 2ந்தேதி காலை 7 மணி-13 நிமிஷத்திற்குச் சந்திரனுடைய ஸ்புடம் என்று அறியவும். இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்திற்கும் அறியவும்.

குறிப்பு:—இந்த வாக்கியத்தில் 14 மணி-59 நிமிஷம் வரையிலுந் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நமக்குத் தேவையான மணி

நிமிஷம் இதற்கு மேற்பட்டிருந்தால் அடியிற் கண்டபடி செய்யவும். உதாரணமாக, ஒரு கிரகத்தின் தினகதி பாகை 1-கலை 13 ஆனால் 18 மணி-10 நிமிஷத்தில் அந்த கிரகம் எவ்வளவு தூரம் செல்லும் என்பதைக் கணிப்போம். நமக்குத் தேவையான காலமாகிய 18 மணி 10 நிமிஷம் வாக்கியத்தில் கொடுத்துள்ள 14 மணி-59 நிமிஷத்திற்கு மேற்பட்டிருப்பதால் இந்த 18 மணி-10 நிமிஷத்தை இரண்டுபாக மாகப் பிரிக்கவும். ஒரு பாகத்தை எப்பொழுதும் 12 மணியாகவும் மற்றொரு பாகத்தை மிகுதியாகிய 6 மணி-10 நிமிஷமாகவும் பிரிக்கவும். ஒருபாகமாகிய 12 மணி, 24 மணி நேரத்தில் பாதியானதால் அந்த 12 மணி நேரத்தில் அந்த கிரகம் பாகை 1-கலை 13ல் பாதியாகிய பாகை 0-கலை 36½ செல்லும் என்று ஏற்படும். பிறகு மற்றொருபாகமாகிய 6 மணி-10 நிமிஷ நேரத்தில் அந்த கிரகம் எவ்வளவு தூரம் செல்லும் என்பதைக் கணிக்கவும். அதாவது ஒரு கிரகத்தின் தினகதி பாகை 1-கலை 13 ஆனால் அந்த கிரகம் 6 மணி-10 நிமிஷத்தில் எவ்வளவு தூரம் செல்லும் என்று அறியவேண்டியது. முந்திய சொல்லியபடி தினகதி பாகை 1-கலை 13க்குப் பார்த்தால் பாகை 1 என்று குறிப்பிட்ட கலத்தில் 13க்கு எதிரில் 1295 இருக்கிறது. மேலும் 6 மணி-10 நிமிஷத்திற்குப் பார்த்தால் 6 மணி என்று குறிப்பிட்டுள்ள கலத்தில் 10 நிமிஷத்திற்கு எதிரில் 590 என்ற எண் இருக்கிறது. இந்த 590யை முந்தி அந்த 1295 உடன் கூட்ட 1885 வரும். இந்த 1885 அல்லது இதற்குச் சமீபித்த எண் எங்கு இருக்கின்றதென்று வாக்கியத்தில் பார்க்க 0 பாகை என்ற கலத்தில் 19 கலைக்கு எதிரில் 1880 இருக்கின்றது. ஆகையால் அந்த கிரகம் 6 மணி 10 நிமிஷத்தில் பாகை 0-கலை 19 செல்லும் என்று ஏற்படுகிறது. முன்னமே 12 மணி நேரத்தில் அந்த கிரகம் பாகை 0-கலை 36½ செல்லும் என்று கணித்திருக்கிறோம். ஆகையால் இந்த இரண்டையும் கூட்ட 18 மணி-10 நிமிஷ நேரத்தில் பாகை 0-கலை 55½ வரும். அதாவது 18 மணி-10 நிமிஷ நேரத்தில் அந்த கிரகம் பாகை 0-55½ கலை தூரம் செல்லும் என்று ஏற்படும். இன்னம் உதாரணமாக, நமக்கு வேண்டிய காலம் 22 மணி-48 நிமிஷமானால் அதை ஒரு பாகம் 12 மணியாகவும் மற்றொரு பாகம் 10 மணி-48 நிமிஷமாகவும் பிரித்துக்கொள்ள வேண்டியது. இவ்விதமாகவே நமக்கு வேண்டிய மணியைப் பிரித்துக் கொள்ளவேண்டியதுஅவசியம்.

மேலே சொல்லிய விதிகளைப் படிக்கப்படிக்க நன்றாய் விளங்கும். நன்றாய்த் தெரிந்து கொண்ட பிறகு அடியிற் கண்டபடி இன்னம் வெகு சுலபமாக நமக்கு வேண்டிய காலத்திற்குக் கிரகஸ்புடங்களைக் கணிக்கலாம்.

கிரகங்களுடைய ஸ்புடங்கள் 1869 ஹூ அக்டோபர் மீ 1-ந் தேதி பகல் மணி 4-நிமிஷம் 36க்கும் மறு நாளாகிய 2-ந் தேதி பகல் மணி 4-நிமிஷம் 36க்கும் கொடுக்கப்பட்டிருந்தால் 2-ந்தேதி காலை மணி 7-நிமிஷம் 13க்கு அவைகளினுடைய ஸ்புடம் என்ன என்பதை அடியிற் கண்டவாறு கணிப்போம்.

கிரகங்களின் பெயர்	1869 ஹூ அக்டோபர் மீ 1ந் உ பகல் 4 மணி 36 நிமிஷத்திற்கு கிரகஸ்புடம் பாகை—கலை	1869 ஹூ அக்டோபர் மீ 2உ பகல் 4-மணி 36 நிமிஷத்திற்குக் கிரகஸ்புடம். பாகை—கலை	தினகதி இது 2லிருந்து 1லைய கழிக்க வருவது A. பாகை கலை	வாக்கியத்தில் தினகதிக்குரிய எண்
	1	2	3	4
சூரியன்	166—26	167—25	+0—59	1388
சந்திரன்	109—24	123—47	+14—23	222
செவ்வாய்	206—4	206—46	+0—42	1535
புதன்	191—29	192—7	+0—38	1579
குரு	28—19	28—15	—0—4	2556
சுக்கிரன்	203—47	205—0	+1—13	1295
சனி	230—25	230—29	+0—4	2556
ராகு	102—19	102—16	—0—3	2681
கேது	282—19	282—16	—0—3	2681

தொடர்ச்சி

கிரகங்களின் பெயர்	வாக்கியத்தில் 14 மணி 37 நிமிஷத் திற்குரிய எண் C.	4-வது 5-வது கலத் திலுள்ள எண்களை கூட்டவருவது	வாக்கியத்தில் இத் 6வது கலத்தி லுள்ள எண்ணுக் குரிய பாகை—கலை	1வது கலத்தை யும் 7வது கலத்தை யும் கூட்டவருவது B. பாகை—கலை
	5	6	7	8
சூரியன்	215	1603	0—36	167—2
சந்திரன்	215	437	8—46	118—10
செவ்வாய்	215	1750	0—26	206—30
புதன்	215	1794	0—23	191—52
குரு	215	2771	0—2	28—17
சுக்கிரன்	215	1510	0—45	204—32
சனி	215	2771	0—2	230—27
ராகு	215	2896	0—2	102—17
கேது	215	2896	0—2	282—17

குறிப்பு (A) 2வது கலத்திலிருந்து 1வது கலம் கழிக்கப்படுமானால் 3வது கலத்தில் + என்ற இக்குறிபோடவும், அப்படிக்கழிபடாமல் 1வது கலத்தில் இருந்து 2-வது கலம் கழிபடுமானால்— என்ற குறிபோடவும் இவ்விதமாக கிரகம் வக்கிரமாக இருக்கும் போது தான் சம்பவிக்கும்.

(B) 3-வது கலத்தில் + என்ற கூட்டல் குறி இருந்தால், 1வது கலத்தையும் 7-வது கலத்தையும் கூட்ட 8வது கலம் வரும். 3-வது கலத்தில்—என்ற கழித்தல் குறி இருந்தால், 1-வது கலத்தில் இருந்து 7-வது கலத்தைக்கழிக்க 8-வது கலம் வரும்.

(C) 14மணி-37 நிமிஷம் என்பது 1-வது கலத்திலுள்ள மணி நிமிஷத்திற்கும் 2ங்தேதி 7மணி-13 நிமிஷத்திற்கும் இடையிலுள்ள காலம்.

7-வது வாக்கியம்-நட்சத்திரங்கள்.

இந்த வாக்கியத்தில் 27 நட்சத்திரங்களின் பெயர்களைக் கொடுத்திருப்பதால் இதைப்பற்றி இங்கு விவரித்து எழுதவேண்டியது அவசியமில்லை.

8-வது வாக்கியம்—திதிகள்.

இந்த வாக்கியத்தில் திதிகளின் பெயரும் அவைகளின் ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திதி என்பது ஆகாயத்தில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரத்தைத் தெரியப்படுத்தும். சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரம் அதாவது சந்திரனுடைய ஸ்புடத்திலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற தூரம் பாகை 0-கலை 0 முதல் பாகை 12-கலை 0 வரையிலும் இருந்தால் பிரதமை திதி என்றும், பாகை 12-கலை 0-க்கு மேல் பாகை 24- கலை 0-க்குள் இருந்தால் துதியை என்றும், பாகை 24-கலை 0-க்கு மேல் பாகை 36-கலை 0-க்குள் இருந்தால் திரிதியை என்றும் இவ்வாறே அறிய வேண்டியது.

உதாரணமாகச் சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118-கலை 10 என்றும் சூரியனுடைய ஸ்புடம் பாகை 167—கலை 2 என்றும் வைத்துக் கொள்வோம். எப்பொழுதும் சந்திரனுடைய ஸ்புடத்திலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தைக் கழிக்கவேண்டும். சிறிய ஸ்புடத்திலிருந்து பெரிய ஸ்தடத்தைக் கழிக்கவேண்டுமானால் சிறிய ஸ்புடத்துடன் 360 பாகையைக்கூட்ட வருகின்ற மொத்த பாகை கலையிலிருந்து பெரிய ஸ்புடத்தைக் கழிக்கவும்—சந்திரனுடைய ஸ்புடமாகிய பாகை 118-கலை 10 சிறியதாயும் சூரியனுடைய ஸ்புடமாகிய பாகை 167 கலை—2 பெரியதாயும் இருக்கின்றது. ஆகையால் பாகை 118-கலை 10 உடன் 360 பாகையைக் கூட்ட மொத்தம் 478 பாகை 10 கலை வரும் இதில் இருந்து சூரியனுடைய பாகை 167-கலை 2யைக் கழிக்கப் பாகை 311-கலை 8 வரும். இந்த 311 பாகை—8 கலைதான் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள தூரம். இப்போது

வாக்கியத்தில் பார்ப்போமானால் இந்த பாகை 311-கலை 8 என்பது தேய் பிறை ஏகாதசிக்குக் கொடுத்துள்ள பாகை 300-கலை 0க்கு மேல் பாகை 312-கலை 0க்குள் இருப்பதால் இந்த பாகை 311-கலை 8க்குத் தேய் பிறை ஏகாதசி திதி என்று ஏற்படுகின்றது. அதாவது அப்போது தேய் பிறை ஏகாதசி திதி என்று அறியவும்.

9-வது வாக்கியம்—(10வது பாவஸ்புட வாக்கியம்).

இந்த வாக்கியத்தால் பாவச்சக்கிரம் போடலாம். பாவச்சக்கிரம் என்பது என்னவென்பதைபற்றி சற்று கவனிப்போம். ஒரு குறித்த காலத்தில் இராசிமண்டலத்தில் எந்த பாகம் கிழக்கில் உதயமாகுமோ அந்தபாகத்திற்கு லக்கினம் என்று சொல்லப்படும் என்று முன்னமே தெரிவித்திருக்கின்றோம். ஒரு குறித்த காலத்தில் இராசிமண்டலத்தில் மேற்கே அஸ்தமனமாகும் பாகத்திற்கு அஸ்தமனலக்கினம் அல்லது 7வதுபாவம் என்றுபெயர். இராசிமண்டலம் முன்னமே சொல்லியதுபோல மேற்குத்திக்கிலிருந்து கிழக்குத்திக்காகச் செல்லுகின்ற ஒரு பெரிய வட்டம். இந்தவட்டத்தில் நமது உச்சியிற்கு அருகிலுள்ள இடத்திற்குத் "தசம மத்தியலக்கினம்" அல்லது 10வது பாவம் என்று பெயர். இந்தமத்தியலக்கினத்திற்கு இராசிமண்டலமும் நமது உச்சியின் மூலமாய்ச்செல்லுகின்ற ரேகாம்சமும் (Meridian) ஆகாயத்தில் சந்திக்கின்ற இடம் என்றும் பெயர். தசம மத்தியலக்கினத்திற்கு நேராய் பாதாளத்தில் இராசிமண்டலத்தில் உள்ள இடத்திற்குச் சதுர்த்த மத்தியலக்கினம் அல்லது 4வது பாவம் என்று பெயர். ஆகையால் இராசிமண்டலத்தில் உதயலக்கினம், தசம மத்தியலக்கினம் அஸ்தமனலக்கினம் சதுர்த்த மத்தியலக்கினம்என்று நான்கு இடங்கள் இருக்கின்றன. இந்த நான்கு இடங்களைக் கணிப்போமானால் பாவச்சக்கிரம் கூடியமட்டும் துல்லியமாய்க்கணிக்கலாம். பாவச்சக்கிரம் கணிக்கும்விதம்:—முதலில் உதயலக்கினத்தை உதயலக்கினம் கணிக்கும் விதத்தில் கணிக்கவேண்டியது. பிறகு உதயலக்கினஸ்புடத்துடன் 6 இராசி அல்லது 180 பாகை கூட்ட அஸ்தமனலக்கினம்வரும். பிறகு தசம மத்தியலக்கினம் கணிக்கவேண்டும். இந்த தசமலக்கினத்தை இந்த 10வது வாக்கியத்தால் கணிக்கவேண்டியது. நமது ஆனந்தபோதனி பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு தினத்திற்கும் பகல் 12மணிக்கு நட்சத்திரஹோராதிமணி மினிட்கொடுக்கப்

பட்டிருக்கின்றது. இதை அறிந்து கொள்ள வேண்டியது. பிறகு பகல் 12மணியிலிருந்து ஜெனனமானமணி நிமிஷம் வரையிலும் உள்ள மொத்தமணி நிமிஷம் அறியவேண்டியது. இந்தமணி நிமிஷத்தை முந்தி வந்த நட்சத்திரஹோராதிமணி நிமிஷத்துடன் கூட்டி மொத்தமணி நிமிஷம் அறியவும். இப்படிவரும் மணிநிமிஷத்திற்குக் ஜெனன காலத்தில் உள்ள நட்சத்திர ஹோராதிமணி நிமிஷம் என்று பெயர். 9வது வாக்கியத்தில் இந்த நட்சத்திரஹோராதிமணிக்குக் கொடுத்திருக்கின்ற பாகை கலையே சாயன தசம மத்திமலக்கின ஸ்புடம் ஆகும். இதிலிருந்து நமது ஆனந்தபோதனி பஞ்சாங்கத்தில் கிரக பாதசாரங்களுக்குத் தலைப்பில் அல்லது 43-வது வாக்கியத்தில் கொடுத்திருக்கும் அயனும்சஸ்புடத்தைக்கழிக்க நிராயன தசமமத்தியலக்கின ஸ்புடம் அல்லது தசமமத்தியலக்கினஸ்புடம் வரும். இந்த தசமமத்தியலக்கினஸ்புடத்துடன் 6 இராசி அல்லது 180 பாகை கூட்ட சதுர்த்தமத்தியலக்கினஸ்புடம் வரும். இவ்வாறு நான்கு விதமான லக்கினஸ்புடங்களைக் கணித்துக்கொண்டு பிறகு அடியிற்கண்ட உதாரணத்திற் காட்டியபடி பாவச்சக்கிரம் போட வேண்டியது.

உதாரணம்:—1869ஆம் அக்டோபர்மீ 2உ காலை 7 மணி-13 நிமிஷத்திற்கு ஜெனனம். அன்று அயனும்சம் பாகை 21-கலை 54. அப்போது உதயலக்கினம் பாகை 184-கலை 48. 1869ஆம் அக்டோபர்மீ 1உ பகல் 12-மணிக்கு நட்சத்திரஹோராதிமணி 12-நிமிஷம் 41 என்று இவைகளைக் கொடுத்திருப்பதாக வைத்துக்கொண்டு 2உ காலை 7மணி-13நிமிஷத்திற்கு பாவச்சக்கிரம் கணிப்போம்.

உதயலக்கினஸ்புடம் பாகை 184-கலை 48 இது கொடுக்கப்பட்டிருக்கின்றது. இத்துடன் 180 பாகை கூட்ட பாகை 364-கலை 48 வரும். இது 360 பாகைக்கு மேற்பட்டிருப்பதால் இதில் இருந்து 360 பாகையைக்கழிக்க 4பாகை-48 கலை வரும் ஆகையால் 4பாகை 48 கலைதான் அஸ்தமன லக்கினஸ்புடமாகும்.

ஜெனனகாலம் காலை 7மணி-13நிமிஷமானதால் 1உ பகல் 12 மணியிலிருந்து 2உ 7மணி-13நிமிஷம் வரையிலும் கணக்கிட மொத்தம் 19மணி-13நிமிஷநேரம் வரும். முந்தி கொடுத்துள்ள ஓரா திமணி

யாகிய 12மணி-41நிமிஷத்துடன் கூட்ட மொத்தம் 31மணி-57 நிமிஷம் வரும். இது 24 மணிக்கு மேற்பட்டிருப்பதால் இதில் இருந்து 24மணியைக்கழிக்க 7மணி-57நிமிஷம் வரும். இதுதான் ஜெனன காலத்தில் உள்ள நட்சத்திரஹோராதிமணி* என்று அறியவும். இந்த வாக்கியத்தில் ஓராதிமணி 7-நிமிஷம் 56க்கு 116 பாகை-57கலை என்றும், ஓராதிமணி 8-நிமிஷம் 0க்கு 117 பாகை—55 கலை என்றும் கொடுத்திருப்பதால் நமக்குத் தேவையான ஓராதிமணி 7-நிமிஷம் 57க்கு பாகை கலையைக்கணிப்போம். மணி 8-நிமிஷம் 0ல் இருந்து மணி 7-நிமிஷம் 56யைக்கழிக்க, 4நிமிஷம் வரும். இந்த 4நிமிஷத்திற்கு 117 பாகை—55 கலையிலிருந்து 116 பாகை—57 கலையைக்கழிக்க வருகின்ற 58கலை ஆகும். ஆகையால் மணி 7-நிமிஷம் 57ல் இருந்து மணி 7-நிமிஷம் 56 யைக்கழிக்க வருகின்ற1 நிமிஷத்திற்கு, 4 நிமிஷத்திற்கும் 58கலை விகிதம் கணிப்போமானால் $14\frac{1}{2}$ கலைவரும். இந்த $14\frac{1}{2}$ கலையை 116பாகை—57கலையுடன் கூட்டபாகை 117கலை $11\frac{1}{2}$ பாகை வரும். ஆகையால் 7மணி-57நிமிஷத்திற்கு 117 பாகை $11\frac{1}{2}$-கலைஆகும். இந்த 117பாகை-$11\frac{1}{2}$ கலையில் இருந்து அயனாம்சசஸ்புடமாகிய பாகை 21-கலை 54 யைக்கழிக்கப்பாகை 95-கலை $17\frac{1}{2}$வரும். இந்த$\frac{1}{2}$ கலையை ஒருகலையாகப்பாவிக்க 95 பாகை-$17\frac{1}{2}$கலை என்பது 95பாகை 18கலை ஆகும். இந்த 95பாகை-18கலைதான் தசமமத்திம லக்கினஸ்புடமாகும். இத்துடன் 6ராசி அல்லது 180 பாகை கூட்டவருகின்ற 275 பாகை-18 கலைதான் சதுர்த்த மத்திமலக்கினஸ்புடமாகும்.

இப்பொழுது நாம் கணித்த உதயலக்கினஸ்புடம் சதுர்த்தமத்திம லக்கினஸ்புடம் அஸ்தமன லக்கினஸ்புடம் தசமமத்திமலக்கினஸ்புடம் ஆகிய இவைகளிலிருந்து துவாதச பாவச்சக்கிரம் அடியிற்கண்டபடி கணிப்போம். உதயலக்கினஸ்புடம் பாகை-184 கலை 48 அஸ்தமனலக்கினஸ்புடம்பாகை4-48கலை. சதுர்த்தமத்திமலக்கினஸ்புடம்பாகை 275-கலை18. தசமமத்திமலக்கினஸ்புடம்பாகை 95-18கலை.

---

* குறிப்பு :—நட்சத்திர ஹோராதி மணியை, விபவஸூத்திய ஆனந்த போதினி பஞ்சாங்கத்தில் 47-வது பக்கத்தில் சொல்லியபடி இன்னம் சுலபமாகக் கணிக்கலாம்.

(1)	சதுர்த்த மத்திபலக்கினஸ்புடம்	பாகை	275–கலை	18	
	உதயலக்கினஸ்புடம்	பாகை	184–கலை	48	
	வித்தியாசம்	பாகை	90–கலை	30	
	மூன்றில் ஒருபங்கு (1-வது)	பாகை	30–கலை	10	(1)
(2)	அஸ்தமனலக்கினஸ்புடம்	பாகை	4–கலை	48	
	சதுர்த்த மத்திமலக்கினஸ்புடம்	பாகை	275–கலை	18	
	வித்தியாசம்	பாகை	89–கலை	30*	
	மூன்றில் ஒன்று (2-வது)	பாகை	29-கலை	50	(2)
(3)	தசமமத்திமலக்கினஸ்புடம்	பாகை	95	18	
	அஸ்தமனலக்கினஸ்புடம்	பாகை	4	48	
	வித்தியாசம்	பாகை	90	30	
	மூன்றில் ஒருபங்கு (3-வது)	பாகை	30	10	(3)
(4)	உதயலக்கினஸ்புடம்	பாகை	184	48	
	தசமமத்திமலக்கினஸ்புடம்	பாகை	95	18	
	வித்தியாசம்	பாகை	89	30	
	மூன்றில் ஒன்று (4-வது)	பாகை	29	50	(4)

மேலே வந்த நான்கு வித்தியாசங்களில் வித்தியாசங்கள் (1), (3)ம், (2)ம் (4)ம் ஒன்றாய் இருப்பதைக்கவனிக்கவும். இப்படி ஒன்றாய் இல்லாவிட்டால் நாம் கணித்த கணிதத்தில் பிழை இருக்கின்றதென்று அறிந்து அந்த பிழையைத்திருத்தவேண்டும்.

பிறகு உதயலக்கினஸ்புடத்துடன் 1வது வித்தியாசத்தின் 3ல் ஒருபங்கை அடியிற்கண்டபடி 3 தரம் கூட்டவும். சதுர்த்த மத்திமலக்கினஸ்புடத்துடன் 2வது வித்தியாதத்தின் 3ல் 1பங்கை 3தரம் கூட்டவும். அஸ்தமலக்கினஸ்புடத்துடன் 3வதுவித்தியாசத்தின் 3ல் 1பங்கை, 3தரம் கூட்டவும். தசமலக்கினஸ்புடத்துடன் 4வது வித்தியாசத்தின் 3ல்1 பங்கை 3தரம் அடியிற்கண்டபடி கூட்டவும். இப்படிக்கூட்டவருகின்ற ஸ்புடங்கள் துவாதசபாவஸ்புடங்கள் ஆகும்.

---

*இது பாகை 4-கலை 48 உடன் 360 பாகை கூட்டி 275 பாகை கலை 18 யைக்கழிக்க வரும்

	பாகை—கலை	பாகை—கலை
(1) உதயலக்கினஸ்புடம்	184—48 (அதாவது)	
		(1வது பாவஸ்புடம் 184—48)
1வது 3ல் ஒரு பங்கு	30—10	
கூட்ட	214—58	(2வது பாவஸ்புடம் 214—58)
(2) 1வது 3ல் ஒருபங்கு	30—10	
கூட்ட	24—58	(3வது பாவஸ்புடம 245— 8)
(3) 1வது 3ல் ஒருபங்கு	30—10	
கூட்ட	275—18	(4வது பாவஸ்புடம் 275—18)
(4) சதுர்த்தமத்திம லக்கினஸ்புடம்	275—18	(4வது பாவஸ்புடம் 275—18)
2வது 3ல் ஒருபங்கு	29—50	
கூட்ட	305— 8	(5வது பாவஸ்புடம் 305— 8)
(5) 2வது 3ல் ஒருபங்கு	29—50	
கூட்ட	334—58	(6வது பாவஸ்புடம் 334—58)
(6) 2வது 3ல் ஒருபங்கு	29—50	
கூட்ட	364—48	
அல்லது	4—48	(7வது பாவஸ்புட 4—48)
(7) அஸ்தமனலக்கினஸ்புடம்	4—48	(7வது பாவஸ்புடம் 4—48)
3வது 3ல் ஒருபங்கு	30—10	
கூட்ட	34—58	(8வது பாவஸ்புடம் 34—58)
(8) 3வது 3ல் ஒருபங்கு	30—10	
கூட்ட	65— 8	(9வது பாவஸ்புடம் 65— 8)
(9) 3வது 3ல் ஒருபங்கு	30—10	
கூட்ட	95—18	(10வது பாவஸ்டபும் 95— 18)
(10) தசமமத்தியலக்கின ஸ்புடம்	95—18	(10வது பாவஸ்புடம் 95—18)

	பாகை—கலை	பாகை—கலை
(11) 4வது 3ல் ஒருபங்கு	29—50	
கூட்ட	125— 8	(11வது பாவஸ்புடம் 125—8)
4வது 3ல் ஒருபங்கு	29—50	
கூட்ட	154—58	(12வது பாவஸ்புடம் 154—58)
(12) 4வது 3ல் ஒருபங்கு	29—50	
கூட்ட	184—48	(1வது பாவஸ்புடம் 184—48)

இவ்விதமாகத்தான் துவாதசபாவஸ்புடங்கள் அல்லது 12 பாவஸ்புடங்கள் அல்லது பாவசக்கிரம் கணிக்கவேண்டியது.

10-வது வாக்கியம்—ஜெனனகாலதிசை கணிதம்

இந்த வாக்கியத்தால் ஜெனனகாலத்தில் ஜென்மதெசையில் கெற்பச்செல்லுபோய் இருப்பு நின்ற தெசையை சுலபமாகக் கணிக்கலாம். சந்திரனுடைய ஸ்புடத்தை முதலில் கணித்துக்கொள்ள வேண்டியது. பிறகு 11-வது வாக்கியத்தில் சந்திரன் எந்த நட்சத்திரத்திலிருக்கின்றது என்பதை அறியவும். பிறகு அங்நட்சத்திரத்தில், அந்த நட்சத்திரம் முடிய இன்னம் செல்லாகவேண்டிய பாகை கலையை அறியவும். பிறகு சந்திரன் இருக்கும் நட்சத்திரத்திற்குரிய தெசையை 10-வது வாக்கியத்தால் அறியவும். பிறகு அந்த நட்சத்திரத்தில் செல்லாகவேண்டிய பாகை கலைக்கு நேராய் 10வது வாக்கியத்தில் அந்த தெசை கிரகத்தின் கலத்தில் கொடுத்துள்ள வருஷம் மாதம் நாள் நாழிகையே அந்த தெசையில் இன்னம் செல்லாகவேண்டிய காலம் என்று அறியவும். இந்த வழியை அடியிற்கண்ட உதாரணத்தால் விளக்கிக்காட்டுவோம்.

உதாரணம் :—குழந்தை ஜெனனகாலத்தில் சந்திரஸ்புடம் பாகை 118—கலை 10 ஆக விருந்தால் ஜெனன தெசை என்னவென்பதையும் அந்த தெசையில் கெற்பச்செல்லுபோய் நின்ற வருஷம் மாதம் நாள் நாழிகையும் கணிப்போம். 11வது வாக்கியத்தை உபயோகப்படுத்தும் விதம் பின்னல் சொல்லப்பட்டிருக்கிறது. அதை இங்கு ஒருதரம் முன்னமே படிக்கவேண்டியது. அதைப்படித்தால் சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118—கலை 10 ஆக இருந்தால் சந்திரன் அப்போது ஆயிலிய நட்சத்திரத்தில் இருப்பதாக ஏற்படும். ஆயிலிய நட்சத்திரம் பாகை 120—கலை 0த்தில் முடிவு

பெருவதால் பாகை 120—கலை 0த்திலிருந்து சந்திரனுடைய ஸ்புட மாகிய பாகை 118—கலை 10-யைக்கழிக்கப் பாகை 1—கலை 50 வரும். இந்தபாகை 1—கலை 50 தான் ஆயிலிய நட்சத்திரத்தில் இருப்பு. 10வது வாக்கியத்தில் ஆயிலிய நட்சத்திரத்திற்குப் புதன் தெசை என்று சொல்லி இருப்பதைக் கவனிக்கவும். ஆகையால் ஜெனனகாலத்தில் புதன் தெசை என்று ஏற்படும். ஆயிலிய நட்சத் திரத்தில் இருப்பு பாகை 1—கலை 50. இதற்குரிய அளவு புதன் தெசையில் எவ்வளவு என்பதை அடியிற்கண்டபடி கணிக்கவும்.

	வ௵ மீ நாள் நாழி
பாகை 1-0 கலைக்கு புதன் என்ற கலத்தில்	1 —3 — 9— 0
பாகை 0—50கலைக்கு	1 —0—22—30

கூட்ட பாகை 1—50 கலைக்கு மொத்தம் வ௵ 2 மீ 4 நாள் 1 நாழிகை 30 வரும். ஆயிலியத்தில் பாகை 1—கலை 50 இருப்பு ஆன படியால் இதற்குரிய வ௵ 2 மீ 4 நாள் 1 நாழிகை 30 தான் ஜெனன காலத்தில் புதன்தெசை இருப்பு என்றுஅறியவும். ஆகையால் ஜென னகாலத்தில் புதன் தெசையில் கெற்பச்செல்லுபோய் இருப்புநின்ற வ௵ 2 மீ 4 நாள் 1 நாழிகை 30 ஆகும்.

11வது வாக்கியம்—இராசி, நட்சத்திர, நவாம்ச, திரேகாண ஸ்புடம்.

முதலில் 1, 2, 3 என்ற கலங்களைப்பற்றி கவனிப்போம். மேஷ ராசி என்பது அஸ்வணி 1வது பாதம் முதல் கிருத்திகை 1வது பாதம் வரையிலும் உள்ளது என்று ஏற்படும். இவ்விதமே ரிஷப ராசி என்பது கிருத்திகை 2 முதல் மிருகசிரஷம் 2 வரையிலும் உள்ளது என்று ஏற்படும். இவ்விதமே மற்ற எல்லாராசிகளுக்கும் நட்சத்திரபாதம் அறியவும்.

மேலும் ஒரு ராசியினுடைய முடிவு அடுத்த ராசியின் ஆரம் பம் என்றும், ஒரு ராசியினுடைய ஆரம்பம் முந்தியுள்ள ராசியினு டைய முடிவு என்றும் எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டியது. இவ்விதமாகவே ஒரு நட்சத்திரத்தினுடைய முடிவு அடுத்த நட்சத்திரத்தினுடைய ஆரம்பம் என்றும், ஒரு நட்சத்திரத் தினுடைய ஆரம்பம் முந்தியுள்ள நட்சத்திரத்தினுடைய முடிவு என்றும் எப்பொழுது அறியவேண்டும். உதாரணமாக ரிஷபராசி

யினுடைய முடிவு மிதுனராசியினுடைய ஆரம்பமாகும். ரிஷப ராசியினுடைய ஆரம்பம் மேஷராசியினுடைய முடிவாகும். (12வது வாக்கியத்தைப்பார்க்கவும்). இவ்விதமே பரணியின் முடிவு கிருத்திகையின் ஆரம்பமாகும். பரணியின் ஆரம்பம் அஸ்வணியின் முடிவாகும், மேலும் மேஷத்திற்கு எதிரில் 4, 5 கலங்களில் பாகை 0—கலே 0 என்று போட்டிருக்கிறது. அதாவது மேஷராசி ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 0—கலே 0 என்பதாம். ரிஷபராசிக்கு எதிரில் 4, 5வது கலங்களில் பாகை 30—கலே 0 என்று போட்டிருக்கின்றது. அதாவது ரிஷபராசி ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 30—கலே 0 என்பதாம். ரிஷபராசியினுடைய ஆரம்பம் அந்த ராசிக்கு முந்தியுள்ள ராசியாகிய மேஷராசியின் முடிவு என்று மேலே சொல் விபவிதியால் ஏற்படுவதால் மேஷராசியின் முடிவின் ஸ்புடம் பாகை 30—கலே 0 என்று ஏற்படும். அதாவது மேஷராசியின் ஸ்புடம் பாகை 0—கலே 0 முதல் பாகை 30—கலே 0 வரையிலும் என்பதாம் இவ்விதமாகவே ரிஷபராசியின் ஸ்புடம் பாகை 30—கலே 0 முதல் பாகை 60—கலே 0 வரையிலும் என்பதாம். மிதுனராசியின் ஸ்புடம் பாகை 60—கலே 0 முதல் பாகை 90—கலே 0 வரையிலும் என்பதாம், இவ்விதமாகவே மற்றராசிகளுக்கும் ஸ்புடம் அறியவும்.

(2) மேலும் அஸ்வணிக்கு எதிரில் 4, 5வது கலங்களில் பாகை 0—கலே 0 என்று போட்டிருக்கிறது. இதனால் அஸ்வணி ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 0—கலே 0 என்பதாம். பரணிக்கு எதிரில் பாகை 13—கலே 20 என்று போட்டிருப்பது பரணி ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 13—கலே 20 என்பதாம். பரணியின் ஆரம்பம் அஸ்வணியின் முடிவு என்று முந்தி சொல்லிய விதியால் ஏற்படுவதால் பரணியின் ஆரம்பஸ்புடமாகிய பாகை 13—கலே 20 அஸ்வணியின் முடிவின் ஸ்புடமாகும. அதாவது அஸ்வணியின் ஆரம்பத்திற்கு ஸ்புடம் பாகை 0—கலே 0 என்றும் அஸ்வணியின் முடிவிற்கு ஸ்புடம் பாகை 13—கலே 20 என்றும் ஏற்படும். அதாவது அஸ்வணி நட்சத்திரத்தின் ஸ்புடம் பாகை 0—கலே 0 முதல் பாகை 13—20 வரையிலும் என்று ஏற்படும். இவ்விதமே பரணியின் ஸ்புடம் பாகை 13—கலே 20 முதல் பாகை 26—கலே 40 வரையிலும், கிருத்திகையின் ஸ்புடம் பாகை 26—கலே 40 முதல்

பாகை 40—கலை 0 வரையிலும், ரோகணியின் ஸ்புடம் பாகை 40—கலை 0 முதல் பாகை 53—கலை 20 வரையிலும் என்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற நட்சத்திரங்களின் ஸ்புடம் அறியவும்.

(3) ஒவ்வொரு நட்சத்திரத்தையும் நான்கு சமபாகமாகப் பங்கிட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு பாகத்திற்கும் நட்சத்திரப் பாதம் அல்லது பாதம் என்று பெயர். ஒரு பாதத்தினுடைய முடிவு அடுத்த பாதத்தினுடைய ஆரம்பமாகும். ஒரு பாதத்தினுடைய ஆரம்பம் அதற்கு முந்தியுள்ள பாதத்தின் முடிவாகும். அஸ்வணியின் 1-ம் பாதத்தின் ஸ்புடம் பாகை 0—கலை 0 முதல் பாகை 3—கலை 20 வரையிலும் என்பதாம். இவ்விதமாகவே அஸ்வணியின் 2—ம் பாதத்தின் ஸ்புடம் பாகை 3—கலை 20 முதல் பாகை 6—கலை 40 வரையிலும் என்பதாம். இவ்விதமாகவே ரோகணியின் 4ம் பாதத்தின் ஸ்புடம் பாகை 50—கலை 0 முதல் பாகை 53—கலை 20 என்பதாம். ரேவதியின் 3ம் பாதத்தின் ஸ்புடம் பாகை 353—கலை 20 முதல் பாகை 356—கலை 40 வரையிலும் என்பதாம்.

இந்த வாக்கியத்தின் உபயோகம் அடியிற்கண்ட உதாரணத்தால் அறியலாம்.

(4) ஒரு குழந்தையின் ஜெனனகாலத்தில் சூரியனுடைய ஸ்புடம் பாகை 167—கலை 2ம் குருவினுடைய ஸ்புடம் பாகை 28 கலை 17ம், சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118—கலை 10ம் ஆனால் இந்த கிரகங்கள் ஜெனனகாலத்தில் எந்தராசியில் எந்த நட்சத்திரத்தில் எந்த நட்சத்திரப்பாதத்தில் இருககின்றன என்பதை அறிவோம் முதலில் குருவை எடுத்துக்கொள்வோம். குருவினுடைய ஸ்புடம் பாகை 28—கலை 17. இந்த 11வது வாக்கியத்தில் பார்ப்போமானல் மேஷராசிக்குரிய பாகை 0—கலை 0க்குமேல் பாகை 30—கலை 0க்குள் குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28—கலை 17 இருப்பதால் குரு மேஷராசியில் இருக்கின்றது என்று ஏற்படுகின்றது. மேலும் கிருத்திகை நட்சத்திரத்தின் 1வது பாதத்தின் ஸ்புடமாகிய பாகை 26—கலை 40க்கு மேல் பாகை 30—கலை 0க்குள் குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28—கலை 17 இருப்பதால் குரு கிருத்திகை நட்சத்திரத்தின் 1வது பாதத்தில் இருக்கின்றதென்று ஏற்படுகின்றது.

அதாவது குரு மேஷராசியில் கிருத்திகை நட்சத்திரத்தின் 1—ம் பாதத்தில் இருக்கின்றதென்று ஏற்படுகின்றது.

(5) பிறகு சூரியனை எடுத்துக்கொள்வோம். சூரியனுடைய ஸ்புடம் பாகை 167—கலை 2. இந்த 11வது வாக்கியத்தில் பார்ப் போமானல் சூரியன் கன்னியாராசியில் அஸ்த நட்சத்திரத்தின் 3ம் பாதத்தில் இருக்கின்றதென்று ஏற்படும்.

(6) பிறகு சந்திரனை எடுத்துக்கொள்வோம். சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118—கலை 10. இந்த 11வது வாக்கியத்தில் பார்ப் போமானல் கடகராயில் ஆயில்ய நட்சத்திரத்தின் 4வது பாதத்தில் சந்திரன் இருப்பதாக ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்கள் இருக்கும் ராசி, நட்சத்திரப்பாதம் அறியவேண்டியது.

12வது வாக்கியம்—இராசிச்சக்கிரம்.

இந்த வாக்கியத்தில் 12 இராசிகளின் பெயரும் அவைகளின் ஆரம்பத்தின ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேஷராசி யின் ஆரம்பம் பாகை 0—கலை 0. அதன் முடிவு பாகை 30—கலை 0. இவ்விதமாகவே ரிஷபராசியின் ஆரம்பம் பாகை 30—கலை 0. அதன் முடிவு பாகை 60—கலை 0. இந்தவாக்கியத்தால் இராசி சக் கிரத்தில் நவக்கிரகங்களை வெகு சுலபமாகப்போடலாம். உதாரண மாக ஒரு குழந்தையின் ஜெனனகாலத்தில் குரு பாகை 28—கலை 17ல் இருந்தால் அது ராசிச்சக்கிரத்தில் எந்த ராசியில் இருக்கின்றது என்பதை அறிவோம். குருவினுடைய ஸ்புடம் பாகை 28—கலை 17 ஆனதாலும் இது பாகை 0—கலை 0க்கு மேற்பட்டு பாகை 30—கலை 0க்குள் இருப்பதால் குரு மேஷராசியில் இருக்கிறது என்று ஏற்படுகின்றது. இங்ஙனமாகவே சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118—கலை 10 ஆனல் சந்திரன் கடகராசியில் இருக்கின்றதென்று ஏற்படுகின்றது. இவ்விதமாகவே மற்ற கிரகங்கள் இருக்கும் ராசியை அறியவேண்டியது.

13வது வாக்கியம்—நவாம்சசக்கிரம்.

இந்த வாக்கியத்தால் கிரகங்களை நவாம்சை சக்கிரத்தில் வெகு சுலபமாகப் போடலாம். நவாம்சை என்பது ஒரு ராசியை சம பாகங்களாகப் பங்கிட வருகின்ற பாகமாகும். கிரகங்கள் இருக்

கின்ற நவாம்சைகளைக்காட்டுகிற சக்கிரத்திற்கு நவாம்சை சக்கிரம் என்று பெயர். இங்க வாக்கியத்தில் நவாம்சைகளின் ஆரம்பத்தின் ஸ்புடமும் முடிவின் ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக 1வது வரிசை எண்ணிற்கு நேராய் மேஷ நவாம்சையின் ஆரம்பம் பாகை 0—கலை 0 என்றும் முடிவு பாகை 3—கலை 20 என்று போட்டிருக்கின்றது. அதாவது ஒரு கிரகத்தின் ஸ்புடம் பாகை 0—கலை 0 க்கு மேற்பட்டு பாகை 3—கலை 20க்குள் இருந்தால் அந்த கிரகம் மேஷ நவாம்சையில் இருக்கின்றதென்று ஏற்படும். உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனனகாலத்தில் சூரியனுடைய ஸ்புடம் பாகை 167—கலை 2, சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118—கலை 10, குருவினுடைய ஸ்புடம் பாகை 28—கலை 17 என்று வைத்துக்கொண்டு இந்த கிரகங்கள் இருக்கும் நவாம்சை ராசியை அறிவோம். முதலில் குருவை எடுத்துக்கொள்வோம். குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28—கலை 17 என்பது 9வது எண்ணிற்கு நேராயுள்ள பாகை 26—கலை 40க்கு மேற்பட்டு பாகை 30—கலை 0க்குள்பட்டு இருப்பதால் இந்த 9வது எண்ணிற்கு நேராயுள்ள தனுசு நவாம்சையில் குரு இருக்கின்றதென்று ஏற்படுகின்றது. இவ்விதமாகவே சூரியனுடைய ஸ்புடமாகிய பாகை 167—2 கலையானது 51வது எண்ணிற்கு எதிரிலுள்ள பாகை 166—40 கலைக்கு மேற்பட்டு பாகை 170—0 கலைக்குள் இருப்பதால் இந்த 51வது எண்ணிற்கு நேராயுள்ள மிதுன நவாம்சையில் சூரியன் இருக்கின்றதென்று ஏற்படும். இவ்விதமாக சந்திரனுடைய ஸ்புடம் பாகை 118—கலை 10 ஆனதால் 36வது எண்ணிற்கு நேராயுள்ள மீன நவாம்சையில் சந்திரன் இருக்கின்றதென்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் நவாம்சையை அறியவும்.

14வது வாக்கியம்—திரேகாணச்சக்கிரம்.

இந்த வாக்கியத்தால் கிரகங்களைத் திரேகாணச்சக்கிரத்தில் வெகு சுலபமாகப் போடலாம். திரேகாணம் என்பது ஒரு ராசியை 3 சமபாகமாகப்பங்கிடவருகின்ற பாகமாகும். கிரகங்கள் இருக்கின்ற திரேகாணத்தைக் காட்டுகிற சக்கிரத்திற்குத் திரேகாணச்சக்கிரம் என்று பெயர். இந்த வாக்கியத்தில் திரேகாணங்களின் ஆரம்பத்தின்ஸ்புடமும் முடிவின்ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனன காலத்தில் குருவின் ஸ்புடம் பாகை 28—கலை 17 ஆனால் அதனுடைய திரேகாணம் என்ன என்பதை அறிவோம். குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28—17 கலை என்பது இந்த வாக்கியத்தில் 3வது எண்ணிற்கு நேராயுள்ள பாகை 20 0 கலைக்கு மேற்பட்டு பாகை 30—0 கலைக்குள் இருப்பதால் இந்த 3வதுஎண்ணிற்கு நேராயுள்ள தனுசு திரேகாணத்தில் குரு இருக்கின்றதென்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் திரேகாணம் அறியவும் மேலும் 5வது கலத்தில் 1, 2, 3 என்று அடிக்கடி போடப்பட்டிருக்கிறதைக் கவனிக்கவும். இதனால் 1வது 2வது 3வது என்று சொல்லப்பட்ட பாகங்களில் எந்தபாகத்தில் அல்லது திரேகாணத்தில் கிரகங்கள் இருக்கின்றன வென்பதை அறியலாம் இந்த வாக்கியத்தில் வரிசைஎண் 3க்கு நேராய் 5வது கலத்தில் 3இருப்பதால் குரு 3வது திரேகாணத்தில் அல்லது கடைசி திரேகாணத்தில் இருக்கின்றது என்று ஏற்படும். 1வது, 2வது, 3வது திரேகாணத்தால் அறியவேண்டிய பலம் 25வது வாக்கியத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

15வது வாக்கியம்.

இந்த வாக்கியத்தால் கிரகங்களைத் துவாதசாம்ச சக்கிரத்தில் வெகு சுலபமாகப் போடலாம். துவதசாம்சம் என்பது ஒரு ராசியை 12 சமபாகமாகப் பங்கிடவருகின்றபாகமாகும். கிரகங்கள் இருக்கின்ற துவாதசாம்சத்தைக் காட்டுகின்ற சக்கிரத்திற்கு துவாசாம்ச சக்கிரம் என்று பெயர். இந்த வாக்கியத்தில் துவாதசாம்சங்களின் ஆரம்பத்தின் ஸ்புடமும் முடிவின் ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனனகாலத்தில் குருவினுடையஸ்புடம் பாகை 28—கலை 17 ஆனால் அதனுடைய துவாதசாம்சம் என்னவென்பதை அறிவோம். குருவினுடையஸ்புடமாகிய பாகை 28—கலை 17 என்பது இந்த வாக்கியத்தில் 12வது எண்ணிற்கு நேராயுள்ள பாகை 27—30 கலைக்கு மேற்பட்டு பாகை 30—0 கலைக்குள் இருப்பதால் இந்த 12வது எண்ணிற்கு நேராயுள்ள மீனதுவாதசாம்சத்தில் குரு இருக்கின்றதென்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் துவாதசாம்சம் அறியவும்.

16வதுவாக்கியம்—ஓரைகணிதம்.

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் ஓரையை வெகு சுலபமாக அறியலாம். ஓரை என்பது ஒருராசியை இரண்டு சமபாகங்களாகப் பங்கிடவருகின்ற பாகமாகும். ஒற்றை ராசியாகிய ஆண்ராசியில் முதல் பாகத்திற்குச் சூரியனுடைய ஓரை என்றும் இரண்டாம் பாகத்திற்கு சந்திரனுடைய ஓரை என்றும், இரட்டைராசியாகிய பெண்ராசியின் முதல்பாகத்திற்குச் சந்திரனுடைய ஓரை என்றும் இரண்டாம் பாகத்திற்குச் சூரியனுடைய ஓரை என்றுஞ் சொல்லப் படும். கிரகங்கள் இருக்கின்ற ஓரையைக்காட்டுகின்ற சக்கிரத்திற்கு ஓரைச்சக்கிரம் என்று பெயர். இந்த வாக்கியத்தில் ஓரைகளின் ஆரம் பத்தின்ஸ்புடமும் முடிவினஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உதாரனமாக ஒரு குழந்தையின் ஜெனனகாலத்தில் குருவினுடைய ஸ்புடம் பாகை 28-கலை 17 ஆனுல் அதனுடைய ஓரை என்னவென்பதை அறிவோம். குருவினுடைய ஸ்புடமாகிய பாகை 28—கலை17 என்பது இந்த வாக்கியத்தில் 2வது எண்ணிற்கு நேராயுள்ள பாகை 15—0கலைக்கு மேற்பட்டு பாகை 30—0கலைக்குள் இருப்பதால் இந்த 2வது எண்ணிற்கு நேராயுள்ள சந்திரன் ஓரையில் குரு இருக்கின்ற தென்று ஏற்படும். இவ்விதமாகவே மற்ற கிறகங்களின் ஓரையை அறியவும்

17-வது வாக்கியம்—திரிம்சாம்சாதிபதி கணிதம்.

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் திரிம்சாம்சாதிபதியை வெகு சுலபமாகப் அறியலாம். திரிம்சாம்சம் என்பது ஒரு இராசியை 30 சமபாகமாகப் பங்கிட்டு அதிலிருந்து கிரகங்களின் நிலையை அறிவது எனபதாம். கிரகங்கள் இருக்கின்ற திரிம்சாம்சாதிபதியைக் காட்டு கின்றதற்கு திரிம்சாம்சம் என்றுபெயர். உதாரணமாக ஒரு குழந்தை யின் ஜெனனகாலத்தில் குருவினுடையஸ்புடம் பாகை 28—கலை 17 ஆனுல் அதனுடைய திரிம்சாம்சாதிபதியை அறிவோம். குருவி னுடையஸ்புடமாகிய பாகை 28—கலை17 என்பது இந்த வாக்கியத்தில் 5வது எண்ணிற்கு நேராயுள்ள பாகை 25—0கலைக்கு மேற்பட்டு பாகை 30—0கலைக்குள் இருப்பதால் இந்த 5வது எண்ணிற்கு நேரா யுள்ள சுக்கிரன்தான் இந்த குருவின் திரிம்சாம்சாதிபதியாகின்றது

என்று அறியவும். அதாவது குருகிரகம் சுக்கிரதிரிம்சாம்சையில் இருக்கின்றது என்பதாம். இவ்விதமாகவே மற்ற கிரகங்களின் திரிம்சாம்சாதிபதியை அறியவும்.

18-வது வாக்கியம்ச—சப்த்தமாம்ச சக்கிரம்.

இந்த வாக்கியத்தால் கிரகங்களின் சப்த்தமாங்கிசம் வெகு சுலபமாக அறியலாம். சப்த்தமாங்கிசம் என்பது ஒரு ராசியை 7 சமபாகமாகப்பங்கிட வருகின்றபாகமாகும். கிரகங்கள் இருக்கின்ற சப்த்தமாங்கிசத்தைக் காட்டுகின்றச் சக்கிரத்திற்குச் சப்த்தமாம்ச சக்கிரம் என்று பெயர். உதாரணமாக ஒரு குழந்தையின் ஜெனனகாலத்தில் குருவின்ஸ்புடம் பாகை 28—கலை 17 ஆனால் அதனுடைய சப்தமாம்சம் என்னவென்பதை அறிவோம். குருவினுடையஸ்புடமாகிய பாகை 28—கலை 17 என்பது இந்த வாக்கியத்தில் 7-வது எண்ணிற்கு நேராயுள்ள பாகை 25—கலை 43க்கு மேற்பட்டு பாகை 30—கலை 0க்குள் இருப்பதால் இந்த 7-வது எண்ணிற்கு நேராயுள்ள துலா சப்த்தமாம்சத்தில் குரு இருக்கின்றதென்று ஏற்படும் இவவிதமாகவே மற்ற கிரகங்களின் சப்த்தமாம்சம் அறியுவும்.

19-வது, 20-வது, வாக்கியங்கள்—கிரகதிருக்பலம்.

இந்த வாக்கியங்களுக்கு நவக்கிரக திருக்பலம் அல்லது கிரகங்களின் பார்வையின் அளவைத் தெரிவிக்கும் வாக்கியங்கள் என்று பெயர். எல்லா கிரகங்களும் தாங்கள் இருக்கின்ற ராசியிற்கு 7-ஆம் ராசியைப் பார்க்கின்றவென்றும், செவ்வாய் மேற் சொல்லிய 7-ஆம் வீட்டையும், 4, 8 ஆம் வீட்டையும், குரு 7, 5, 9-ஆம் வீட்டையும், சனி 7, 3, 10-ஆம் வீட்டையும் பார்க்கின்றவென்றும், செவ்வாய், குரு, சனி இவர்கள் தவிற மற்ற கிரகங்களுக்கு 7-ஆம் வீடு தவிற மற்ற வீடுகளுக்கு பார்வை இல்லை என்றும் அநேக புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இது தோராயமானது. உண்மையிலே எல்லா கிரகங்களும் 11, 12, 1-ஆம் வீடுகள் தவிற மற்ற எல்லா வீடுகளையும் பார்க்கின்றனவென்றும் இந்த வீடுகளைக் கிரகங்கள் நோக்கும் பார்வையின் அளவு சில விடங்களில் அதிகப்பட்டுக்கொண்டும் மற்ற விடங்களில் குறைந்து கொண்டும் இருக்கின்றனவென்றும் பழய நூல்களிலும், வானசாஸ்திரத்திலும்

ஜோதிட சாஸ்திரத்திலும் வல்லவராயிருந்த இந்தியா தேசத்து கிரந்த கர்த்தர்கள் சொல்லி இருக்கின்றார்கள். இதை ஒவ்வொருவரும் நம்பித்தான் தீரவேண்டுமென்று இந்த வாக்கியங்களால் நன்றாய் ஏற்படும். மேலும் பிருஹத் ஜாதகம் 2-வது அத்தியாயம் 13-வது சுலோகத்தில் எல்லா கிரகங்களும் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து 3, 10 வீடுகளை கால் பார்வையுடனும், 5, 9-வது வீடுகளை அரைபார்வையுடனும், 4, 8-வது வீடுகளை முக்காற் பார்வையுடனும் 7-வது வீட்டை முழு பார்வையுடனும் பார்க்கின்றன வென்றும், செவ்வாய் 4, 8-வது வீடுகளை முழுபார்வையுடனும். குரு 5, 9-வது வீடுகளை முழுபார்வையுடனும், சனி 3, 10-வது வீடுகளை முழு பார்வையுடனும், பார்க்கின்றனவென்றும் சொல்லி இருக்கின்றது. ஆகையால் ஒரு கிரகத்தின் பார்வையின் அளவு வீடுகளின் தூரத்திற்குத் தகுந்தார்போல் வித்தியாசப்படுகின்றது என்று ஏற்படுகின்றது. இந்த வித்தியாசத்துடனுள்ள எல்லாக்கிரகங்களினுடைய பார்வையின் அளவை இந்த 19-வது வாக்கியத்தில் ஸ்புடமீதியாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கிரகங்களின் பார்வை முதலிய எவ்வித பலங்களையும் ரூபம் என்று சொல்லபட்ட ஒரு அளவைக் கொண்டு அளப்பது வழக்கம். எல்லா பலங்களின் முழு பலம் இத்தனை ரூபம் என்று சொல்லப்படும் இந்த புத்தகத்தில் 1 ரூபத்தை 100 சமபாகமாகப் பங்கிட்டு 1 ரூபத்திற்கு 100 பங்கு என்று கணக்கிட்டு 100ல் இத்தனை பங்கு என்பதைக் கொடுத்திருக்கின்றோம். பார்வையின் அளவை நூற்றில் இத்தனை பங்கு என்று கொடுத்திருக்கின்றது. எல்லா கிரகங்களும் 3, 10-வது வீடுகளைக் கால்பார்வையுடன் பார்க்கின்றன என்று மேலே சொல்லி இருக்கின்றது. 3, 10-வது வீடு என்பது 3-வது வீடு ஆரம்பிக்கும் இடம் என்றும், 10-வது வீடு ஆரம்பிக்கும் இடம் என்றும் அர்த்தங்கொள்ள வேண்டியது. 3-வது வீட்டின் ஆரம்பத்தின் ஸ்புடம் பாகை 60—கலை 0 ஆகும். இந்த வாக்கியத்தில் 60—பாகைக்கு எதிரில் 25 என்ற எண் இருப்பதைக் கவனிக்கவும். 25 என்பது நூற்றில் 25 பங்கு என்று இங்கு அர்த்தமாகும். அதாவது 60—பாகைக்கு 100ல் 25 பங்கு பார்வை என்பதாம். 100ல் 25 பங்கு கால் பாகமானதால் 60 பாகையின் அளவு கால் பாகம் என்று ஏற்படும். இவ்விதமாகவே 10-வது வீட்டின்

ஆரம்பத்தின் ஸ்புடம் பாகை 270-கலை 0 ஆகும். இந்த வாக்கியத்தில் 270—பாகைக்கு எதிரில் 25 இருப்பதைப் பார்க்கவும். அதாவது 270–பாகைக்குப் பார்வையின் அளவு கால்பாகம் என்பதாம். மேலும் எல்லாக் கிரகங்களுக்கும் 5, 9-வது வீட்டில் அரைபார்வை என்று மேலே சொல்லி இருக்கின்றது. அதாவது பாகை 120—240 இவைகளில் பார்வை அரைபாகம் என்று ஏற்படும். இந்த வாக்கியத்தில் 120-வது பாகை, 240-வது பாகை இவைகளுக்கு எதிரில் 50 என்ற எண் இருப்பதைக் கவனிக்கவும். 50 என்பது 100-ல் 50 பங்கு என்று தெரிவிக்கும். 100-ல் 50 பங்கு அரை பாகமானதால் பாகை 120, 240 இவைகளில் பார்வையின் அளவு அரைபாகம் என்று இந்த வாக்கியத்தால் ஏற்படும். இவ்விதமாகவே 4, 8-வது வீடுகளின் ஆரம்பமாகிய பாகை 90, 270 இவைகளுக்கு எதிரில் வாக்கியத்தில் 75, இருப்பதால் பார்வையின் அளவு 100-ல் 75 அல்லது முக்கால் பங்கு என்று ஏற்படும் மேலும் 7-வது வீடு ஆரம்பமாகிய பாகை 180-க்கு எதிரில் வாக்கியத்தில் 100 இருப்பதால் பார்வையின் அளவு 100-ல் 100 பங்கு அல்லது முழு பாகம் என்று ஏற்படும். ஒவ்வொரு வீட்டிலும் 30—பாகைகள் அடங்கி இருப்பதால் மேற்கண்ட வீடுகளின் ஆரம்ப பாகைகளுக்கு மாத்திரம் பார்வையின் அளவைக் கொடுக்காமல் 30–பாகைகளில் ஒவ்வொரு பாகைக்கும் பார்வையின் அளவு இந்த வாக்கியத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*குறிப்பு:—ஜெனன நாழிகையில் இருந்து சூரியன் உச்சியிற்கு வரும் நாழிகையைக்கழிக்கமுடியாமற் போனால் அதாவது ஜெனன நாழிகையைவிட சூரியன் உச்சியிற்குவரும் நாழிகை பெரியதானால் ஜெனன நாழிகையுடன் 60கூட்டி வரும் தொகையிலிருந்து ஜெனன நாழிகையைக் கழிக்கவும்.

சூரியன் உச்சியிற்குவரும் நாழிகையை அறியும் விதம்:—பஞ் சாங்கங்களில் சூரியனுடைய உதையம் உச்சம் அஸ்தமனம் ஆகிய இவைகள் கெடியாரமணி நிமிஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சூரியன் உச்சமாகும் அதாவது உச்சியிற்குவரும் மணி நிமிஷத்தி லிருந்து சூரியன் உதயமாகும் மணி நிமிஷத்தைக் கழிக்க வருகின்ற மணி நிமிஷத்தை நாழிகை விநாடியாக மாற்றவருகின்ற நாழிகை விநாடிதான் சூரியன் உதயத்திலிருந்து சூரியன் உச்சமாகும் காலம் ஆகும். உதாரணமாகச் சென்னையில் சித்திரைமீ 1ந்உ யில் காலை மணி6—நிமிஷம் 1க்குச் சூரியன் உதையம் என்றும் பகல்மணி 12 நிமிஷம் 10க்குச் சூரியன் உச்சம் என்றும் ஆனந்தபோதினி பஞ் சாங்கத்தில் போட்டிருக்கின்றது. மணி 12-நிமிஷம் 10ல் இருந்து மணி 6-நிமிஷம் 1யைக்கழிக்க மணி6—நிமிஷம் 9 ஆகும். இதை 1மணிக்கு $2\frac{1}{2}$ நாழிகையாகவும் 1நிமிஷத்திற்கு $2\frac{1}{2}$ விநாடியாகவும் மாற்ற 15நாழிகை $22\frac{1}{2}$ விநாடியாகும். ஆகையால் சூரியனுடைய

உச்சம் சூரியனுடைய உதயத்திலிருந்து 15நாழிகை 22½விநாடிக்கு நேரிடுகிறது என்பதாம். அதாவது சூரிய உதயாதி நாழிகை15-விநாடி 22½க்கு சூரிய உச்சம் என்பதாம்.

பஞ்சாங்கங்களில் சூரியஉச்சம் கொடுக்காமல் சூரிய உதையம் அஸ்தமனம் கொடுத்திருந்தால் இவைகளிலிருந்து சூரியஉச்சத்தைக் கணிக்கலாம். சூரியஉதையமணி நிமிஷத்துடன் சூரிய அஸ்தமன மணி நிமிஷத்தைக் கூட்டிவரும் மணி நிமிஷத்தை இரண்டில் வகுக்க வேண்டியது. அப்படி வகுக்கவரும் மணி நிமிஷத்துடன் 6மணி—0 நிமிஷம் சேர்க்க வருகின்ற மணி நிமிஷமே சூரிய உச்சமணி நிமிஷமாகும். உதாரணமாக ஆனந்தபோதனி பஞ்சாங்கத்தில் சித்திரைமீ 21ங்வ சென்னையில் சூரிய உதையம் காலைமணி 5-நிமிஷம் 51க்கும் அஸ்தமனம் மாலைமணி6-நிமிஷம் 21க்கும் என்று கண்டிருக்கின்றது மணி 5-நிமிஷம் 51 உடன் மணி6—நிமிஷம் 21யைக் கூட்டமணி 12 நிமிஷம் 12 ஆகும். இதை 2ஆல்வகுக்க மணி6-நிமிஷம் 6ஆகும் இத்துடன் 6மணி—0நிமிஷத்தைக் கூட்ட மணி 12-நிமிஷம் 6ஆகும். இந்தமணி 12-நிமிஷம் 6தான் சூரிய உச்சமாகும் காலம். அதாவது அன்று பகல் 12மணி—6நிமிஷத்திற்குச் சூரியன் உச்சமாகும் என்பதாம் இதைத்தான் அப்பஞ்சாங்கத்தில் அன்று சூயன் உச்சமாகும் காலம் என்று போட்டிருப்பதைக் கவனிக்கலாம்.

29-வது வாக்கியம்—பட்சபலம் அல்லது வளர்பிறை தேய்பிறை பலம்.

சுபக்கிரகங்களின் பலம் அமாவாசை முதல் பௌர்ணமிவரையிலும் அதிகப்பட்டுக் கொண்டும், பௌர்ணமிமுதல் அமாவாசை வரையிலும் குறைந்து கொண்டும் இருக்கும். பாவக்கிரகங்களின் பலம் அமாவாசைமுதற்கொண்டு பௌர்ணமிவரையிலும் குறைந்து கொண்டும் பௌர்ணமிமுதல் அமாவாசை வறையிலும் அதிகப்பட்டுக்கொண்டும் இருக்கும். அமாவாசையில் சுபக்கிரகங்களுக்குப்பலம் பூஜ்ஜியம் என்றும் பாபக்கிரகங்களுக்கும் பூர்ணபலம் என்றும் பௌர்ணமியில் சுபகிரகங்களுக்குப் பூர்ணபலம் என்றும் பாபக்கிரகங்களுக்குப்பலம் பூஜ்ஜியம் என்றும் அறியவும். குரு சுக்கிரன் புதன் சந்திரன் இவர்களைச் சுபங்கிரகங்களாகவும் சூரியன் செவ்வாய் சனி இவர்களைப் பாபகிரங்களாகவும் பாவிக்கவேண்டியது.

கிரகங்களின் பட்சபலம் அறியும் விதம்:—சந்திரனுடைய ஸ்புடத்தின் பாகை கலையிலிருந்து சூரியனுடைய ஸ்புடத்தின் பாகை கலையைக்கழிக்க வருகின்ற பாகைகலையை முழுபாகையாக ஆக்கவும். இப்படிவருகின்ற பாகையின் எண்ணிற்கு நேராய் திக்குப்பலத்தின் வாக்கியத்தில் அதாவது 26வது வாக்கியத்தில் கொடுத்துள்ள அளவே பாபக்கிரகத்தின் பட்சபலமாகும். இந்த அளவின் எண்ணை 100ல் இருந்து கழிக்கவருகின்ற எண்ணே சுபக்கிரகத்தின் பட்சபலமாகும். உதாரணமாக சந்திரனுடைய ஸ்புடமாகிய பாகை 118–10 கலையிலிருந்து சூரியனுடைய ஸ்புடமாகிய பாகை 167–2கலையைக் கழிக்க வருகின்ற முழுபாகை 311 என்று வைத்துக்கொள்வோம் திக்குப்பல அளவுவாக்கியத்தில் 311 பாகைக்கு நேரில் 73 இருக்கின்றது. ஆகையால்பாபக்கிரகத்தின் பட்சபலம் 100ல் 73பங்குஎன்பதாம். இந்த 73யை 100ல் இருந்து கழிக்க 27வரும். ஆகையால் சுபக்கிரகத்தின் பட்சபலம் 100ல் 27பங்கு என்பதாம்.

30-வது வாக்கியம்—தினராத்திரி திரிபாகப்பலம்:—பகற் பொழுதை மூன்று சமபாகமாகப்பங்கிடவும். பகற் பொழுதிற்கு அகஸ் என்று பெயர். ஆகையால் அகசை 3சமபாகமாகப்பங்கிடவும். அகஸ் பஞ்சாங்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அகஸ்பஞ்சாங்கங்களில் கொடுக்கப்படாமலிருந்து சூரியஉதையமும் அஸ்தமனமும் கொடுக்கப்பட்டிருந்தால் இவைகளிலிருந்து அகசைப்பின் வருமாறு கணிக்கலாம். சூரிய அஸ்தமன்மணி நிமிஷத்துடன் 12மணி–0 நிமிஷம் கூட்டவருகின்ற மணி நிமிஷத்திலிருந்து சூரிய உதையமணி நிமிஷத்தைக்கழிக்க வருகின்றமணி நிமிஷகாலமே பகற்பொழுது அல்லது அகசு ஆகும். இந்தமணி நிமிஷகாலத்தை நாழிகை விநாடியாகமாற்ற அகசு நாழிகை விநாடியில் ஏற்படும். உதாரணமாக ஆனந்தபோதனி பஞ்சாங்கத்தில் சென்னையில் சித்திரைமீ 11ந்உ சூரிய உதையம் மணி 5-நிமிஷம்56க்கும்அஸ்தமனம் மணி6-நிமிஷம் 19க்கு நேரிடுவதாகப் போட்டிருக்கின்றது. இந்தமணி 6-நிமிஷம் 19உடன் 12மணி–0 நிமிஷம் கூட்ட 18மணி–19 நிமிஷம்வரும். இதிலிருந்து 15மணி-56 நிமிஷத்தைக்கழிக்க 12மணி-23நிமிஷம்வரும். இதுதான் அகசு அல்லது பகற்பொழுதின் அளவு. இதைநாழிகை விநாடியாக மாற்ற அகசு 30நாழிகை-57½ விநாடி ஆகும் அதாவது அகசு நாழி

கை 30 விநாடி-58 ஆகும். அகசை 3சமபாகமாகப்பங்கிட வருகின்ற 1வதுபாகம் புதனுடைய காலமாகும், 2வது பாகம் சூரியனுடைய காலமாகும் 3-வது பாகம் சனியினுடைய காலமாகும். பகலும் இரவும் கொண்ட 60நாழிகையில் பகலின் காலமாகிய 30 நாழிகை—58 விநாடியைக்கழிக்க வருகின்ற 29நாழிகை—2விநாடியே இரவின் மொத்தகாலமாகும். இதை 3சமபாகமாகப்பங்கிட வருகின்றஇரவின் முதற்பாகம் சந்திரனுடைய காலமாகும், 2வதுபாகம் சுக்கிரனுடைய காலமாகும், 3வதுபாகம் செய்வாயினுடைய காலமகும். ஜெனன காலம் எந்த கிரகத்தின் பாகத்தைச் சேர்ந்ததோ அந்த கிரகத்திற்கு இதனுல் திரிபாகபலம் 100என்று அறியவும். ஜெனன நாழிகை எந்த பாகத்தில் இருந்த போதிலும் குருவிற்கு திரிபாகப்பலம் 100 என்று அறியவும். ஜெனனகாலம் எந்த கிரகத்தைச் சேர்ந்ததோ அந்த கிரகமும், குருவும, நீங்கலாக நின்ற மற்ற கிரகங்களுக்குத் திரிபாகபலம் பூஜ்ஜியமாகும். இங்கு சொல்லிய திரிபாக கால அதிபதிகள் அடியிற்கண்டபடி ஆகும்:—

பகலில்	இரவில்
1-வது பாகம் புதனுடையது	1-வது பாகம் சந்திரனுடையது
2 ,, சூரியனுடையது	2 ,, சுக்கிரனுடையது
3 ,, சனியினுடையது	3 ,, செவ்வாயினுடையது

குருவிற்கு எந்த பாகத்திலும் திரிபாகபலம் 100.

31-வது வாக்கியம்—அயன பலம்.

உத்திர கிராந்தி பாகை	சூரியன் செவ்வாய்குரு சுக்கிரன், புதன் அயன பலம்	சந்திரன் சனி அயன பலம்	தட்சண கிராந்தி பாகை	சூரியன், செவ்வாய், குரு, சுக்கிரன் அயன பலம்	சந்திரன் சனி, புதன் அயனபலம்
0	50	50	0	50	50
1	52	48	1	48	52
2	54	46	2	46	54
3	56	44	3	44	56
4	58	42	4	42	58
5	60	40	5	40	60
6	62	37	6	37	62
7	65	35	7	35	65
8	67	33	8	33	67
9	69	31	9	31	69
10	71	29	10	29	71
11	73	27	11	27	73
12	75	5	12	25	75
13	77	3	13	23	77
14	79	21	14	21	79
15	81	19	15	19	81
16	83	17	16	17	83
17	85	15	17	15	85
18	87	12	18	12	87
19	90	10	19	10	90
20	92	8	20	8	92
21	94	6	21	6	94
22	96	4	22	4	96
23	98	2	23	2	98
24	100	0	24	0	100

32-வது வாக்கியம்—உப அஹர்கண வாக்கியம்.

1778-ஆம் செப்டம்பர்மீ 30ங்உ முதல் கீழ்கண்ட ஆம் ஜனவரிமீ 1ங்உ ஆரம்பம் வரையில் செல்லான தினங்கள்.

வருஷம்.	உப அஹர்கணம்	வருஷம்.	உப அஹர்கணம்	வருஷம்.	உப அஹர்கணம்	வருஷம்.	உப அஹர்கணம்
1779	93	1829	11050	1859	22007	1889	32965
1800	458	1830	11415	1860	22372	1890	33330
1801	823	1831	11780	1861	22738	1891	33695
1802	1188	1832	12145	1862	23103	1892	34060
1803	1553	1833	12511	1863	23468	1893	34426
1804	1918	1834	12876	1864	23833	1894	34791
1805	2284	1835	13241	1865	24199	1895	35156
1806	2649	1836	13606	1866	24564	1896	35521
1807	3014	1837	13972	1867	24929	1897	35887
1808	3379	1838	14337	1868	25294	1898	36252
1809	3745	1839	14702	1869	25660	1899	36617
1810	4110	1840	15067	1870	26025	1900	36982
1811	4475	1841	15433	1871	26390	1901	37347
1812	4840	1842	15798	1872	26755	1902	37712
1813	5206	1843	16163	1873	27121	1903	38077
1814	5571	1844	16528	1874	27486	1904	38442
1815	5936	1845	16894	1875	27851	1905	38808
1816	6301	1846	17259	1876	28216	1906	39173
1817	6667	1847	17624	1877	28582	1907	39538
1818	7032	1848	17989	1878	28947	1908	39903
1819	7397	1849	18355	1879	29312	1909	40269
1820	7762	1850	18720	1880	29677	1910	40634
1821	8128	1851	19085	1881	30043	1911	40999
1822	8493	1852	19450	1882	30408	1912	41364
1823	8858	1853	19816	1883	30773	1913	41730
1824	9223	1854	20181	1884	31138	1914	42095
1825	9589	1855	20546	1885	31504	1915	42460
1826	9954	1856	20911	1886	31869	1916	49825
1827	10319	1857	21277	1887	32234	1917	43191
1828	10684	1858	21642	1888	32599	1918	43556

32-வது வாக்கியம்-உப அஹர்கணவாக்கியம்—தொடர்ச்சி

வருஷம்.	உப அஹர் கணம்	வருஷம்.	உப அஹர் கணம்	வருஷம்.	உப அஹர் கணம்	வருஷம்.	உப அஹர் கணம்
1919	43921	1941	51957	1963	59992	1985	68028
1920	44286	1942	52322	1964	60357	1986	68393
1921	44652	1943	52687	1965	60723	1987	68758
1922	45017	1944	53052	1966	61088	1988	69123
1923	45382	1945	53418	1967	61453	1989	69489
1924	45747	1946	53783	1968	61818	1990	69854
1925	46113	1947	54148	1969	62184	1991	70 19
1926	46478	1948	54513	1970	62549	1992	70584
1927	46843	1949	54879	1971	62914	1993	70950
1928	47208	1950	55244	1972	63279	1994	71315
1929	47574	1951	55609	1973	63645	1995	71680
1930	47939	1952	55974	1974	64010	1996	72045
1931	48304	1953	56340	1975	64375	1997	72411
1932	48669	1954	56705	1976	64740	1998	72776
1933	49035	1955	57070	1977	65106	1999	73141
1934	49400	1956	57435	1978	65471	2000	73506
1935	49765	1957	57801	1979	65836		
1936	50130	1958	58166	1980	66201		
1937	50496	1959	58531	1981	66567		
1938	50861	1960	58896	1982	66932		
1939	51226	1961	59262	1983	67297		
1940	51591	1962	59262	1984	67662		

32—(2)-வது வாக்கியம்-உப அஹர்கண வாக்கியம்.

ஜனவரியீ 1ந்தேதி முதல் கீழ்கண்ட மாதத்திய 1ந்தேதி ஆரம்பம் வரையில் சொல்லான தினங்கள்.

மாதம்	சென்ற நாட்கள் சாதாரண வருஷம்.	சென்ற நாட்கள் லீப் வருஷம்	மாதம்.	சென்ற நாட்கள் சாதாரண வருஷம்.	சென்ற நாட்கள் லீப் வருஷம்
பிப்ரவரி	31	31	ஆகஸ்டு	212	213
மார்ச்சி	59	60	செப்டம்பர்	243	244
ஏப்ரல்	90	91	அக்டோபர்	273	274
மே	120	121	நவம்பர்	304	305
ஜூன்	151	152	டிசம்பர்	334	335
ஜூலை	181	182			

32—(3)-வது வாக்கியம்-உப அஹர்கண வாக்கியம்.

அந்தந்த மாதம் 1ந்தேதி முதல் தேவையான தேதி ஆரம்பம் வரையில் செல்லான தினங்கள்.

தேதி	செல்லான தினம்	தேதி	சொல்லான தினம்	தேதி	செல்லான தினம்	தேதி	சொல்லான தினம்
1	0	9	8	17	16	25	24
2	1	10	9	18	17	26	25
3	2	11	10	19	18	27	26
4	3	12	11	20	19	28	27
5	4	13	12	21	20	29	28
6	5	14	13	22	21	30	29
7	6	15	14	23	22	31	30
8	7	16	15	24	23		

32—(4)-வது வாக்கியம்-ஓராதிபதி வாக்கியம்.

வரிசை எண்	முதற்கொண்டு நாழிகை	வரையிலும் நாழிகை	ஞாயிற்றுக்கிழமை	திங்கட்கிழமை	செவ்வாய்க்கிழமை	புதன்கிழமை	வியாழக்கிழமை	வெள்ளிக்கிழமை	சனிக்கிழமை
1	0	2½	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி
2	2½	5	சு	சனி	சூ	சந்	அ	பு	குரு
3	5	7½	பு	குரு	சு	சனி	சூ	சந்	அ
4	7½	10	சந்	அ	பு	குரு	சு	சனி	சூ
5	10	12½	சனி	சூ	சந்	அ	பு	குரு	சு
6	12½	15	குரு	சு	சனி	சூ	சந்	அ	பு
7	15	17½	அ	பு	குரு	சு	சனி	சூ	சந்
8	17½	20	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி
9	20	22½	சு	சனி	சூ	சந்	அ	பு	குரு
10	22½	25	பு	குரு	சு	சனி	சூ	சந்	அ
11	25	27½	சந்	அ	பு	குரு	சு	சனி	சூ
12	27½	30	சனி	சூ	சந்	அ	பு	குரு	சு
13	30	32½	குரு	சு	சனி	சூ	சந்	அ	பு
14	32½	35	அ	பு	குரு	சு	சனி	சூ	சந்
15	35	37½	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி
16	37½	40	சு	சனி	சூ	சந்	அ	பு	குரு
17	40	42½	பு	குரு	சு	சனி	சூ	சந்	அ
18	42½	45	சந்	அ	பு	குரு	சு	சனி	சூ
19	45	47½	சனி	சூ	சந்	அ	பு	குரு	சு
20	47½	50	குரு	சு	சனி	சூ	சந்	அ	பு
21	50	52½	அ	பு	குரு	சு	சனி	சூ	சந்
22	52½	55	சூ	சந்	அ	பு	குரு	சு	சனி
23	55	57½	சு	சனி	சூ	சந்	அ	பு	குரு
24	57½	60	பு	குரு	சு	சண்	சூ	சந்	அ

33-வது வாக்கியம்-ஜேஷ்டாபலம்.

ஜேஷ்டாபலம் என்பது கிரகங்களின் ஓட்டத்தால் உண்டாகும் பலம் என்பதாம். சூரியனுக்கு ஜேஷ்டாபலத்தின் அளவு சூரியனுடைய அயன பலத்தின் அளவே ஆகும். சந்திரனுக்கு ஜேஷ்டா பலத்தின் அளவு சந்திரனுடைய பட்சபலத்தின் அளவே ஆகும்.

மற்ற கிரகங்களின் ஜேஷ்டாபலம் அறியவேண்டுமானால் அவைக ளின் ஜேஷ்ட கேந்திரம் என்று சொல்லப்பட்ட ஒருஅளவை முத லில் அறியவேண்டும். ஜேஷ்ட கேந்திரம் என்பதற்குச் சீக்கிரகேந் திரம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஜேஷ்டகேந்திரம் அல்லது சீக்கிரகேந்திரம் என்பதை அறிந்துகொள்ள வேணுமானால் வான சாஸ்திரம் தெரியவேண்டியது அவசியம். பூமியிலிருந்து பார்க்கும் போது சூரியனுடன் ஒருகிரகம் சேர்ந்து இவ்விரண்டும் ஒரேவிடத் திலிருந்தால் இவ்விடத்திற்குச் சீக்கிரோக்ச்சம் என்று பெயர். அந்த கிரகத்தின் மத்திமஸ்புடத்தையும் சுத்தஸ்புடத்தையுங் கூட்ட வருகின்றதை இரண்டால் வகுக்க வருகின்ற ஸ்புடத்திலிருந்து சீக்கிரோக்ச்சத்தைக்கழிக்க வருகின்றதற்குச் சீக்கிரகேந்திரம் என்று பெயர். சீக்கிரகேந்திரம் பூஜ்ஜியமானால் அந்த கிரகத்திற்கு ஜேஷ்டாபலம் பூஜ்ஜியம் என்றும், 180 பாகையானால் ஜேஷ்டாபலம் முழுபலம் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் சீக்கிர கேந்திரம் பூஜ்ஜியம் முதல் 180 பாகை வரையிலும் அதிகப்பட் டுக்கொண்டுவந்தால் ஜேஷ்டாபலம் பூஜ்ஜியம் முதல் முழுபலம் வரை யிலும் அதிகப்பட்டுக் கொண்டுவரும் என்றும், சீக்கிரகேந்திரம் 180 பாகை முதல் 360 பாகைவரையிலும் அதிகப்பட்டுக் கொண்டுவந் தால் ஜேஷ்டாபலம் முழுபலத்திலிருந்து பூஜ்ஜியபலம் வரையிலும் குறைந்து கொண்டேவரும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் ஜேஷ்டாபலம் அறியவேண்டுமானால் சீக்கிரோக்ச்சம் கிரகசுத்தஸ்புடம், மத்திமஸ்புடம்ஆகிய இவைகளை அறியவேண்டும். இவைகளை அறியவேண்டுமானால் வானசாஸ்திரம் அதிகமாகத் தெரிந்திருக்கவேண்டும். வானசாஸ்திரம் அதிகமாகத் தெரிந்தவர் கள் அதிகமாகயிருக்கமாட்டார்களாதலாலும், இந்த புத்தகம் வான சாஸ்திரம் தெரியாதவர்களுக்குங்கூட உபயோகப்படும்படியாய் எழுதி இருப்பதாலும், சீக்கிரகேந்திரம் கணித்து அதிலிருந்து ஜேஷ்டாபலம் கணிப்பது சிரமமானதாலும், அடியிற்கண்டபடி ஒரு சுலபமானவழி கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தவழியால் ஜேஷ்டா பலத்தை வானசாஸ்திரந் தெரியாதவர்கள்கூட வெகுசுலபமாக நமக்குத் தேவையானவரையில் சரியாக இருக்கும்படி கணிக்கலாம்.

ஒருகிரகம் சூரியனுடன் சேர்ந்து ஸ்புடரீதியாய் ஓரேபாகை, கலையில் இருப்பதற்கு "உவாந்தம்" என்றும், சூரியனைவிட்டு 180 பாகை பிரிந்து இருப்பதற்கு "உவா" என்றும் சொல்லுவோம். சந்திரன், செவ்வாய், குரு, சனிஆகிய இந்த 4 கிரகங்களும் சூரியனை விட்டு 180 பாகை பிரிந்து இருக்கக் கூடுமாதலால் இவைகளுக்கு "உவா" என்பதுஉண்டு. புதன், சுக்கிரன் ஆகிய இவ்விரண்டுகிரகங் களும் சூரியனைவிட்டு 180பாகைவரையிலும் பிரிந்து இருக்கமுடியா தாதலால் இவைகளுக்கு "உவா" என்பது கிடையாது. எல்லாகிரகங் களும் சூரியனுடன் சேர்ந்து இருக்கக்கூடுமாதலால் எல்லா கிரகங் களுக்கும் "உவாந்தம்" என்பது உண்டு. புதன் அல்லது சுக்கிரன் சூரியனுடன் சேர்ந்து இருக்கும்போது ஒருசமயத்தில் பூமிக்கு அருகாமையும் மற்றொருசமயத்தில் தூரமாயு மிருக்கக்கூடுமாதலால் இந்த இரண்டு கிரகங்களுக்குமாத்திரம் உவாந்தம் என்பது இரு வகைப்படும். இவைகளை "சமீப உவாந்தம்" என்றும் "தூரஉவாந் தம்" என்றும் சொல்லுவோம். ஒவ்வொரு கிரகத்தின் "உவா" வும் "உவாந்தமும்" இப்புத்தகம் நிமித்தமாக நமது ஆனந்தபோதினி பஞ்சாங்கத்தில் கிரகங்களின் சாரத்தில் கொடுக்கப்பட்டுவரும். இப் பஞ்சாங்கத்தில் இவைகள் கொடுக்கப்படாவிட்டால், "நாடிகல் ஆல் மனெக்கு" என்றபுத்தகத்தில் இருந்து தெரிந்துகொள்ளலாம். இந்த நாடிகல் ஆல்மனெக்கில் உவா என்பதற்கு "ஆப்போசிஷன" என்றும் உவாந்தத்திற்குக் "கஞ்ஜெங்க்ஷன்" என்றும் "சமீப உவாந்த" த்திற்கு இன்பீரியர் கஞ்ஜெங்க்ஷன் என்றும், தூரஉவாந் வத்திற்கு சுப்பீரியர் கஞ்ஜெங்க்ஷன் என்றும் சொல்லப்படும்.

செவ்வாய், குரு, சனி இவர்களின் ஜேஷ்டாபலம் கணிக்க:—

பகுதி (1):—ஜெனனகாலத்திற்கு முந்தி ஒரு கிரகத்திற்கு உவாவும் ஜென்னகாலத்திற்குப் பிந்தி அதேகிரகத்திற்கு உவாந்தமும் நேரிடும் போது ஜேஷ்டாபலம் கணிக்க:— உவாநேரிடும் வேளையிலும் உவாந் தம் நேரிடும் வேளையிலும் அந்த கிரகத்தின் ஸ்புடம்கணித்து வைத் துக் கொள்ளவும். ஆனந்தபோதினி பஞ்சாங்கத்தில் கிரகங்களின்ஸ் புடம் தினந்தோறுங் கொடுக்கப்பட்டிருப்பதால் நமக்குத் தேவை யான காலத்திற்குக் கிரகஸ்புடங்கணிக்கும் வழியை முன்னமே சொல்லியிருப்பதால் அந்த வழிபிரகாரம் உவாகாலத்திலும் உவாந்த

காலத்திலும் அந்த கிரகத்தின் ஸ்புடம் கணிக்கவேண்டியது. மேலும் உவா நேரிடுங்காலத்திற்கும் உவாந்தம் நேரிடுங்காலத்திற்கும் இடையில் அந்த கிரகத்திற்கு வக்கிரநிவிர்த்தி நேரிடும். அந்த வக்கிர நிவர்த்திகாலம் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும். அந்த வக்கிர நிவர்த்திகாலத்தை அறிந்து அந்த காலத்தில் அந்த கிரகத்தினுடைய ஸ்புடத்தை முன்சொல்லியதுபோல கணிக்கவேண்டியது. பிறகு உவா நேரிடுங்காலம் முதல் வக்கிரநிவர்த்தி நேரிடுங்காலம் வரையில் அந்தகிரகம் செல்லும் தூரத்தை அறியவேண்டியது. இந்த தூரமானது உவாகாலத்திய ஸ்புடத்திலிருந்து வக்கிரநிவர்த்தியாகுங்காலத்திய ஸ்புடத்தைக்கழிக்க வருகின்ற தூரமாகும். பிறகு வக்கிர நிவர்த்தியாகுங்காலம்முதல் உவாந்தம் நேரிடுங்காலம் வரையில் அந்த கிரகம் செல்லும் தூரத்தை அறியவேண்டியது இந்த தூரமானது உவாந்தகால ஸ்புடத்திலிருந்து வக்கிர நிவர்த்தியாகுங்காலத்திய ஸ்புடத்தைக் கழிக்கவருகின்ற தூரமாகும். இந்த இரண்டு தூரங்களேயுங் கூட்டவருகின்ற மொத்ததூரத்தைப் பூர்ணசீக்கிர கேந்திரம் என்று சொல்லுவோம். பிறகு உபாநேரிடுங்காலம் முதல் ஜெனனகாலம் வரையிலும் அந்த கிரகம் சென்றிருக்கும் மொத்த தூரத்தை முன்போல அறியவேண்டியது. இந்த தூரத்திற்குப் "பின்ன சீக்கிரகேந்திரம்" என்று சொல்லுவோம். பூர்ணசீக்கிர கேந்திரத்திற்கும் பின்ன சீக்கிரகேந்திரத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப் பூர்ணசீக்கிர கேந்திரத்தால் வகுக்க அந்த கிரகத்திற்கு ஜேஷ்டாபலம் வரும். ஜெனனகாலத்திற்கு முந்தி உவாவும் ஜெனன காலத்திற்குப் பிந்தி உவாந்தமும் நேரிடும்போதுமாத்திரம் இவ்விதமாக ஜேஷ்டாபலம் கணிக்க வேண்டியது.

1-வது உதாரணம் :—உதாரணமாக ஒருகுழந்தை 1869ம்ஸு அக்டோபர்மீ 2ங்வ காலை 7மணி—13 நிமிஷத்திற்கு ஜெனனமானதென்றும், சனி என்கிற கிரகத்திற்கு 1869ம்ஸு ஜூன்மீ 4ங்வ மாலை 5மணி—8நிமிஷத்திற்கு உவா நேரிட்டதென்றும், 1869ம்ஸு ஆகஸ்ட்டுமீ 14ங்வ இரவு 4மணி—2நிமிஷத்திற்கு வக்கிர நிவர்த்தி நேரிட்டதென்றும், 1869ம்ஸு டிசம்பர்மீ 11ங்வ மாலை 5மணி 44நிமிஷத்திற்கு உவாந்தமும் நேரிட்டதென்றும் வைத்துக் கொண்டால் சனிக்கு ஜேஷ்டாபலம் கணிப்போம். இந்த காலங்களில் சனியினுடைய ஸ்புடத்தைக் கணிக்க அடியிற் கண்டபடி ஆகும்.

பாகை—கலை.

(1) 4–6–1869ல் மாலை 5மணி—8நிமிஷத்தில் உவா
அப்போது ஸ்புடம் 231—59

(2) 14–8–1869ல் இரவு 4மணி—2 நிமிஷத்தில்
வக்கிரநிவர்த்தி அப்போது ஸ்புடம் 228—38

(3) 2–10–1869ல் காலை 7மணி—13நிமிஷத்தில்
ஜெனனம் அப்போது ஸ்புடம் 230—27

(4) 11–12–1869ல் மாலை 5மணி—44நிமிஷத்தில்
உவாந்தம் அப்போது ஸ்புடம் 237—42

இவ்விதமாக தேதிவரிசையாக எழுதிக்கொள்ள வேண்டியது. உவாகாலத்திய ஸ்புடமாகிய 231பாகை–59கலையிலிருந்து வக்கிர நிவர்த்தியாகுங்காலத்திய ஸ்புடமாகிய 228பாகை—38கலையைக்கழிக்க 3பாகை—21கலை வரும். இந்த 3பாகை—21கலைதான் உவா நேரிடுங் காலம் முதல் வக்கிர நிவர்த்தியாகும் காலம் வரையிலும் சனி செல்லும் தூரமாகும். பிறகு உவாந்தகால ஸ்புடமாகிய 237 பாகை 42கலையிலிருந்து வக்கிரம் நிவர்த்தியாகுங்காலத்திய ஸ்புடமாகிய 228பாகை—38கலையைக்கழிக்க 9பாகை—4கலைவரும். இந்த 9பாகை 4கலைதான் வக்கிர நிவர்த்தியாகுங்காலம் முதல் உவாந்தம் நேரிடுங் காலம் வரையில் சனி செல்லுந்தூரமாகும். இவ்விரண்டு தூரங்களை யும் அதாவது 3பாகை—21கலையையும் 9பாகை—4கலையையுங் கூட்ட 12பாகை—25கலைவரும். இந்த 12பாகை—25கலைதான் சனி யினுடைய பூர்ண சீக்கிர கேந்திரமாகும்.

பிறகு உவா நேரிடுங்காலம் முதல் ஜெனனகாலம் வரையிலும் சனி செல்லும் மொத்த தூரத்தைக் கணிப்போம். இந்த உதாரணத் தில் ஜெனன காலத்திற்கு முந்தி வக்கிர நிவர்த்தி நேரிடுவதைக் கவனிக்கவும். உவா காலத்திய ஸ்புடமாகிய 231பாகை 59கலையிலி ருந்து வக்கிரநிவர்த்திகால ஸ்புடமாகிய 228பாகை—38கலையைக் கழிக்க 3பாகை—21கலைவரும். இது உவாகாலமுதல் வக்கிரநிவர்த்தி காலம் வரையில் கிரகம் செல்லுந் தூரமாகும். (ஜெனன காலத்திற் குப் பிந்தி வக்கிர நிவர்த்தி நேரிடுமானால் இந்த தூரத்தைக்கணித்து சேர்க்கக்கூடாது.) பிறகு ஜெனனகால ஸ்புடமாகிய 230பாகை-27

கலையிலிருந்து வக்கிரநிவர்த்திகால ஸ்புடமாகிய 228பாகை—38கலை யைக்கழிக்க 1பாகை—49கலைவரும். இது வக்கிரநிவர்த்திகாலம் முதல் ஜெனனகாலம் வரையில் சனி செல்லுந் தூரமாகும். இவ் விரண்டு தூரங்களையும் *அதாவது 3பாகை—21கலையையும் 1பாகை 49கலையையுங்கூட்ட 5பாகை—10கலை—வரும். இந்த 5பாகை—10கலை தான் உவாகாலம் முதல் ஜெனனகாலம் வரையில் சனி செல்லும் மொத்த தூரமாகும். இந்த 5பாகை—10கலைதான் சனியினுடைய "பின்ன சீக்கிரகேந்திரம்" ஆகும்.

பிறகு பூர்ண சீக்கிரகேந்திரமாகிய 12பாகை—25கலையிலிருந்து பின்ன சீக்கிரகேந்திரமாகிய 5பாகை—10கலையைக் கழிக்க 7பாகை 15கலைவரும். இந்த 7பாகை—15கலையை 12பாகை—25கலையால் வகுக்க சனியின் ஜேஷ்டாபலம் வரும் வகுத்தல் பின்வருமாறு செய்யவேண்டியது. 7பாகை—15கலையைக்கலையாக மாற்ற 435கலை வரும். 12பாகை—25 கலையைக்கலையாக மாற்ற 745கலைவரும். 435யை 100ஆல் பெருக்க 43500 வரும். இந்த 43500யை 745ஆல் வகுக்க வருகின்ற ஈவுதான் ஜேஷ்டாபலம் 100ல் எத்தனை பங்கு என்பதைத் தெரிவிக்கும். 43500யை 745ஆல் வகுக்க ஈவு 58வரும். ஆகையால் ஜெனனகாலத்தில் சனியினுடைய ஜேஷ்டாபலம் 100ல் 58பங்கு என்று அறியவேண்டியது.

* **குறிப்பு**:—ஜெனனகாலத்திற்குப்பிந்தி வக்கிரம் நிவர்த்தி நேரிடுமானால் இரண்டுதூரங்கள் நேரிடாது அதாவது முதலில் சொன்னதூரம் நேரிடாது. இரண்டாவது சொன்ன ஒருதூரந்தான் நேரிடும். இந்த இரண்டாவது தூரந்தான் பின்ன சீக்கிர கேந்திரமாகும்.

பகுதி(2):—ஜெனனகாலத்திற்குமுந்தி ஒருகிரகத்திற்குஉவாந்தமும் ஜெனனகாலத்திற்குப் பிந்தி அதேகிரகத்திற்கு உவாவும் நேரிடும்போது ஜேஷ்டாபலம் கணிக்க.

முந்தி சொல்லிய 1வது பகுதியில் உவாவிற்கும் உவாந்தத்திற்கும் இடையில் வக்கிர நிவர்த்தி நேரிடும் என்று சொன்னோம். இந்த பகுதியில் கண்ட உவாந்தத்திற்கும் உவாவிற்கும் இடையில் வக்கிர ஆரம்பம் நேரிடும். இதுதான் 1வது பகுதியின் வழிக்கும் 2வது பகு

தியின் வழிக்கும் முக்கியமான வித்தியாசம். உவாந்தகாலம் உவா காலம், வக்கிர ஆரம்ப காலம், ஜெனனகாலம் ஆகிய இக்காலங்களில் ஒரு கிரகத்தினுடைய ஸ்புடங்களை முன்போல கணித்து வைக்கவும். பிறகு உவாந்தகால முதல் உவா காலம் வரையிலும் அந்த கிரகம் வக்கிரகதியையுஞ் சேர்த்துக் கணக்கிட மொத்தம் எவ்வளவு தூரம் செல்லுகிறதென்று பார்க்கவும். இந்த மொத்த தூரத்தான் பூர்ண சீக்கிரகேந்திரமாகும். உவாந்தகாலம் முதல் ஜெனனகாலம் வரையில் அந்த கிரகம் செல்லும் மொத்த தூரத்தைக் கணிக்கவும். இந்த மொத்த தூரந்தான் பின்ன சீக்கிரகேந்திரமாகும். பின்னசீக்கிர கேந்திரத்தைப் பூர்ண சீக்கிரகேந்திரத்தால் வகுக்க அந்த கிரகத்திற்கு ஜேஷ்டாபலம்வரும். (குறிப்பு 1வது பகுதியில் பூர்ண சீக்கிர கேந்திரத்திற்கும் பின்ன சீக்கிர கேந்திரத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப் பூர்ணசீக்கிர கேந்திரத்தால் வகுக்கவேண்டியது என்று சொன்னேம். உவாவிற்கும் உவாந்தத்திற்கும் இடையில் ஜெனனம் நேரிட்டால் இவ்விதமாகச் செய்யவேண்டியது. 1-வது பகுதியின் வழிக்கும் 2-வது பகுதியின் வழிக்கும் உள்ள ஒரு சிறிய வித்தியாசம் இது. இதை நன்ருய்க்கவனிக்கவும். இந்தவழியை அடியிற் கண்ட உதாரணத்தால் விளக்கிக் காட்டுவோம். (2-வது உதாரணம்) உதாரணமாக ஒரு குழந்தை 1869ஹு அக்டோபர்மீ 2ந்உ காலே 7மணி–13நிமிஷத்திற்கு ஜெனனமானதென்றும் குரு என்கிற கிரகத்திற்கு 1969ஹு ஏப்ரல்மீ 17ந்உ காலே 10மணி—48நிமிஷத்திற்கு உவாந்தம் நேரிட்டதென்றும் 1869ஹு செப்டம்பர்மீ 9ந்உ இரவு 1மணி–56நிமிஷத்திற்கு வக்கிர ஆரம்பம் நேரிட்டதென்றும், 1869 ஹுநவம்பர்மீ 8ந்உகாலே 10மணி—56நிமிஷத்திற்கு உவா நேரிட்டதென்றும் வைத்துக்கொள்ளுவோம். இந்த காலங்களில் குருவினுடைய ஸ்புடத்தைக் கணிக்க அடியிற் கண்டபடி ஆகும்.

		பாகை—கலே.
(1) 17–4–1869ல் காலே 10மணி —48நிமிஷத்தில்	உவாந்தம் அப்போது ஸ்புடம்.	5—21
(2) 9–9–1869ல் இரவு 1மணி—56நிமிஷத்தில் வக்கிர	ஆரம்பம் அப்போது ஸ்புடம்	29— 6

(3) 2-10-1869ல் 7மணி—13நிமிஷத்தில் ஜெனனம்
அப்போது ஸ்புடம் 28—17

(4) 8-11-1869ல் காலை 10மணி—56நிமிஷத்தில் உவா
அப்போது ஸ்புடம் 24— 2

இவ்விதமாக முன்போலவே எப்போதும் தேதி வரிசையாக எழுதிக்கொள்ளவேண்டியது. வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய பாகை29—6கலையிலிருந்து உவாந்தகால ஸ்புடமாகிய பாகை5—21 கலையைக் கழிக்க 23பாகை—45கலைவரும். இது உவாந்தகாலம் முதல் வக்கிரகாலம் ஆரம்பம் வரையில் கிரகம் செல்லும் தூரமாகும். வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய பாகை29—6கலையிலிருந்து உவா கால ஸ்புடமாகிய பாகை24—2கலையைக் கழிக்க 5பாகை—4கலை வரும். இது வக்கிர ஆரம்பகாலம் முதல் உவாவரையிலும் கிரகம் செல்லும் மொத்ததூரம் ஆகும். இவ்விரண்டையும் அதாவது பாகை 22—45 கலையையும் பாகை5—4கலையையுங் கூட்டவருகின்ற பாகை28—49கலைதான் குரு உவாந்தம் முதல் உவாவரையிலும் செல்லுகின்ற மொத்த தூரம் அல்லது குருவினுடைய பூர்ண சீக்கிர கேந்திரம் ஆகும்.

மேலும் வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய 29பகை—6கலையிலிருந்து உவாந்தகால ஸ்புடமாகிய பாகை5—21கலையை கழிக்க 23-பாகை 45கலைவரும். இது உவாந்தம் முதல் வக்கிர ஆரம்பகாலம் வரையில் குருசெல்லும் மொத்ததூரம் ஆகும். வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய பாகை29—6கலையிலிருந்து ஜெனனகால ஸ்புடமாகிய பாகை28-17கலையைக்கழிக்க பாகை0-49கலைவரும். இதுவக்கிரகால ஆரம்பம் முதல் ஜெனனகாலம் வரையில் குரு செல்லும் தூரம் ஆகும். இவ்விரண்டு தூரங்களாகிய 23பாகை—45கலையும் 0பாகை 49கலையும் கூட்டவருகின்ற 24பாகை—34கலைதான் உவாந்தகாலம் முதல் ஜெனனகாலம் வரையில் குரு செல்லும் மொத்த தூரம் ஆகும். இந்த 24பாகை—34கலைதான் குருவினுடைய பின்ன சீக்கிர கேந்திரம் ஆகும். இந்த பின்ன சீக்கிர கேந்திரமாகிய 24பாகை 34கலையை மேலேவந்த பூர்ண சீக்கிரகேந்திரமாகிய 28பாகை—49 கலையால் வகுக்க குருவின் ஜேஷ்டாபலம் வரும். வகுத்தல் பின்வருமாறு செய்யவும். 24பாகை —34கலையைக் கலையாகமாற்ற 1474கலை.

வரும். 28பாகை—49கலையைக் கலையாகமாற்ற 1729கலைவரும். 1474 கலையை 100ஆல் பெருக்க 147400 வரும். இந்த 147400யை 1729 ஆல் வகுக்க வருகின்ற ஈவுதான் ஜேஷ்டாபலம் 100ல் எத்தனை பங்கு என்பதைத் தெரிவிக்கும். 147400யை 1729ஆல் வகுக்க ஈவு 85 வரும். ஆகையால் ஜெனனகாலத்தில் குருவினுடைய ஜேஷ்டா பலம் 100ல் 85பங்கு என்று அறியவேண்டியது.

புதன், சுக்கிரன் இவைகளின் ஜேஷ்டாபலம் கணிக்க:—புதன் சுக்கிரன் ஆகிய இந்த இரண்டு கிரகங்களுக்கு மாத்திரம் சமீப உவாந்தம், தூரஉவாந்தம் என்று இருப்பதால், செவ்வாய், குரு, சனி இவைகளுக்குச் சொல்லிய உவாவிற்குப் பதிலாக சமீப உவாந் தத்தையும், உவாந்தத்திற்குப் பதிலாகத் தூரஉவாவையும் வைத்துச் செவ்வாய், குரு, சனி இவர்களுக்கு 1-வது பகுதி 2-வது பகுதிக ளில் சொல்லியவழி பிரகாரம் கணிக்க புதன், சுக்கிரன் இவர்களுக்கு ஜேஷ்டாபலம் வரும். அதாவது கீழ்கண்டபடி ஆகும். பகுதி (1):— ஜெனனகாலத்திற்கு முந்தி சமீப உவாந்தமும் ஜெனனகாலத்திற்கு பிந்தி தூரஉவாந்தமும் நேரிட்டால் ஜேஷ்டாபலம் கணிக்க:—சமீப உதாந்தகாலம் முதல் தூரஉவாந்தகாலம் வரையில் கிரகம் செல்லும் மொத்த தூரத்தை முன்போலக் கணிக்கவேண்டியது. இந்த தூரம் பூர்ண சீக்கிர கேந்திரம் ஆகும். பிறகு சமீப உவாந்தகாலம் முதல் ஜெனனகாலம் வரையில் கிரகம் செல்லும் மொத்த தூரத்தைக் கணிக்கவேண்டியது. இந்த தூரம் பின்ன சீக்கிர கேந்திரம் ஆகும். பூர்ணசீக்கிர கேந்திரத்திலிருந்து பின்ன சீக்கிர கேந்திரத்தைக் கழிக்கவருகின்றதைப் பூர்ண சிக்கிரகேந்திரத்தால் வகுக்க ஜேஷ்டா பலம் வரும்.

(3-வது உதாரணம்) உதாரணமாகப் புதனுக்கு

		பாகை—கலை.
(1) 13–3–1927ல் இரவு 8மணி—30நிமிஷத்தில்	சமீப உவாந்தம் அப்போது ஸ்புடம்	329—18
(2) 27–3–1927ல் காலை 7மணி—30நிமிஷத்தில்	வக்கிர நிவர்த்தி அப்போது ஸ்புடம்	321—11
(3) 1–4–1927ல் மாலை 5மணி—30நிமிஷத்தில்	ஜெனனம் அப்போது ஸ்புடம்	322—32

(4) 20–5–1927ல் காலை 9மணி—30நிமிஷத்தில்

தூரஉவாந்தம் அப்போது ஸ்புடம் 35–29

சமீப உவாந்தகால ஸ்புடமாகிய பாகை329—18கலையிலிருந்து வக்கிர நிவர்த்தி காலஸ்புடமாகிய பாகை321—11கலையைக் கழிக்க பாகை8—7கலைவரும். மேலும் தூரஉவாந்த காலஸ்புடமாகிய பாகை 35—29கலையிலிருந்து வக்கிர நிவர்த்தி ஸ்புடமாகிய 321பாகை—11 கலையைக் கழிக்க பாகை74–18கலைவரும். (குறிப்பு 35பாகை–29கலை சிறியதாயும், 321பாகை-11கலை பெரியதாயும் இருப்பதால் 35பாகை 29கலையுடன் ஒருவட்டமாகிய 360பாகையைக் கூட்டவருகின்ற 395பாகை-29கலையிலிருந்து 321பாகை 11-11கலையைக் கழிக்க 74 பாகை-18கலைவரும்.) பாகை8–7கலையையும் 74பாகை-18கலையையுங் கூட்டவருகின்ற 82பாகை 25கலைதான் பூர்ண சீக்கிரகேந்திரம் ஆகும். பிறகு சமீப உவாந்த காலஸ்புடமாகிய பாகை326-18கலையிலிருந்து வக்கிர நிவர்த்திகால ஸ்புடமாகிய பாகை321—11கலையைக் கழிக்க 5பாகை–7கலைவரும். ஜெனனகால ஸ்புடமாகிய 322பாகை 32கலையிலிருந்து வக்கிர நிவர்த்திகால ஸ்புடமாகிய 321பாகை 11கலையைக் கழிக்க 1பாகை—21கலைவரும். 8பாகை–7கலையையும் 1பாகை-21கலையையுங் கூட்டவருகின்ற 9பாகை-28கலைதான் பின்ன சீக்கிர கேந்திரமாகும். பூர்ண சீக்கிர கேந்திரமாகிய 82பாகை-25கலையிலிருந்து பின்ன சீக்கிர கேந்திரமாகாகிய பாகை9–28கலையைக் கழிக்க 72பாகை–57கலைவரும். இந்த 72பாகை-57கலையை 82பாகை 25கலையால் வகுக்க ஜேஷ்டாபலம் வரும். பின்வருமாறு வகுக்க வேண்டியது. 72பாகை—57கலையைக்கலையாக மற்ற 4377கலைவரும். 82பாகை-25கலையைக் கலையாகமாற்ற 4945கலைவரும். இந்த 4377 கலையை 100ஆல் பெருக்க 437700வரும். இந்த 447700யை 4945 ஆல் வகுக்க ஈவு89 வரும். ஆகையால் ஜேஷ்டாபலம் 100ல் 89 பங்கு ஆகும்.

பகுதி (2):—ஜெனன காலத்திற்கு முந்தி தூரஉவாந்தமும் ஜெனனகாலத்திற்கு பிந்தி சமீப உவாந்தமும் நேரிட்டால் ஜேஷ்டாபலம் கணிக்க:–தூரஉவாந்த காலம் முதல் சமீப உவாந்தகாலம் வரையிலும் கிரகம் செல்லும் மொத்த தூரத்தைக் கணிக்கவும், இந்த தூரம் பூர்ண சீக்கிரகேந்திரம் ஆகும். பிறகு தூரஉவாந்த

காலம் முதல் ஜெனனகாலம் வரையில் கிரகம் செல்லும் மொத்த தூரத்தைக் கணிக்கவேண்டியது. இந்த மொத்ததூரம் பின்ன சீக்கிர கேந்திரம் ஆகும். பின்ன சீக்கிர கேந்திரத்தைப் பூர்ண சீக்கிர கேந்திரத்தால் வகுக்க ஜேஷ்டாபலம் வரும்.

(4-வது உதாரணம்) உதாரணமாகச் சுக்கிரனுக்கு,

	பாகை—க.ப
9–5–1869ல் பகல் 12மணி—59நிமிஷத்தில் தூர உவாந்தம்; அப்போது ஸ்புடம்	26—48
2–10–1869ல் காலை 7மணி—13நிமிஷத்தில் ஜெனனம்; அப்போது ஸ்புடம்	204—32
31–1–1870ல் மாலை 4மணி—42நிமிஷத்தில் வக்கிர ஆரம்பம்; அப்போது ஸ்புடம்	320—56
23–2–1870ல் இரவு 8மணி—0நிமிஷத்தில் சமீப உவாந்தம்; அப்போது ஸ்புடம்	312—58

வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய 320பாகை—56கலையிலிருந்து தூரஉவாந்தகால ஸ்புடமாகிய 26பாகை—48கலையைக் கழிக்க 294 பாகை–8கலைவரும். சமீப உவாந்தகால ஸ்புடமாகிய 312பாகை–58 கலையை வக்கிர ஆரம்பகால ஸ்புடமாகிய 320பாகை–56கலையிலிருந்து கழிக்க 7பாகை–58கலைவரும். 294பாகை–8கலையையும் 7பாகை–58 கலையையும் கூட்டவருகின்ற 302பாகை–6கலைதான் பூர்ண சீக்கிர கேந்திரமாகும். ஜெனனகால ஸ்புடமாகிய 204 பாகை–32கலையிலிருந்து தூரஉவாந்தகால ஸ்புடமாகிய 26பாகை–48கலையைக் கழிக்க வருகின்ற 177பாகை—44கலைதான் பின்ன சீக்கிர கேந்திரமாகும். 177பாகை–44கலையை 302பாகை–6கலையால் வகுக்க ஜேஷ்டாபலம் வரும். பின்வருமாறு வகுக்கவேண்டியது. 177பாகை—44கலையைக் கலையாக மாற்ற 10664கலைவரும். 302பாகை–6கலையைக் கலையாக மாற்ற 18126கலைவரும். 10664யை 100ஆல் பெருக்க 1066400 வரும். இந்த 1066400யை 18126ஆல் வகுக்க ஈவு59 வரும். ஆகையால் சுக்கிரனுக்கு ஜேஷ்டாபலம் 100ல் 59பங்கு ஆகும்.

இவ்விதமாக 5கிரகங்களின் ஜேஷ்டாபலம் சுலபமாகக் கணிக்கவேண்டியது. அடியிற்காட்டிய உதாரணங்களையும் படிக்கவும்.

(5-வது உதாரணம்) உதாரணமாகச் செவ்வாயிற்கு,

பாகை— கலை

13-2-1869ல் இரவு 9மணி-15நிமிஷத்தில் உவா
அப்போது ஸ்புடம் 123—11

27-3-1869ல் மாலை 3மணி-48நிமிஷத்தில் வக்கிர
நிவர்த்தி அப்போது ஸ்புடம் 113—23

2-10-1869ல் காலை 7மணி-13நிமிஷத்தில் ஜெனனம்
அப்போது ஸ்புடம் 206—30

12-3-1870ல் இரவு 11மணி-16நிமிஷத்தில்
உவாந்தம் அப்போது ஸ்புடம் 330— 6

123பாகை-11கலையிலிருந்து 113பாகை-23கலையைக் கழிக்க 9பாகை-48கலைவரும். 330பாகை-6கலையிலிருந்து 113பாகை-23கலையைக் கழிக்க 216பாகை-43கலைவரும். 9பாகை-48கலையையும் 216பாகை-43கலையையுங் கூட்ட 316பாகை-31கலைவரும். இந்த 316பாகை-31கலைதான் பூர்ண சீக்கிர கேந்திரமாகும். மேலும் 123பாகை—1கலையிலிருந்து 113பாகை-23கலையைக் கழிக்க 9பாகை 48கலைவரும். 206பாகை—30கலையிலிருந்து 113பாகை—23கலையைக் கழிக்க 93பாகை-7கலைவரும். இந்த 9பாகை-48கலையையும் 93பாகை 7கலையையுங் கூட்ட வருகின்ற 102பாகை-55கலைதான் பின்ன சீக்கிர கேந்திரம் ஆகும். 316பாகை-31கலையிலிருந்து 102பாகை-55கலையைக் கழிக்க வருகின்ற 213பாகை-36கலையை 316பாகை-31கலையால் முன்னே சொல்லியபடி வகுக்க செவ்வாயிற்கு ஜேஷ்டாபலம் 100ல் 67பங்கு வரும்.

(6-வது உதாரணம்) உதாரணமாகப் புதனுக்கு,

பாகை—கலை

12-8-1869ல் காலை 9மணி—17நிமிஷத்தில் தூர
உவாந்தம் அப்போது ஸ்புடம் 117—33

2-10- 1869ல் காலை 7மணி—13நிமிஷத்தில் ஜெனனம்
அப்போது ஸ்புடம் 191—52

8-10-1869ல் இரவு 7மணி—31நிமிஷத்தில் வக்கிர
ஆரம்பம் அப்போது ஸ்புடம் 193—59

20-10-1869ல் பகல் 1மணி—32நிமிஷத்தில் சமீப
உவாந்தம் அப்போது ஸ்புடம் 185— 8

193பாகை—59கலையிலிருந்து 117பாகை—33கலையைக் கழிக்க 76பாகை—26கலைவரும். 193பாகை—56கலையிலிருந்து 185பாகை 8கலையைக்கழிக்க 8பாகை—51கலைவரும். 76பாகை—26கலையையும் 8பாகை—51கலையையுங் கூட்டவருகின்ற 85பாகை—17கலைதான் பூர்ண சீக்கிர கேந்திரம் ஆகும். 191பாகை—52கலையிலிருந்து 117பாகை 33கலையைக் கழிக்க வருகின்ற 74பாகை—19கலைதான் பின்ன சீக்கிர கேந்திரம் ஆகும். இந்த 74பாகை—19கலையை 85பாகை—17கலையால் முன்னே சொல்லிய பிரகாரம் வகுக்க புதனுக்கு ஜேஷ்டாபலம் 100ல் 87பங்கு வரும்.

34-வதுவாக்கியம்—பாவபலம்.

பாவபலம் என்பது நான்கு அம்சங்களுடையது. அவை (1) பாவாதி அல்லது பாவாதிபதிபலம், (2) பாவதிருக் பலத்தில் 4ல் 1 பங்கு (3) புதகுருதிருக்பலம் (4) பாவதிக்குப்பலம் என்று நான்கு வகைப்படும். இவைகளைக்கணிக்கும் விதம் அடியிற்கண்டபடி ஆகும்

(1)-வது அயிட்டம்—பாவாதி என்றபாவாதிபதிபலம் கணிக்க:— முதலில் பாவாதி அறியவும். ஒரு பாவம் எந்த ராசியில் அல்லது இராசிகளில் அடங்குகின்றதோ அந்த ராசிக்குடையவன் அல்லது அந்த இராசிக்குடையவர்கள் பாவாதிபதி அல்லது பாவாதிபதிகள் ஆவார்கள். பாவாதிபதி தெரிந்த பிறகு அந்த பாவாதியின் சட்பலம் அறியவேண்டியது. இது முன்னமே கணித்து வைத்து இருக்கப்பட்டது. அந்தபாவாதியின் இராசியின் அளவாகிய 30-பாகைக்கு அந்த பாவாதிக்கு வந்த சட்பலம் உறியதானால் அந்த ராசியில் எவ்வளவு பாகம்,பாவத்தில் அடங்கியிருக்கின்றதோ அவ்வளவுபாகத்திற்குச்சட்பலம்திரை ராசிகம் பிரகாரம் கணிக்க வேண்டியது. இப்படிக்கணித்து வருவது தான் பாவாதி பலம் ஆகும். இந்த அடியிற்கண்ட உதாரணத்தால் விளக்குவோம். உதாரணமாக 1-வது பாவம் 169

பாகை-53கலை முதல் 199 பாகை-53 வரையிலும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். 150 பாகை முதல் 180 பாகை வரையிலும் கன்னியாராசியானதாலும், 180 பாகை முதல 210 பாகை வரையிலும் துலா ராசியானதாலும் 1-வது பாவம் கன்னியராசியிலும் துலா ராசியிலும் அடங்கி இருக்கின்றது. ஆகையால் இந்த கன்னி துலா ராசியாதிபதிகளாகிய புதனும் சுக்கிரனும் 1வது பாவத்திற்குப் பாவாதிபதிகளாவார்கள். முதலில் புதனை எடுத்துக்கொள்வோம். 37-வது கட்டத்தைப்பார்க்கப் புதனுக்குச் சட்பலம் 889 பாகம் ஆகும். கன்னியா ராசிமுடிவாகிய 180 பாகை-0 கலையிருந்து 1-வது பாவ ஆரம்பமாகிய 169 பாகை-53 கலையைக் கழிக்க வருகின்ற 10 பாகை-7 கலை தான் கன்னியாராசியில் அடங்கியுள்ள 1-வது பாவத்தின் அளவு ஆகும். கன்னியாராசியாகிய 30 பாகைக்கு 889 பாகமானல் கன்னியாராசியின் பாகமாகிய 10 பாகை-7 கலைக்கு எவ்வளவு பாகம் என்று அறியவேண்டியது. இதைப்பின்வருமாறு கணிக்கவும். 30 பாகையைக் கலையாக மாற்ற 1800 கலை ஆகும். 10 பாகை-7 கலையைக் கலையாக மாற்ற 607 கலை ஆகும். ஒரு ராசியின் பாகத்தால் வருகின்ற கலையாகிய 607யைச் சட்பலமாகிய 889 ஆல் பெருக்க வருகின்ற 539623யை 1800 ஆல் வகுக்க வேண்டியது. இப்படி வகுக்க ஈவு 300 வரும். இந்த 300 பாகந்தான் புதனல் உண்டாகின்ற பாவாதிபலம் ஆகும். இப்போது சுக்கிரனை எடுத்துக்கொள்வோம். 37வது கட்டத்தைப்பார்க்கச் சுக்கிரனுக்கு சட்பலம் 674 பாகம் ஆகும். துலாராசி ஆரம்பமாகிய 180 பாகையை 1வது பாவம் முடிவாகிய 199 பாகை-53 கலையிலிருந்து கழிக்க வருகின்ற 19 பாகை-53 கலைதான் துலாராசியில் அடங்கியுள்ள 1-வது பாவத்தின் அளவு ஆகும். துலாராசியாகிய 30 பாகைக்கு 674 பாகமானல் துலாராசியின பாகமாகிய 19 பாகை-53 கலைக்கு எவ்வளவு பாகம் என்று முன்போல அறியவும். இதைப்பின் வருமாறு கணிக்கவும். 30 பாகையைக் கலையாக மாற்ற 1800 கலை ஆகும். 19 பாகை-53 கலையைக் கலையாக மாற்ற 1193 கலை வரும். ஒரு இராசியின் பாகத்தால் வருகின்ற கலையாகிய 1193யைச் சட்பலமாகிய 674 ஆல் பெருக்க வருகின்ற 804082யை 1800ஆல் வகுக்க வேண்டியது. இப்படி வகுக்க ஈவு 447 வரும். இந்த 447 பாகந்தான் சுக்கிரனல் உண்டாகின்ற பாவாதி பலம் ஆகும்.

ஆகையால் புதனுடைய பாவாதி பலம் 300 ஆகும்.
சுக்கிரனுடைய் பாவாதி பலம் 447 ஷ
இவ்விரண்டையுங் கூட்ட பாவாதிபதி பலம் 747 ஆகும்.

மேலே சொல்லிய காரணத்தினல் 1-வதுபாவத்திற்குப்புதனும் சுக்கிரனும் பாவாதிபதிகளானதால் இவர்களால் வருகின்ற 747 பாகந் தான் 1வது பாவத்தின் பாவாதிபலம் ஆகும். இவ்விதமாக ஒவ்வொரு பாவத்திற்கும் பாவாதி பலம் அறியவேண்டியது. ஒரு பாவம் ஒரே இராசியில் அடங்கினல் அந்தராசிக்குடைய ஒரே கிரகம் பாவாதிபதியாகவும், இரண்டு ராசிகளில் அடங்கினல் அந்த இரண்டு இராசிகளுக்குடைய கிரகங்கள் பாவாதிபதிகளாகவும், மூன்று ராசிகளில் அடங்கினல் அந்த மூன்று ராசிகளுக்குடைய கிரகங்கள் பாவாதிபதிகளாகவும் வருவார்கள். இதை நன்ருய்க் கவனிக்கவும்.

(2) வது அயிட்டம். பாவதிருக்பலம் கணிக்க:—இந்த பாவ திருக்பலத்தைக் கணிக்கும் வழி 19-வது 20வது வாக்கியங்களே உபயோகப்படுத்தும் விதத்தில் முன்னமே சொல்லப்பட்டிருக்கின்றது. அதை வாசிக்கவும்—38வது கட்டடத்தையும் பார்க்கவும்.

(3) வது அயிட்டம். புத குருபாவபலம் :—புத குரு பாவபலம் என்பது புதனும், குருவும் ஒவ்வொருபாவத்தையும் பார்க்கும் பார்வையின் அளவைக் கூட்டவருவது. உதாரணமாக 38-வது கட்டத்தைப்பார்க்க 4வது பாவத்தைக் குரு 82 பங்குடனும், புதன் 63 பங்குடனும் பார்ப்பதால் இந்த 82யையும் 63யையுங்கூட்ட வருகின்ற 145 பங்குதான் 4வது பாவத்தின் புதகுரு பாவபலம் ஆகும். இவ்விதமாகவே ஒவ்வொரு பாவத்திற்கும் அறியவும்.

(4) வது அயிட்டம். பாவதிக்குப்பலம் கணிக்க:—பாவதிக்குப்பலம் கணிப்பதற்கு முதலில் 12 பாவஸ்புடங்களும் இருக்கும் இராசிகள் இருகால் ராசியா, அல்லது நாற்கால் ராசியா, அல்லது ஜல ராசியா அல்லது பலகால் ராசியா என்று பார்க்க வேண்டியது. பிறகு ஒரு பாவஸ்புடம் இருக்கும் ராசி,

(1) இருகால் ராசியானல் அந்த பாவஸ்புடத்திலிருந்து 1-வது பாவஸ்புடத்தைக் கழிக்கவும்.

(2) நாற்கால் ராசியானல் அந்த பாவஸ்புடத்திலிருந்து 10 வது பாவஸ்புடத்தைக்கழிக்கவும்.

(3) ஜல ராசியானல் அந்த பாவஸ்புடத்திலிருந்து 4 வது பாவஸ்புடத்தைக்கழிக்கவும்.

(4) பலகால் ராசியானல் அந்த பாவஸ்புடத்திலிருந்து 7 வது பாவஸ்புடத்தைக்கழிக்கவும்.

கழிக்கப்படும் ஸ்புடம் கழிக்கும் ஸ்புடத்தைவிட சிறியதானல் கழிக்கப்படும் ஸ்புடத்துடன் 360 பாகையைக்கூட்ட வருகின்றதிலிருந்து கழிக்கும் ஸ்புடத்தைக் கழிக்க வேண்டியது. இப்படிக் கழிக்க வரும் பாகை கலையை முழுபாகையாக மாற்றவேண்டியது. இப்படி முழு பாகையாக மாற்றவந்த பாகைக்கு எதிரில் 26-வது வாக்கியத்தில் கொடுத்துள்ள அளவே அந்த பாவத்தின் திக்குப்பலம் ஆகும்.

இராசிகள் அடியிற் கண்டபடி இருகால் ராசி, நாற்கால்ராசி, ஜலராசி, பலகால்ராசி, ஆகும்.

மேஷம் — நாற்கால்ராசி	விருச்சிகம்—பலகால்ராசி
ரிஷபம் — நாற்கால்ராசி	தனுசுமுன் அரை—இருகால்ராசி
மிதுனம் — இருகால்ராசி	பின் அரை—நாற்கால்ராசி
கடகம் — ஜலராசி *	மகரம்முன் அரை—நாற்கால்ராசி
சிம்மம் — நாற்கால்ராசி	பின் அரை—ஜலராசி
கன்னி—இருகால்ராசி	கும்பம் ...—இருகால்ராசி
துலாம்—இருகால்ராசி	மீனம் ...—ஜலராசி

* கடகத்தை சிலர் பலகால் இராசி என்பர். இந்த புத்தகத்தில் ஜலராசியாகக் கருதப்பட்டிருக்கின்றது.

1-வது உதாரணம்: — உதாரணமாக ஜனன காலத்தில் 1-வது பாவஸ்புடம் 184 பாகை-48 கலையானல் இந்த 1வது பாவத்தின் திக்குப்பலம் கணிப்போம். இந்த 184 பாகை—48 கலை என்ற ஸ்புடம் 12வது வாக்கியத்தைப் பார்க்கத் துலாராசியில் இருக்கின்றது என்று எற்படும். இந்த துலாராசி மேலே சொல்லியபடி இருகால் ராசியாகும். ஆகையால் 1-வது பாவஸ்புடம் இருக்கும் ராசி இருகால் ராசியாகும். 1-வது பாவஸ்புடம் இருப்பது இருகால் இராசியானதால் மேலே சொல்லியபடி அந்த 1-வது பாவஸ்புடத்திலிருந்து 1-வது பாவஸ்புடத்தையே கழிக்கவும் அதாவது 1-வது பாவ

ஸ்புடமாகிய 184 பாகை—48 கலையிலிருந்து 1-வது பாவஸ்புடமாகிய 184 பாகை—48 கலையைக் கழிக்க பாகை 0—கலை 0 வரும். அதாவது பாகை பூஜ்ஜியமாகும். ஆகையால் 26வது வாக்கியத்தில் 0 பாகைக்கு எதிரில் 100 என்று இருப்பதால் 1வது பாவத்தின் திக்குப்பலம் 100 பங்கு ஆகும்.

2-வது உதாரணம்:—உதாரணமாக ஜெனன காலத்தில் 2-வது பாவஸ்புடம் 214 பாகை—58 கலையும் 7-வது பாவத்தின் ஸ்புடம் 4 பாகை—48 கலையுமானால் இந்த 2-வது பாவத்தின் திக்குப்பலத்தைக்கணிப்போம். இந்த 214 பாகை—58 கலை என்ற ஸ்புடம் 12வது வாக்கியத்தைப் பார்க்க விருச்சிக ராசியில் இருக்கின்றது என்று ஏற்படும். இந்த விருச்சிகராசி மேலே சொல்லியபடி பலகால் இராசியாகும். ஆகையால் 2-வது பாவ்ஸ்புடம் இருக்கும் ராசி பலகால் ராசியாகும். 2-வது பாவஸ்புடம் இருக்கும் ராசி பலகால் ராசியானதால் மேலே சொல்லியபடி அந்த 2-வது பாவஸ்புடத்திலிருந்து 7-வது பாவஸ்புடத்தைக் கழிக்க வேண்டியது. அதாவது 2 வது பாவஸ்புடமாகிய 214 பாகை—58 கலையிருவிருந்து 7வது பாவஸ்புடமாகிய 4 பாகை—48 கலையைக் கழிக்க 210 பாகை—10 கலை வரும். இதை முழுபாகையாக மாற்ற 210 பாகை வரும். ஆகையால் 26வது வாக்கியத்தில் 210 பாகைக்கு எதிரில் 17 என்ற எண் இருப்பதால் 2வது பாவத்தின் திக்குப்பலம் 17 பங்கு ஆகும்.

3வது உதாரணம்:—உதாரணமாக ஜெனன காலத்தில் 3வது பாவஸ்புடம் 245 பாகை—8 கலையும் 1வது பாவஸ்புடம் 184 பாகை 48 கலையுமானால் இந்த 3வது பாவத்தின் திக்குப்பலம் கணிப்போம். இந்த 245 பாகை—8 கலை என்றஸ்புடம் 12வது வாக்கியத்தைப் பார்க்கத் தனுசு இராசியில் முன் அரைபாகத்தில் இருக்கின்றது என்று ஏற்படும். இந்த தனுசுராசியின் முன்பாகம் மேலே சொல்லியபடி இருகால் ராசியாகும். ஆகையால் 3-வது பாவஸ்புடம் இருக்கும் ராசி இருகால் ராசியாகும். 3வது பாவஸ்புடம் இருக்கும் ராசி இருகால் ராசியானதால் மேலே சொல்லியபடி அந்த 3வது பாவஸ்புடத்திலிருந்து 1 வது பாவஸ்புடத்தைக் கழிக்க வேண்டியது. அதாவது 3வது பாவஸ்புடமாகிய 245 பாகை—8 கலையிலிருந்து 1வது பாவஸ்புடமாகிய 184 பாகை—48 கலையைக் கழிக்க 60பாகை

20 கலை வரும். இதை முழுபாகையாக மாற்ற 60 பாகை வரும். ஆகையால் 26வது வாக்கியத்தில் 60 பாகைக்கு எதிரில் 67 என்ற எண் இருப்பதால் 3-வது பாவத்தின் திக்குப் பலம் 67 பங்கு ஆகும்.

35-வது வாக்கியம்—இஷ்ட கஷ்ட கணிதம்.

எண் என்று சொல்லப்படுவதற்கும், இலக்கம் என்று சொல்லப் படுவதற்கும், உள்ள வித்தியாசத்தை முதலில் இங்கு அறியவேண்டியதா யிருக்கின்றது. 7 என்பது ஒரு எண் ஆகும். 78 என்பது ஒரு எண் ஆகும். 789 என்பது ஒரு எண் ஆகும். மேலும் 78 என்ற எண் 7ம், 8ம் சேர்ந்து உண்டாகக்கப்பட்டது. இந்த 78ல் உள்ள 8க்கு முதல் இலக்கம் என்றும் 7க்கு இரண்டாவது இலக்கம் என்றும் சொல்லப்படும். ஆகையால் 78 என்ற எண்ணில் இரண்டு இலக்கங்கள் இருக்கின்றன. ஆகையால் 78 என்ற எண் இரண்டு இலக்கங்களால் ஏற்பட்டது. இவ்விதமாகவே 789 என்ற எண் மூன்று இலக்கங்களால் ஏற்படப்பட்டது. மேலே கொடுத்துள்ள 7 என்ற எண் ஒரே இலக்கத்தால் உண்டாக்கப்பட்டது ஆகும். ஆகையால் எண் என்பது இலக்கங்களால் உண்டாகப் பட்டது என்பதாகும். இலக்கம் என்பது எண்களை உண்டாக்கும் மூலகருவி ஆகும். ஒரு எண்ணை அதே எண்ணால் பெருக்க வரும் தொகைக்கு வர்க்கம் என்று பெயர். உதாரணமாக 8 யை 8 ஆல் பெருக்க வருக்கின்ற 64 யை வர்க்கம் என்று சொல்லவேண்டும். அதாவது 64 என்பது 8 என்பதின் வர்க்கம் என்று சொல்லப்படும். மேலும் 8 என்பது 64ன் மூலம் என்று சொல்லப்படும். அதாவது எந்த எண்ணை அதே எண்ணால் பெருக்க வர்க்கம் வருமோ அந்த எண்ணிற்கு மூலம் என்று பெயர். உதாரணமாக 10யை 10ஆல் பெருக்க 100 வரும். ஆகையால் 10க்கு வர்க்கம் 100ம், 100க்கு மூலம் 10ம் ஆகும். மேலும் 25 யை 25 ஆல் பெருக்க 625 வரும். ஆகையால் 25க்கு வர்க்கம் 625ம், 625க்கு மூலம் 25ம் ஆகும். இவ்விதமாக 2க்கு வர்க்கம் 4ம், 4க்கு வர்க்கம் 16ம், 6க்கு வர்க்கம் 36ம் ஆகும். 9க்கு மூலம் 3ம், 25க்கு மூலம் 5ம், 49க்கு மூலம் 7ம், 81க்கு மூலம் 9ம் ஆகும். இவைகள் சிறிய எண்களா யிருப்பதால் இவைகளைக் கஷ்டப்பட்டுகணிக்காமலே மணக்கணக்

கினுலேயே போட்டுவிடலாம். எண்கள் பெரிய எண்களாயிருக்கும் போது கணிக்கவேண்டியது அவசியமாக நேரிடும்.

உதாரணம் (1) 345-க்கு வர்க்கம்கணிக்க :—ஒரு எண்ணிற்கு அந்த எண்ணை அதே எண்ணால் பெருக்க வருந்தொகை தான் வர்க்கம் என்று முன்னமே சொல்லியிருக்கின்றது. ஆகையால் 345யை 345 ஆல் பெருக்க 119025 வரும். ஆகையால் 119025 என்பது 345க்கு வர்க்கமாகும்.

உதாரணம் (2) 706 க்கு வர்க்கம் கணிக்க :—மேலே சொல்லியபிரகாரம் 706யை 706ஆல் பெருக்க வருகின்ற 498436 என்பது 706க்கு வர்க்கமாகும்.

இவ்விதமாக நமக்குத் தேவையான எண்களுக்கு வர்க்கம் கணிக்கவேண்டியது.

உதாரணம் (3) :—519841க்கு மூலம் கணிக்க :—அதாவது எந்த எண்ணை அதே எண்ணால் பெருக்க 519841 வரும் என்பதை அறியவேண்டியது. இதை அறிவதற்கு முதல் முதல் வர்க்கமாகிய 519841யை வலதுகை பக்கமாகவிருந்து இடதுகை பக்கமாக இரண்டு இரண்டு இலக்கங்களையுடைய அணி அணியாகப் பிரித்து அப்படிப் பிரித்ததற்கு அடையாளமாக அணிகளுக்கு இடையில், எழுத வேண்டியது. இப்படி அணி அணியாகப் பிரித்து எழுத கீழே கண்டபடி 3 அணிகள் வரும்.

இடது கைபக்கம் 51, 98, 41 வலது கைபக்கம்
(3) (2) (1)

41 என்பது ஓராவது அணி, 98என்பது இரண்டாவது அணி 51 என்பது 3வது அல்லது கடைசி அணியாகும்.

குறிப்பு :—கடைசி அணி தவிரமற்ற அணிகளில் இரண்டு, இலக்கங்கள் எப்போதும் இருக்கவேண்டும். கடைசி அணியில் மாத்திரம் இரண்டு இலக்கங்களும் அல்லது ஒரு இலக்கமும் இருக்கலாம். இங்கு கொடுத்த உதாரணத்தில் கடைசி அணியாகிய 3வது அணியில் அதாவது 51 என்றதில் இரண்டு இலக்கங்களாகிய 5, 1 என்ற இலக்கங்கள் இருக்கின்றன. பிறகு வகுத்தல் செய்யும்போது எழுதிக்கொள்வதுபோல அடியிற்கண்டபடி எழுதி வகுத்தல் செய்யவும்.

1-வது வகுக்கும் எண் ஸ்தானம்.	1வது வகுக்கப்படும் எண் ஸ்தானம். 51, 98, 41 49 ———	7 (1)வது ஈவு ஸ்தானம்.
2வதுவகுக்கும் எண் ஸ்தானம் 14,2	2வது வகுக்கப்படும் எண் ஸ்தானம். 2,98 284 ———	2 (2) வது ஈவு ஸ்தானம்.
3வது வகுக்கும் எண் ஸ்தானம் 1,441	3வது வகுக்கப்படும் எண்ஸ்தானம். 14,41 1441 ——— 0	1 (3) வது ஈவு ஸ்தானம்.

(N.B.) இந்த வழிக்கு இங்கிலீஷில் Square root கண்டு பிடிக்கும் Method என்று பெயர்.

பிறகு வகுத்தல் செய்யும் விதம்:—கடைசி அணியாகிய 51 என்பது எந்த முழுமூல எண்ணிற்கு வர்க்கமாகும் என்பதை மனதில் மணக்கணக்காகப் பார்க்கவேண்டியது. 7 என்ற மூல எண்ணிற்கு வர்க்கம் 49-ம், 8 என்ற மூல எண்ணிற்கு வர்க்கம் 64ம் ஆவதாலும், 51 என்பது 49க்கும், 64க்கும் இடையில் இருப்பதால் 51 என்றவர்க்கத்திற்குச் சரியான முழுமூல எண் கிடையாது. ஆகையால் 51க்கு உடனே தாழ்ந்தவர்க்கமாகிய 49க்கு உரிய மூலமாகிய 7 யை 1வது ஈவுஸ்தானத்தில் எழுதவேண்டியது. பிறகு இந்த 7க்கு வர்க்கமாகிய 49 யை 51ன் கீழ் எழுதி 51ல் இருந்து 49யைக் கழிக்கவேண்டியது. இப்படிக் கழிக்க மிச்சம் 2 வரும். இந்த 2க்குக் அடுத்தாற்போல் 51க்கு அடுத்த அணியாகிய 98 என்ற அணியை எடுத்து எழுதவும். இப்படி எடுத்து எழுத மிச்சஸ்தானத்தில் 2,98 வரும். பிறகு இந்த 298யை மறுபடியும் வகுக்கவேண்டும். வகுப்பதற்கு வகுக்கும் எண் தேவையானதால் இந்த

வகுக்கும் எண்ணைப்பின் வருமாறு கணிக்கவும். 1வது ஈவுஸ்தானத்தில் வந்த 7யை 2 ஆல் பெருக்கவருகின்ற 14யை 2வது வகுக்கும் எண்ஸ்தானதில் எழுதவும். பிறகு 2,98ல் முதல் லக்கமாகிய 8யை விட்டுவிட நிற்கின்ற 29யை 2வது வகுக்கும் எண்ஸ்தானத்தில் வந்த எண்ணாகிய 14 ஆல் மனதில் வகுக்க ஈவு எவ்வளவுவரும் என்பதை மனக்கணக்காகப் பார்க்கவேண்டியது. இப்படி மனக்கணக்காக 29யை 14 ஆல் வகுக்க ஈவு 2 வரும். இந்த ஈவாகிய 2யை 2வது ஈவுஸ்தானத்தில் எழுதவேண்டியது. மறுபடியும் அதே 2யை 2வது வகுக்கும் எண்ஸ்தானத்தில் 14க்கு அருகில் எழுதவும். இப்படி எழுத 2வது வகுக்கும் எண்ஸ்தானத்தில் வருகின்ற 142 தான் வகுக்கும் எண் ஆகும். பிறகு 142யை 2வது ஈவுஸ்தானத்தில் எழுதி வைத்த 2 ஆல் பெருக்க வருகின்ற 284யை 298ன் கீழ் எழுதி 298ல் இருந்து 284 யைக் கழிக்கவேண்டியது. இப்படிக் கழிக்க மிச்சம் 14 வரும். இந்த 14 இரண்டாவது மிச்சமாகும். (குறிப்பு—2வது ஈவுஸ்தானத்தில் கணித்து எழுதப்பட்ட எண்ணால் 2வது வகுக்கும் எண் ஸ்தானத்திலுள்ள எண்ணைப் பெருக்க வருகின்ற எண், 2வது வகுக்கப்படும் எண் ஸ்தானத்திலுள்ள எண்ணை விட பெரியதானால் 2வது ஈவுஸ்தானத்தில் வந்த எண்ணில் 1குறைக்க வருகின்ற எண்ணை 2வது ஈவாக 2வது ஈவுதானத்திலும் 2வது வகுப்பப்படும் எண்ஸ்தானத்தில் 14க்கு அடுத்தாற்போல் எழுத வேண்டும்).

பிறகு 2வது மிச்சமாகிய 14க்கு அருகில் அடுத்த அணியாகிய 41 என்ற அணியை எடுத்து எழுதவும். இப்படி எடுத்து எழுத மிச்ச ஸ்தானத்தில் 14, 41 வரும். பிறகு இந்த 1441 யை வகுக்க வேண்டும். வகுப்பதற்கு முன்னே 298 யை வகுப்பதற்குச் செய்ததுபோலவே செய்யவேண்டியது. அதாவது, இதுவரையிலும் வந்த இரண்டு ஈவுகளாகிய 7யையும் 2யையும் ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாக ஒரே வரியில் எழுத 72 வரும். இந்த 72யை முன் போலவே 2 ஆல் பெருக்க வருகின்ற 144யை 3வது வகுக்கும் எண்ஸ்தானத்தில் எழுதவும். பிறகு 1441ல் முதல் இலகக்மாகிய 1யை விட்டுவிட நிற்கின்ற 144 யை மேலே வந்த 144 ஆல் மனதில் வகுக்க ஈவு எவ்வளவுவரும் என்பதை மனக்கணக்காகப் பார்க்க

வேண்டியது. இப்படி மனக்கணக்காக 144 யை 144 ஆல் வகுக்க ஈவு 1 வரும். இந்த ஈவாகிய 1 யை 3வது ஈவு ஸ்தானத்தில் எழுத வேண்டியது. மறுபடியும் அதே 1யை 3வது வகுக்கும் எண்ஸ்தானத்தில் 144க்கு அருகில் எழுத 3வது வகுக்கும் எண் ஸ்தானத்தில் வருகின்ற 1441 தான் வகுக்கும் எண் ஆகும். பிறகு 1441 யை 3வது ஈவுஸ்தானத்தில் எழுதி வைத்த 1 ஆல் பெருக்க வருகின்ற 1441 யை 3வது வகுக்கப்படும் ஸ்தானத்திலுள்ள வகுக்கப்படும் எண்ணாகிய 1441ல் இருந்து கழிக்கவும். இப்படிக் கழிக்க மிச்சம் பூஜ்ஜியமாகும். * நாம் எடுத்துக்கொண்ட எண்ணாகிய 519841ல் உள்ள எல்லா அணிகளையும் உபயோகப்படுத்தி விட்டபடியால் இனிமேல் வகுத்தல் செய்யவேண்டிய அவசியமில்லை. அதாவது கடைசி அணியைச்சேர்த்து எப்போது வகுத்தல் செய்கிறோமோ அந்த வகுத்தலே கடைசி வகுத்தல் என்றும் அதற்குமேல் இன்னம் வகுத்தல் செய்யவேண்டிய அவசியமில்லை என்று அறியவும். பிறகு மூன்று தடவை வகுத்தல் செய்வதால் வந்த மூன்று ஈவுகளாகிய 7, 2, 1 என்ற எண்களை ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக ஒரே வரியில் எழுதவேண்டியது. இப்படி எழுத 721 வரும். இந்த 721 தான் நாம் எடுத்துக்கொண்ட வர்க்கமாகிய 519841க்கு மூலம் ஆகும். இவ்விதமாக நமக்குத்தேவையான தொகைக்கு மூலம் கணிக்க வேண்டியது.

குறிப்பு:—ஒரு எண்ணில் 1-வது, 2-வது, 3-வது, 4-வது இலக்கம் அறியவேண்டுமானால் வலது கைபக்கமாகயிருந்து இடது கைபக்கமாக இலக்கங்களை எண்ண வேண்டியது. உதாரணமாக 5678ல் 8 என்பது முதல் அல்லது 1வது இலக்கமாகும். 7 என்பது 2வது லக்கமாகும். 6 என்பது 3வது லக்கமாகும். 5 என்பது 4வது அல்லது கடைசி லக்கமாகும்.

குறிப்பு :—கடைசியாக வருகின்ற மிச்சம். பூஜ்ஜியமாக இல்லாமல் ஏதோ ஒரு எண்ணாக வந்தால் அந்த எண் கடைசி வகுக்கும் எண்ணினுடைய பாதிக்கு மேற்பட்டால் கடைசியாக வந்த ஈவுடன் ஒன்று கூட்டவும். பாதிக்குக்குறைந்து இருந்தால் கடைசியாக வந்த ஈவுடன் ஒன்று கூட்டவேண்டியதில்லை.

உதாரணம் (4):— 69964க்கு மூலம் கணிக்க:—

69964யை அணி அணியாகப்பிரித்து எழுத மூன்று அணிகள் பின் வருவாறு வரும்.

6, 99, 64
(3) (2) (1)

இங்கு 3-வது அணி ஒருஇலக்கம் உடையது என்பதைக் கவனிக்கவும். பிறகு பின்வருமாறு வகுக்கவேண்டியது.

```
   )6, 99, 64(2
    4
 46)2, 99(6
    2  76
524)23, 64(4
    20  96
       268
```

கடைசி மிச்சமாகிய 268 என்பது கடைசி வகுக்கும் எண்ணாகிய 524ன் பாதிக்குமேற் பட்டிருப்பதால் கடைசியாக வந்த ஈவாகிய 4 உடன் 1சேர்க்க5வரும். ஆகையால் கடைசி ஈவு 5என்று வைத்துக் கொள்ளவும். இப்படியாக வைத்துக்கொண்டு மூன்று ஈவுகளாகிய 2, 6, 5யை வரிசையாக எழுத வருகின்ற 265 என்ற எண்தான் 69964க்கு மூலம் ஆகும்.

உதாரணம் (5) 502681க்கு மூலம் கணிக்க

```
    )50, 26, 81(7
     49
 140)1, 26(0
     0  00
1409)126, 81(9
     126  81
```

இங்கு இரண்டாவது வகுக்கப்படும் எண் ஸ்தானத்திலுள்ள 126ன் முதல் இலக்கமாகிய 6யை விட்டுவிட 12வரும். இந்த 12யை 14ஆல் வகுக்க முடியாது. ஆதலால் பூஜ்ஜியம் இரண்டாவது ஈவு ஸ்தானத்தில் போடப்பட்டது. அதாவது 12யை 14 என்ற எண் பூஜ்ஜியம் தடவை வகுக்கும் என்பதாம். எந்த எண்ணேயும் பூஜ்ஜியத்தால் பெருக்க எப்போதும் பூஜ்ஜியம் வருமாதலால் 140யை 0த்தால்

பெருக்க பூஜ்ஜியம் வரும். மூன்று ஈவுகளாகிய 7, 0, 9யைவரிசையாக எழுத வருகின்ற 709 தான் 502681க்கு மூலம் ஆகும்.

குறிப்பு:—மேலே சொல்லி வந்த வர்க்கம், மூலம் இவைகளைக் கணிக்கும் கணிதத்திற்கு வர்க்க, மூலகணிதம் என்று பெயர். இந்த கணிதத்தைப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு 6-வது 7-வது வகுப்புகளிலேயே கற்றுக்கொடுப்பதால் இந்த கணிதத்தைக் கையாளும்போது ஏதாகிலும் சந்தேகம் நேரிட்டால் மேலே சொல்லிய வகுப்புகளிலும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் வாசித்தவர்களின் உதவியால் அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியது. மேலும் அனேக வர்க்க எண்களுக்கு மூலம் கணிக்க வேண்டியது அவசியமாய் இருக்கும்போது மேலே சொல்லிய விதத்தால் ஒவ்வொருதடவையும் வர்க்கம் கணிப்பது மிகவும் சிரமமாய் இருக்கும். இந்த சிரமத்தை நீக்கும் பொருட்டு வர்க்க மூலங்கள் அடங்கிய ஒரு புத்தகம் போடப்பட்டிருக்கின்றது. இந்த புத்தகத்தில் 1முதல் 2475வரையிலுமுள்ள எல்லா எண்களுக்கு வர்க்கமும், 1முதல் 6,125,625 வரையிலுமுள்ள எண்களுக்கு மூலமும் கணித்து போடப்பட்டிருக்கின்றது. இந்த புஸ்தகத்தின் பெயர் தமிழில் போடாமல் இங்கிலீஷில் போடப்பட்டிருக்கின்றது. இங்கிலீஷில் அதன் பெயர் "Extracts of the Pocket Book on Chain Survey Tables and Formulae" அதாவது "எக்ஸ்ட்ராக்ட்ஸ் ஆப் தி பாக்கெட் புக் ஆன் செயின் சர்வே டேபில்ஸ் அண்டு பார்முலி" என்பதாம். இந்த புத்தகத்தின் பெயர் மாத்திரம் இங்கிலீஷில் இருந்த போதிலும் அதனில் அடங்கியுள்ள சங்கதிகள் யாவும் தமிழில் போட்டிருப்பதால் இங்கிலீஷ் கொஞ்சங்கூட தெரியாதவர்கள்கூட இந்த புத்தகத்தை வெகுசுலபமாக உபயோகப்படுத்தலாம். இந்த புத்தகத்தின் விலை ஒரு அணுதான். இது ஒவ்வொரு தாலுக்கா ஆபீசிலும் விற்கப்படும். இது கிராம உத்திபோகஸ்தராகிய கிராம சர்க்கார் கணக்கப்பிள்ளையிடத்திலுமிருக்கும். மற்ற விடத்தில் கிடைப்பது அறிது. இதன் விலை சுவல்பத் தொகையாகிய ஒரு அணு வாத லாலும் இது மிகவும் உபயோகமான புத்தகமானதாலும் ஒரு அணு செலவுசெய்து இந்த புத்தகத்தை வாங்குவதால் அதிகசிரமம் நீங்கும் என்று அறியவேண்டியது. இந்த புத்தகத்தைவாங்காதவர்கள் மேலே

சொல்லிய வழியால் தான் மூலம் கணிக்கவேண்டுமே தவிர வேறொருவழியுங் கிடையாது என்று அறியவும். இந்த புத்தகத்தில் 7வது பக்கத்தில் மூலம் என்ற கலத்தில் 301க்கு எதிரில் வர்க்கம் என்ற கலத்தில் 90601 போட்டிருக்கின்றது. அதாவது 301க்கு வர்க்கம் 90601 என்றும், 90601 க்கு மூலம் 301 என்றும் ஏற்படும். இவ்விதமாகவே இந்த புத்தகத்தில் கொடுத்துள்ள மற்றவைகளையும் அறியவும்.

நாம் இனிமேல் இஷ்டபலம் என்கிற சுப பலத்தையும் கஷ்டபலம் என்கிற அசுபலத்தையுங்கணிக்கவேண்டிய தவசியமானதாலும், இவைகளைக் கணிப்பதற்கு மூலம் கணிக்க வேண்டிய வழியைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாலும் மேலே மூலம் கணிக்கும் வழியைச்சொல்லியிருக்கிறோம்,

இஷ்டபலம் கணிக்க:— ஒவ்வொருகிரகத்தினுடைய உச்சபலத்தை அதே கிரகத்தினுடைய ஜேஷ்டாபலத்தினல் பெருக்க வருகின்ற எண்ணினுடைய மூலம் அந்தகிரகத்தின் இஷ்டபலம் ஆகும். உதாரணமாகச் சூரியனுக்கு உச்சபலம் 13 என்றும் சூரியனுக்கு ஜேஷ்டாபலம் 42 என்றும் வைத்துக்கொண்டால் சூரியனுடைய இஷ்டபலத்தைக் கணிப்போம். உச்சபலமாகிய 13யை ஜேஷ்டாபலமாகிய 42 ஆல்பெருக்க 546வரும். இந்த 546க்கு மேலே சொல்லிய மூலம் என்பதைக் கணிக்கும் வழிபிரகாரம் கணிக்க மூலம் 23 வரும் (அல்லது மேலே சொல்லிய புத்தகத்தில் வர்க்கம் என்ற கலத்திலுள்ள எண்களில் எந்த எண் 546க்கு நெருங்கியிருக்கின்றதோ அந்த எண்ணிற்கு எதிரில் மூலம் என்ற கலத்திலுள்ள எண்ணே 546க்கு வர்க்கம் ஆகும். இப்படிப்பார்க்க மூலம் 23-வரும்). இந்த 23தான் சூரியனுடைய இஷ்டபலம் ஆகும். இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தினுடைய இஷ்டபலத்தைக் கணிக்கவேண்டியது.

கஷ்டபலம் கணிக்க:— ஒவ்வொரு கிரகத்தினுடைய உச்சபலத்தை 100ல் இருந்து கழிக்க வருகின்ற எண்ணை அதேகிரகத்தினுடை ஜேஷ்டாபலத்தை 100ல் இருந்து கழிக்கவருகின்ற எண்ணால் பெருக்கவருகின்ற எண்ணினுடைய மூலம் அந்த கிரகத்தின்

கஷ்டபலம் ஆகும். உதாரணமாகச் சூரியனுக்கு உச்சபலம் 13என்றும், சூரியனுக்கு ஜேஷ்டாபலம் 42என்றும் வைத்துக்கொண்டு சூரியனுடைய கஷ்டபலத்தைக் கணிப்போம். 100ல் இருந்து உச்சபலமாகிய 13யைக் கழிக்க 87வரும். ஜேஷ்டாபலமாகிய 42யை100ல் இருந்து கழிக்க 58வரும். இந்த 87யை 58ஆல் பெருக்க 5046 வரும். இந்த 5046க்கு மூலம் கணிக்க 71 வரும். இந்த மூலமாகிய 71தான் சூரியனுடைய கஷ்டபலம் ஆகும். இவ்விதமாகவே ஒவ்வொரு கிரகத்தினுடைய கஷ்டபலத்தைக் கணிக்கவேண்டியது.

36—வது வாக்கியம்—இஷ்டகஷ்ட சட்பலம்.

(1)-வது அபிட்டம்:—இஷ்டசட்பலம் கணிக்க:—ஒரு கிரகத்திற்கு வந்த சட்பலத்தை அதே கிரகத்திற்கு வந்த இஷ்டபலத்தால் பெருக்க வருகின்ற எண்ணிலுள்ள இலக்கங்களில் முதல்* இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிடநிற்கின்றது இஷ்டசட்பலமாகும்.

* குறிப்பு:—(1) ஒரு எண்ணிலுள்ள இலக்கங்களை எண்ணவேண்டுமானால் முன்னே 35-வது வாக்கியத்தில் குறிப்பில் சொன்ன பிரகாரம் வலது கை பக்கமிருந்து இடது கை பக்கமாக எண்ணவேண்டும்.

குறிப்பு (2) சட்பலத்தையும் இஷ்டபலத்தையும் பெருக்கி வந்த தொகையில் இரண்டிற்கு மேற்பட்ட இலக்கங்கள் இருந்தால் தள்ளிவிடப்பட்ட இரண்டு இலக்கங்களின் தொகை 50ம் 50க்கு மேற்பட்டால் மூனாவது இலக்கத்துடன் 1 கூட்டவும். உதாரணமாக பெருக்கிவந்த தொகை 76854யாக வந்தால், முதல் இரண்டு இலக்கங்களாகிய 4யையும் 5யையும் தள்ளிவிடவும். இப்படித் தள்ளிவிடப்பட்ட முதல் இரண்டு இலக்கங்களின் தொகையாகிய 54 என்பது 50க்கு மேற்பட்டதால் மூன்றாவது இலக்கமாகிய 8உடன் ஒன்று சேர்க்க மூன்றாவது இலக்கம் 9ஆக மாறும். ஆகையால் பிறகு நின்ற இலக்கங்களின் தொகையாகிய 769தான் இஷ்ட சட்பல மாகும்.

குறிப்பு (3) சட்பலத்தையும் இஷ்டபலத்தையும் பெருக்க வந்த எண்ணில் ஒரே ஒரு இலக்கம் இருந்தால் இஷ்டசட்பலம் பூஜ்ஜியம் என்று வைத்துக்கொள்ளவும்.

குறிப்பு (4) சட்பலத்தையும் இஷ்டபலத்தையும் பெருக்க வந்த எண்ணில் இரண்டு இலக்கங்கள் மாத்திரம் இருந்து பெருக்கி வந்த எண் 50ம் 50க்கு மேற்பட்டால் இஷ்டசட்பலம் ஒன்று என்றும் 50க்குக் குறைந்தால் இஷ்டசட்பலம் பூஜ்ஜியம் என்று வைத்துக் கொள்ளவும்.

உதாரணம்:— சூரியனுக்குச் சட்பலம் 573 என்றும், சூரியனுக்கு இஷ்டபலம் 23 என்றும் வைத்துக் கொள்வோம். சட்பலமாகிய 573யை இஷ்டபலமாகிய 23ஆல் பெருக்க 13179 வரும். முதல் இரண்டு இலக்கங்களாகிய 9யையும் 7யையும் தள்ளிவிட 131 நிற்கும். தள்ளிவிடப்பட்ட முதல் இரண்டு இலக்கங்களின் தொகையாகிய 79 என்பது 50க்கு மேற்பட்டதால் மூன்றுவது இலக்கத்துடன் ஒன்று சேர்க்கவேண்டியது. அப்படிச் சேர்ப்பதால் முன்னே நின்ற 131 என்பது 132 ஆகும். ஆகையால் இந்த 132தான் சூரியனுடைய இஷ்டசட்பலமாகும்

(2)-வது அயிட்டம் கஷ்டசட்பலம் கணிக்க:—ஒரு கிரகத்திற்கு வந்த சட்பலத்தை அதே கிரகத்திற்கு வந்த கஷ்டபலத்தால் பெருக்க வருகின்ற எண்ணிலுள்ள இலக்கங்களில் முதல் * இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட நிற்கின்றது கஷ்டசட்பல மாகும்.

* குறிப்பு:— இந்த வாக்கியத்தில் 1வது அயிட்டத்தின் கீழ் 2-வது, 3-வது, 4-வது குறிப்புகளில் இஷ்டபலம் என்பது எவ்விடத்தில் வந்த போதிலும் அதற்குப் பதிலாகக் கஷ்டபலம் என்பதை வைத்து வாசித்து இந்த குறிப்புகளின் பிரகாரம் கிரிகை செய்யவும். 1-வது குறிப்பும் கஷ்டசட்பலகணிதத்திற்குப் பொருந்தும்.

உதாரணம்:— சூரியனுக்குச் சட்பலம் 573 என்றும், சூரியனுக்கு கஷ்டபலம் 71 என்றும் வைத்துக் கொள்வோம். சட்பலமாகிய 573யைக் கஷ்டபலமாகிய 71ஆல் பெருக்க 40683 வரும். முதல் இரண்டு இலக்கங்களாகிய 3யையும் 8யையும் தள்ளிவிட 406 நிற்கும். தள்ளிவிடப்பட்ட முதல் இரண்டு இலக்கங்களின தொகையாகிய 83 என்பது 50க்கு மேற்பட்டதால் மூன்றுவது இலக்கத்துடன் ஒன்று சேர்க்க வேண்டியது. அப்படிச் சேர்ப்பதால் முன்னே நின்ற 406 என்பது 407 ஆகும். ஆகையால் இந்த 407 தான் சூரியனுடைய கஷ்டசட்பலமாகும்.

37-வது வாக்கியம்—இஷ்ட கஷ்டகிரக திருக்பலம்

1-வது அயிட்டம்:—இஷ்டதிருக்பலம் கணிக்க:— ஒரு கிரகம் மற்றக் கிரகங்களைப் பார்க்கும் பார்வையின் அளவுகளை அந்த கிரகத்தின் இஷ்டபலத்தால் பெருக்க * அந்த கிரகம் மற்ற கிரகங்களைப் பார்க்கும் இஷ்ட திருக்பலம் என்ற சுபபலம் வரும்.

*குறிப்பு:— பெருக்கவரும் எண்ணிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை 36-வது வாக்கியத்தில் 1-வது அயிட்டத்தின் கீழ் குறிப்புகளில் சொல்லிய பிரகாரம் தள்ளிவிட நின்றது இஷ்ட கிரகதிருக்பலம் ஆகும்.

உதாரணம்:— சூரியன், குருவை 66 பங்கு பார்வையுடனும் சுக்கிரனை 7பங்கு பார்வையுடனும், செவ்வாயை 7பங்கு பார்வையுடனும், சனியை 30பங்கு பார்வையுடனும் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். சூரியனுடைய இஷ்டபலம் 23 என்று வைத்துக் கொள்வோம். (1) 66யை 23ஆல் பெருக்க 1518 வரும். இந்த 1518ல் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 15 நிற்கும். தள்ளிவிட்ட இலக்கங்களின் தொகையாகிய 18 என்பது 50க்குள்பட்டதால் நின்ற எண்ணாகிய 15உடன் ஒன்று கூட்டவேண்டிய அவசியமில்லை. ஆகையால் 15தான் சூரியன் குருவைப்பார்க்கும் பார்வையின் சுப பலம் என்ற இஷ்டதிருக்பலமாகும். (2) 7யை 23ஆல் பெருக்க 161 வரும். இந்த 161ல் இரண்டு இலக்கம் தள்ளிவிட 1 நிற்கும். தள்ளி விட்ட இலக்கங்களின் தொகையாகிய 61 என்பது 50க்கு மேற்பட்டதால் நின்ற எண்ணாகிய 1உடன் 1கூட்ட 2வரும். இந்த 2தான் சூரியன் சுக்கிரனைப்பார்க்கும் இஷ்டதிருக்பலம். (3) இவ்விதமாகவே கணிக்க சூரியன் செவ்வாயை இஷ்டதிருக்பலம் 2பங்குடன் பார்க்கும். (4) இவ்விதமாகவே கணிக்க சூரியன் சனியை இஷ்டதிருக்பலம் 7பங்குடன்பார்க்கும். சூரியனுக்கு ச்சொல்லியது போலவே மற்ற கிரகங்கள்பார்க்கும் இஷ்ட திருக்பலம் கணிக்கவும்.

2-வது அயிட்டம்:— கஷ்டதிருக்பலம் கணிக்க:— ஒருகிரகம் மற்றக் கிரகங்களைப்பார்க்கும் பார்வையின் அளவுகளை அந்த கிரகத்தின் கஷ்டபலத்தால் பெருக்க * அந்தகிரகம் மற்றகிரகங்களைப் பார்க்கும் கஷ்டதிருக்பலம் என்ற அசுபபலம் வரும்.

* குறிப்பு:- பெருக்கவரும் எண்ணிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை 36வது வாக்கியத்தில் 1வது அயிட்டத்தின் கீழ் குறிப்புகளில் சொல்லிய பிரகாரம் தள்ளிவிட நின்றது கஷ்டதிருக்பலம் ஆகும்.

உதாரணம்:— சூரியன் குருவை 66பங்கு பார்வையுடனும் சுக்கிரனை 7பங்கு பார்வையுடனும், செவ்வாயை 7பங்கு பார்வையுடனும், சனியை 30பங்கு பார்வையுடனும் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். சூரியனுடைய கஷ்டபலம் 71 என்று வைத்துக் கொள்வோம். (1)66யை 71ஆல் பெருக்க 4686வரும். இந்த 4686ல் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 46 நிற்கும். தள்ளிவிட்ட இலக்கங்களின் தொகையாகிய 86 என்பது 50க்கு மேற்பட்டதால் நின்ற எண்ணாகிய 46உடன் 1கூட்ட நின்ற எண் 47ஆக மாறும். ஆகையால் 47தான் சூரியன் குருவைப்பார்க்கும் பார்வையின் 'அசுபபலம் என்ற கஷ்டதிருக்பலமாகும் (2) 7யை 71ஆல் பெருக்க 497 வரும். இந்த 497ல் இரண்டு இலக்கம் தள்ளிவிட 4 நிற்கும். தள்ளிவிட்ட இலக்கங்களின் தொகையாகிய 97 என்பது 50க்கு மேற்பட்டதால் நின்ற எண்ணாகிய 4 உடன் 1கூட்ட 5வரும். இந்த 5தான் சூரியன் சுக்கிரனைப் பார்க்கும் கஷ்டதிருக்பலமாகும். (3) இவ்விதமாகவே கணிக்க சூரியன் செவ்வாயைக் கஷ்டதிருக்பலம் 5பங்குடன் பார்க்கும். (4) இவ்விதமாகவே சூரியன் சனியை கஷ்டதிருக்பலம் 21 பங்குடன் பார்க்கும். சூரியனுக்குச் சொல்லியதுபோலவே மற்ற கிரகங்கள் பார்க்கும் கஷ்டதிருக்பலம் கணிக்கவும்.

38-வாக்கியம்—இஷ்டகஷ்டசப்த்தவர்கஜபலம்

சப்த்தவர்கஜபலம் கணிக்கும் முறை 22-வது வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. சப்த்தவர்கஜபலம் என்பது முன்னமே சொல்லிய பிரகாரம் 7வித வர்க்கபலம் என்பது. அவை (1) இராசி என்ற இராசிச்சக்கிர வர்க்கம் (2) நவாம்சவர்க்கம் (3) திரேகாண வர்க்கம் (4) துவாதசாம்ச வர்க்கம் (5) ஓராவர்க்கம் (6) திரிம்சாம்ச வர்க்கம் (7) சப்த்தமாம்ச வர்க்கம்என எழுவகைப்படும். ஒவ்வொரு வர்க்கத்திற்கும் சுபபலம் என்ற இஷ்டபலமும் அசுபபலம் என்ற கஷ்டபலமும் உண்டு. இராசிச்சக்கிரவர்க்கத்துக்கு மாத்திரம் இஷ்டபலமும் கஷ்டபலமும் ஒன்றுய்ச்சேர்க்க பலம் ஒரு ரூபம் அல்லது

100பங்கு வரும். மற்ற ஆறுவர்க்கங்களுக்கும் தனித்தனியாய் இஷ்ட பலமும் கஷ்டபலமும் ஒன்ருய்ச்சேர்க்க பலம் $\frac{1}{2}$ ரூபம் அல்லது 50 பங்கு ஆகும். இதை நன்ருய்க்கவனிக்கவும்.

(1) இஷ்டகஷ்ட இராசிவர்க்கம் கணிக்க:— முந்தி 22-வது வாக்கியத்தில் சொல்லியவிதி பிரகாரம் இராசிவர்க்கத்தைக் கணிக்க வருகின்ற பலமே இஷ்ட இராசிவர்க்க பலமாகும். இந்த இஷ்டராசி வர்க்கப்பலத்தை 100ல் இருந்து கழிக்க வருவது கஷ்டராசி வர்க்க பலமாகும்.

உதாரணம்:— முந்தி 22-வது வாக்கியத்தில் சொல்லிய விதி பிரகாரம் இராசிவர்க்கம் கணிக்க இராசிவர்க்கப்பலம் சூரியனுக்கு 6ம், சந்திரனுக்கும் 50ம் செவ்வாயிற்கு 6ம், புதனுக்கு 13ம், குருவுக்கு 13ம், சுக்கிரனுக்கு 75ம், சனிக்கு 3ம் வந்ததென்று வைத்துக் கொள்வோம். சூரியனுக்கு ராசிவர்க்கம் 6 ஆகையால் சூரியனுக்கு இஷ்டராசிவர்க்கம் 6ஆகும். இந்த 6யை 100ல் இருந்து கழிக்கவருகின்ற 94 சூரியனுக்குக் கஷ்டராசிவர்க்கம் ஆகும். குருவுக்கு இராசி வர்க்கம் 13. ஆகையால் குருவுக்கு இஷ்டராசிவர்க்கம் 13 ஆகும். இந்த 13யை 100ல் இருந்து கழிக்கவருகின்ற 87 குருவுக்கு கஷ்ட ராசிவர்க்கம் ஆகும். இவ்விதமாகவே கணிக்க சந்திரனுக்கு இஷ்ட ராசிவர்க்கம் 50ம் கஷ்டராசிவர்க்கம் 50ம், செவ்வாயிற்கு இஷ்டராசி வர்க்கம் 6ம், கஷ்டராசிவர்க்கம் 94ம், புதனுக்கு இஷ்டராசிவர்க்கம் 13ம், கஷ்டராசிவர்க்கம் 87ம், சுக்கிரனுக்கு இஷ்டராசிவர்க்கம் 75ம் கஷ்டராசிவர்க்கம் 25ம், சனிக்கு இஷ்டராசிவர்க்கம் 3ம் கஷ்டராசி வர்க்கம் 97ம், ஆகும்.

(2) இஷ்டகஷ்ட நவாம்ச வர்க்கம் முதலிய இதர ஆறுவித வர்க்கங்கள் கணிக்க:— முந்தி 22-வது வாக்கியத்தில் சொல்லிய பிரகாரம் நவாம்சவர்க்கம், திரேகாணவர்க்கம் முதலிய (இராசி வர்க்கம் நீங்கலாயுள்ள) 6விதவர்க்கக்களைக் கணிக்கவும். இப்படிக்கணித்து வரும் பலத்தில் பாதிபலந்தான் இஷ்டவர்க்கபலம் ஆகும். இந்த இஷ்டவர்க்கபலத்தை 50ல் இருந்து கழிக்க வருவது கஷ்டவர்க்க பலமாகும்.

உதாரணம்:— முந்தி 22-வது வாக்கியத்தில் சொல்லிய விதிபிரகாரம் (இராசிவர்க்கம் நீங்கலாயுள்ள) நவாம்சை முதலிய ஆறுவர்க்கங்கணிக்கும்போது நாவாம்சை வர்க்கத்தில் பலம் சூரியனுக்கு 6ம், சந்திரனுக்கு 25ம், செய்வாயிற்கு 6ம், புதனுக்கு 6ம், குருவிற்கு 50ம், சுக்கிரனுக்கு 50ம், சனிக்கு 50ம் வந்தது என்று வைத்துக்கொள்வோம். சூரியனுக்கு நவாம்சவர்க்கம் 6. இந்த 6ல் பாதியாகிய 3 தான் சூரியனுக்கு இஷ்டநவாம்ச வர்க்கம் ஆகும். இந்த 3யை 50ல் இருந்து கழிக்க வருகின்ற 47 தான் சூரியனுக்கு கஷ்டநவாம்ச வர்க்கம் ஆகும். சந்திரனிக்கு நவாம்சை வர்க்கம் 25. இந்த 25யைப் பாதியாக்க $12\frac{1}{2}$ வரும். இந்த புத்தகம் முழுவதிலும் பாதியையும் பாதிக்குமேற் பட்டதையும் ஒன்றாகப் பாவிப்பதால் அதேமாதிரி $12\frac{1}{2}$யையும் பாவிக்க $12\frac{1}{2}$ என்பது 13 ஆகும். இந்த 13தான் அதாவது 25ல் பாதியாகிய 13தான் சந்திரனுக்கு இஷ்டநவாம்ச வர்க்கம் ஆகும். இந்த 13யை 50ல் இருந்து கழிக்க வருகின்ற 37 தான் சந்திரனுக்குக் கஷ்டநவாம்ச வர்க்கம் ஆகும். இவ்விதமாகவே கணிக்க செவ்வாயிற்கும் புதனுக்கும் தனித்தனியாய் இஷ்டநவாம்சவர்க்கம் 3ம் கஷ்டநவாம்ச வர்க்கம் 47ம், குரு, சுக்கிரன், சனி இவர்களுக்குத் தனித்தனியாய் இஷ்டநவாம்ச வர்க்கம் 25ம் கஷ்டநவாம்சம் 25ம் வரும்.

மேலும் நவாம்சைவர்க்கத்திற்குக் கணித்துக்காட்டியது போலவே (இராசிவர்க்கம் நீங்கலாயுள்ள) மற்ற இதர 5வர்க்கங்களுக்கும் அவைகளின் வர்க்கபலத்திலிருந்து அவைகளின் இஷ்டகஷ்ட வர்க்கப்பலம் கணிக்கவேண்டியது.

39-வது வாக்கியம் சுப அசுப பங்க்தீ கணிதம்.

சுப அசுப பங்க்தீ கணிக்க :—51-வது 52-வது கட்டங்களைப்போல இரண்டுகட்டங்களைப் போட்டுக் கொள்ளவும். பிறகு ஒவ்வொரு கிரகத்திற்கும் கணித்து வந்த மொத்த இஷ்டசப்த்தவர்க்கபலத்தை 4ஆல் வகுக்க வருகின்றதை அந்தந்த கிரகத்தின் கீழ் இராசிவர்க்கத்திற்கு எதிரில் போடவேணடியது. பிறகு மற்ற 6வர்க்கங்களுக்கு எதிரில் இராசிவர்க்கத்திற்கு வந்ததில் பாதியைப் போடவேண்டியது. இப்படிச்செய்ய சுப பங்க்தீவரும்.

மறுபடியும் ஒவ்வொரு கிரகத்திற்கும் கணித்து வந்த மொத்த கஷ்டசப்த்தவர்க்க பலத்தை 4ஆல் வகுக்க வருகின்றதை அந்தந்த கிரகத்தின் கீழ் இராசிவர்க்கத்திற்கு எதிரில் போடவேண்டியது. பிறகு மற்ற 6 வர்க்கங்களுக்கு எதிரில் இராசி வர்க்கத்திற்கு வந்ததில் பாதியைப் போடவேண்டியது. இப்படிச்செய்ய அசுப பங்க்தீ வரும்.

உதாரணம் :—(1) உதாரணமாக ஒவ்வொரு கிரகத்திற்கும் கணித்து வந்த மொத்த இஸ்ட சப்தவர்கஜபலம் அடியிற் கண்டபடி என்று வைத்துக்கொள்வோம்.

கிரகம்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி	
மொத்த இஷ்டசப்த்த வர்கஜபலம்	77	140	70	55	111	131	76	(1)
இதை 4ல் வகுக்க	19	35	18	14	28	33	19	வரும் (2)
ஆகையால் இராசி வர்க்க சுபபங்க்தீ	19	35	18	14	28	33	19	ஆகும் (3)
நவாம்சவர்க்க சுபபங்க்தீ	10	18	9	7	14	17	10	ஆகும் (4)
திரேகாண வர்க்க சுபபங்க்தீ	10	18	9	7	14	17	10	ஆகும் (5)
துவாதசாம்ச வர்க்க சுபபங்க்தீ	10	18	9	7	14	17	10	ஆகும் (9)
சப்தமாம்ச வர்க்க சுபபங்க்தீ	10	18	9	7	14	17	10	ஆகும் (7)
ஓரா வர்க்க சுபபங்க்தீ	10	18	9	7	14	17	10	ஆகும் (8)
திரிம்சாம்ச வர்க்க சுபபங்க்தீ	10	18	9	7	14	17	10	ஆகும் (9)

ஆகையால் சுபபங்க்தீ என்பது மேலே (2) முதல் (9) வரையி லும் கொடுத்துள்ளது போல ஆகும்.

குறிப்பு :—4லும் 2லும் வகுக்கும்போது ஈவு $\frac{1}{2}$யும் $\frac{1}{2}$க்கு மேற்பட்டும் வந்தால் ஒன்றாகபாவிக்கப்பட்டுளது. (4)முதல் (9)வரை யிலுமுள்ள எண்கள் (3)க்கு எதிரிலுள்ள எண்களின் பாதியாகும்.

உதாரணம் :—(2) உதாரணமாக ஒவ்வொரு கிரகத்திற்கும் கணித்து வந்த மொத்த கஷ்டசப்த்தவர்கஜபலம் அடியிற் கண்டபடி என்று வைத்துக் கொள்வோம்.

கிரகம்	சூ	சந்	செ	பு	குரு	சு	சனி	
மொத்த கஷ்ட சப்த்த வர்கஜபலம்	323	260	330	345	289	269	324	வரும்(1)
இதை 4ல் வகுக்க	81	65	83	86	72	67	81	வரும்(2)
ஆகையால் ராசிவர்க்க அசுபபங்க்தீ	81	65	83	86	72	67	81	ஆகும்(3)
நவாம்ச வர்க்க அசுபபங்க்தீ	41	33	42	43	36	34	41	ஆகும்(4)
திரேகாண வர்க்க அசுபபங்க்தீ	41	33	42	43	36	34	41	ஆகும்(5)
துவாதசாம்ச வர்க்க அசுபபங்க்தீ	41	33	42	43	36	34	41	ஆகும்(6)
சப்த்தமாம்ச வர்க்க அசுபபங்க்தீ	41	33	42	43	36	34	41	ஆகும்(7)
ஓராவர்க்க அசுபபங்க்தீ	41	33	42	43	36	34	41	ஆகும்(8)
திரிசாம்ச வர்க்க அசுபபங்க்தீ	41	33	42	43	36	34	41	ஆகும்(9)

ஆகையால் அசுபபங்க்தீ என்பது மேலே (3)முதல் (9) வரையி லுங் கொடுத்துள்ளது போல ஆகும்.

குறிப்பு:—4லும் 2லும் வகுக்கும்போது ஈவு $\frac{1}{2}$யும் $\frac{1}{2}$க்கு மேற்பட்டு வந்தால் ஒன்ருகப் பாவிக்கப்பட்டுளது. (4) முதல் (9) வரையிலுமுள்ளஎண்கள் (3)க்கு எதிரிலுள்ளஎண்களின் பாதியாகும்

மொத்த இஷ்ட அல்லது கஷ்ட சப்த்தவர்கஜ பலத்தை முத லில் 4ஆல் வகுத்து நவாம்சை முதலிய 6 வர்க்கங்களை அடைவதை விட மொத்த இஷ்ட அல்லது கஷ்ட சப்த்தவர்கஜ பலத்தை ஓரே தடவையில் (4யை 2ஆல் பெருக்க வருகின்ற) 8ஆல் வகுத்து அடைவது துல்லியமாகும்.

40-வது வாக்கியம்:—சுப அசுப மத்தியபல கணிதம்

சுப மத்திய பலம் கணிக்க:—ஒரு கிரகத்திற்கு வந்த இராசி வர்க்க சுபபங்க்தீ என்பதை அந்த கிரகம் இராசிச்சக்கிரத்தில் எந்த ராசியிலிருக்கின்றதோ அந்த இராசிக்குடைய கிரகத்திற்கு வந்த மொத்த இஷ்டசப்த்தவர்கஜபலத்தால் பெருக்க வருவது * இராசி வர்க்கத்தில் அந்த கிரகத்திற்கு வரும் சுப மத்திய பலம் ஆகும். இவ்விதமாகவே ஒரு கிரகத்திற்கு வந்த நவாம்சவர்க்க சுபபங்க்தீ என்பதை அந்த கிரகம் நவாம்சசக்கிரத்தில் எந்த இராசியிலிருக்கின் றதோ அந்த ராசிக்குடைய கிரகத்திற்கு வந்த மொத்த இஷ்டசப்த் தவர்கஜ பலத்தால் பெருக்க வருகின்ற தொகைக்கு அடியில் குறிப் பில் சொல்லியபடி கிரிகை செய்ய வருவது * நவாம்சைவர்க்கத்தில் அந்த கிரகத்திற்கு வரும் சுபமத்திய பலம் ஆகும். இவ்விதமாகவே ஒரு கிரகத்திற்கு திரேகாணவர்க்கம் துவாதசாம்சவர்க்கம் சப்த்த மாம்சவர்க்கம் இவைகளில் வரும் சுபமத்திய பலத்தைக் கணிக்க வேண்டியது. மேலும் ஒரு கிரகத்திற்கு வந்த ஓராவர்க்க சுப பங்க்தீ என்பதை அந்த கிரகம் இருக்கும் ஓராதிபதியினுடைய மொத்த இஷ்ட சப்த்தவர்கஜபலத்தால் பெருக்க வருகின்ற தொகை க்கு அடியில் குறிப்பில் சொல்லியபடி கிரிகை செய்ய வருவது * ஓராவர்க்கத்தில் அந்த கிரகத்திற்கு வரும் சுபமத்தியபலமாகும். ஒரு கிரகத்திற்கு வந்த திரிம்சாம்சவர்க்க சுபபங்க்தீ என்பதை அந்த கிரகம் இருக்கும் திரிம்சாம்சாதிபதியினுடைய மொத்த இஷ்ட

சப்த்தவர்கஜபலத்தால் பெருக்க வருகின்ற தொகைக்கு அடியில் குறிப்பில் சொல்லியபடி கிரிகை செய்ய வருவது * திரிம்சாம்சவர்கத்தில் அந்த கிரகத்திற்கு வரும் சுபமத்தியபலமாகும்.

* குறிப்பு:—பெருக்கிவந்த தொகைக்கு 36-வது வாக்கியத்தின் கீழ் 1-வது முதல் 4-வது வரையிலுமுள்ள குறிப்புகளில் சொல்லிட்படி கிரிகை செய்ய வேண்டியது அவசியம்

உதாரணம்: சூரியனுக்கு இராசிவர்க்க சுபபங்க்தீ 19 என்றும் சூரியன் இராசிச்சக்கிரத்தில் கன்னியில் இருப்பதாகவும் அந்த கன்னியா ராசிக்குடைய கிரகமாகிய புதனுக்கு மொத்த இஷ்டசப்த்தவர்கஜபலம் 55 என்றும் வைத்துக்கொள்வோம். இந்த 19யை 55ஆல் பெருக்க 1045 வரும் இந்த 1045ல் உள்ள முதல் இரண்டு லக்கங்களைத் தள்ளிவிட 10 நிற்கும். தள்ளிவிடப்பட்ட லக்கங்களின் தொகையாகிய 45 என்பது 50க்குள்படடதால் மூன்றுவது லக்கமாகிய 1-க்கு 1 சேர்க்கவேண்டியதவசியமில்லை. ஆகையால் தள்ளிடப்பட்ட பிறகு நின்ற 10 தான் சூரியனுக்கு இராசிவர்க்கத்தில் வந்த சுபமத்தியபலமாகும்.

உதாரணம்:—புதனுக்கு ஓராவர்க்கத்தில் சுபபங்க்தீ 7 என்றும் புதன் சூரியனுடைய ஓரையிலிருப்பதாக வைத்துக்கொண்டு அந்த சூரியனுக்கு மொத்த இஷ்டசப்த்தவர்கஜபலம் 77 என்றும வைத்துக்கொள்வோம். இந்த 7யை 77 ஆல் பெருக்க 539 வரும் இந்த 539ல் முதல் இரண்டு இலக்கங்களைத்தள்ளிவிட 5 நிற்கின்றது. தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 39 என்பது 50 க்குள்பட்டதால் மூன்றுவது இலக்கமாகிய 5க்கு 1 சேர்க்க வேண்டியதவசியமில்லை. ஆகையால் தள்ளிவிடப்பட்ட பிறகு நின்ற 5 தான் புதனுக்கு ஓராவர்க்கத்தில் வந்த சுபமத்தியபலமாகும்.

அசுபமத்தியபலம் கணிக்க:—சுபமத்தியபலம் கணிக்கச் சொல்லிய வழியில் சுபபங்க்தீ என்பதற்குப்பதிலாக அசுபபங்க்தீ என்பதையும் மொத்த இஷ்டசப்த்தவர்கஜ பலத்திற்குப்பதிலாக மொத்த கஷ்ட சப்த்தவர்கஜ பலத்தையும் உபயோகப்படுத்திக் கணிக்க அசுபமத்தியபலம் வரும்.

உதாரணம்:—சூரியனுக்கு இராசிவர்க்க அசுபபங்க்தீ 81 என்றும், சூரியன் இராசிச்சக்கிரத்தில் கன்னியிலிருப்பதாகவும் அந்த கன்னியாராசிக்குடைய கிரகமாகிய புதனுக்கு மொத்த கஷ்ட சப்த்தவர்கஜபலம் 345 என்றும் வைத்துக்கொள்வோம். இந்த 81யை 345 ஆல் பெருக்க 27945 வரும். இந்த 27945ல் உள்ள முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 279 நிற்கும். தள்ளிவிடப் பட்ட இலக்கங்களின் தொகையாகிய 45 என்பது 50க்குள்பட்ட தால் மூன்றுவது லக்கமாகிய 9க்கு 1 சேர்க்கவேண்டிபதவசியமில்லை ஆகையால் தள்ளிவிடப்பட்ட பிறகு நின்ற 279 தான் சூரியனுக்கு இராசிவர்க்கத்தில் வந்த அசுபமத்தியபலமாகும்.

உதாரணம்:—புதனுக்கு ஓராவர்க்கத்தில் அசுபபங்க்தி 43 என்றும் புதன் சூரியனுடைய ஓரையிலிருப்பதாக வைத்துக்கொண்டு அந்த சூரியனுக்கு மொத்த கஷ்டசப்த்தவர்க்கஜபலம் 323 என்று வைத்துக்கொள்வோம். இந்த 43யை 323ஆல் பெருக்க 13889 வரும். இந்த 13889ல் முதல் இரண்டு இலக்கங்களைத்தள்ளிவிட 138 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 89 என்பது 50க்கு மேற்பட்டிருப்பதால் மூன்றுவது இலக்கமாகிய 8க்கு 1 சேர்க்க 8 என்பது 9ஆக மாறும். ஆகையால் தள்ளிவிடப் பட்ட பிறகு நின்றதாகிய 138 என்பது 139 ஆக மாறும். ஆகையால் இந்த 139 தான் புதனுக்கு ஓராவர்க்கத்தில் வந்த அசுபமத்தியபல மாகும்.

41-வது வாக்கியம் ஸ்பஷ்டசுப அசுப பலம்:—

ஸ்பஷ்டசுப பலம் கணிக்க:—ஒரு கிரகத்திற்கு வந்த இஷ்டசட் பலத்தை அந்த கிரகம் இராசிச்சக்கிரத்திலிருக்கின்ற ராசியாதிபதியினுடைய இஷ்டசட்பலத்தால் பெருக்க வருகின்ற தொகையினுடைய மூலத்தை அந்த கிரகத்தினுடைய இராசிவர்க்க சுப மத்திய பலத்தால் பெருக்கவேண்டியது. பெருக்கிவந்ததொகையிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை முன்னே சொல்லிய பிரகாரம் * தள்ளிவிட்டுகிரிகை செய்ய நின்றது அந்த கிரகத்திற்கு இராசிவர்க்கத்தில் ஸ்பஷ்டசுபபலம் ஆகும்.

இவ்விதமாகவே ஒரு கிரகத்திற்கு வந்த இஷ்டசட்பலத்தை அந்த கிரகம் நவாம்ச சக்கிரத்திலிருக்கின்ற ராசியாதிபதியினுடைய

இஷ்டசட் பலத்தால் பெருக்க வருகின்ற தொகையினுடைய மூலத்தை அந்த கிரகத்தினுடைய நவாம்சவர்க்க சுப மத்திய பலத்தால் பெருக்கவேண்டியது. பெருக்கிவந்த தொகையிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை முன்னே சொல்லிய பிரகாரம் * தள்ளிவிட்டுகிரியை செய்ய நின்றது அந்த கிரகத்திற்கு நவாம்சைவர்க்கத்தில் ஸ்பஷ்ட சுப பலம் ஆகும். இவ்விதமாகவே ஒரு கிரகத்திற்குத் திரேகாணவர்க்கம் துவாதசாம்சவர்க்கம் திரிம் சாம்சவர்க்கம் இவைகளில்வரும் ஸ்பஷ்டசுப பலத்தை அந்தந்த வர்க்கத்தை அனுசரித்துக் கணிக்க அந்தகிரகத்திற்கு அந்தந்தவர்க் கத்தினுடைய ஸ்பஷ்டசுப பலம்வரும்.

மேலும் ஒருகிரகத்திற்கு வந்த இஷ்டசட் பலத்தை அந்த கிர கம் இருக்கும் ஓராதிபதியினுடைய இஷ்டசட்பலத்தால் பெருக்க வருகின்ற தொகையினுடைய மூலத்தை அந்த கிரகத்தினுடைய ஓராவர்க்க சுபமத்திய பலத்தால் பெருக்கவேண்டியது. பெருக்கி வந்த தொகையிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை முன்னே சொல்லிய பிரகாரம்* தள்ளிவிட்டு கிரிகை செய்ய நின்ற து அந்த கிரகத்திற்கு ஓராவர்க்கத்தில் ஸ்பஷ்ட சுபபலம் ஆகும்.

இவ்விதமாகவே ஓரு கிரகத்திற்கு வந்த இஷ்டபலத்தை அந்த கிரகம் இருக்கும் திரிம்சாம்சாதிபதியினுடைய இஷ்டசட்பலத்தால் பெருக்கவருகின்ற தொகையினுடைய மூலத்தை அந்த கிரகத்தி னுடைய திரிம்சாம்சவர்க்க சுபமத்திய பலத்தால பெருக்கவேண் டியது. பெருக்கிவந்த தொகையிலுள்ள இலக்கங்களில் முதல் இரண்டு இலக்கங்களை முன்னே சொல்லிய பிரகாரம் * தள்ளி விட்டு கிரியை செய்ய நின்றது அந்த கிரகத்திற்கு திரிம்சாம்சவர்க் கத்தில் ஸ்பஷ்டசுபபலம் ஆகும்.

உதாரணம்:— சூரியன் இராசிச்சக்கிரத்தில் கன்னியில் இருப்ப தாகவும், சூரியனுக்கு இஷ்டசட்பலம் 132 என்றும், சூரியன் இருக் கும் படியான ராசியாதிபதியாகிய புதனுக்கு இஷ்டசட்பலம் 765

---

* குறிப்பு:— பெருக்கிவந்த தொகைக்கு 36-வது வாக்கியத்தின் கீழ் 1-வது முதல் 4-வது வரையிலுள்ள குறிப்புகளில் சொல்லிய பிரகாரம் கிரியை செய்ய வேண்டியது.

என்றும், சூரியனுக்கு இராசிவர்க்கத்தில் சுப மத்தியபலம் 10 என்றும் வைத்துக்கொண்டு, சூரியனுக்கு இராசிவர்க்கத்தில் ஸ்பஷ்ட சுபபலம் கணிப்போம். 132யை 765ஆல் பெருக்க 100980வரும். இந்த 100980க்கு 35வது வாக்கியத்தில் செல்லிய பிரகாரம் மூலம் கணிக்க மூலம் 318 வரும். இந்த 318யை சுபமத்திய பலமாகிய 10ஆல் பெருக்க 3180வரும். இதில் இரண்டு இலக்கங்களைத்தள்ளி விட 31 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 80 என்பது 50க்கு மேற்பட்டதால் மூன்றுவது இலக்கத்துடன் 1 கூட்ட 31என்பது 32ஆகும். ஆகையால் தள்ளிவிடப்பட்ட பிறகு நின்றதாகிய 31 என்பது 32 ஆகும். ஆகையால் இந்த 32தான் சூரியனுக்கு இராசிவர்க்கத்தில் வந்த ஸ்பஷ்ட சுபபலம் ஆகும்.

உதாரணம்:— சந்திரன் சூரியனுடைய ஓரையிலிருப்பதாகவும் சந்திரனுக்கு இஷ்டசட்பலம் 257 என்றும், சந்திரன் இருக்கும் படியான ஓராதிபதியாகிய சூரியனுக்கு இஷ்டசட்பலம் 132 என்றும் சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் சுபமத்தியபலம் 14 என்று வைத்துக்கொண்டு, சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் ஸ்பஷ்ட சுபபலம் கணிப்போம். 257யை 132ஆல் பெருக்க 33924 வரும். இந்த 33924க்கு 35-வது வாக்கியத்தில் சொல்லிய பிரகாரம் மூலம் கணிக்க, மூலம் 184வரும். இந்த 184யை சுபமத்திய பலமாகிய 14ஆல் பெருக்க 2576வரும். இதில் முதல் இரண்டு இலக்கங்களைத்தள்ளிவிட 25 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 76 என்பது 50க்கு மேற்பட்டதால் மூன்றுவது இலக்கத்துடன் 1கூட்ட மூன்றுவது இலக்கமாகிய 5என்பது 6ஆக மாறும். ஆகையால் தள்ளிவிடப்பட்ட பிறகு நின்றதாகிய 25 என்பது 26ஆக மாறும். ஆகையால் இந்த 26தான் சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் வந்த ஸ்பஷ்ட சுபபலம் ஆகும்.

ஸ்பஷ்ட அசுபபலம் கணிக்க :— ஸ்பஷ்ட சுபபலத்தைக் கணிக்க மேலேசொல்லிய வழிகளில் இஷ்டசட்பலத்திற்குப் பதிலாகக் கஷ்டசட்பலத்தையும், சுபமத்தியபலத்திற்குப் பதிலாக அசுபமத்திய பலத்தையும் உபயோகித்து கணிக்க ஸ்பஷ்ட அசுபபலம் வரும்.

உதாரணம்:— சூரியன் இராசிச்சக்கிரத்தில் கன்னியாராசியிலிருப்பதாகவும், சூரியனுக்குக் கஷ்டசட்பலம் 407 என்றும், சூரியனிருக்கும்படியான இராசியாதிபதியாகிய புதனுக்குக் கஷ்டசட்பலம் 124 என்றும், சூரியனுக்கு இராசிவர்க்கத்தில் அசுபமத்திய பலம் 279 என்றும் வைத்துக் கொண்டு, சூரியனுக்கு இராசிவர்க்கத்தில் ஸ்பஷ்ட அசுபபலம் கணிப்போம். 407யை 124ஆல் பெருக்க 50468வரும். இந்த 50468க்கு 35-வது வாக்கியத்தில் சொல்லிய பிரகாரம் மூலம் கணிக்க, மூலம் 225 வரும். இந்த 225யை அசுப மத்திய பலமாகிய 279ஆல் பெருக்க 62775 வரும். இதில் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 627 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 75 என்பது 50க்கு மேற்பட்டதால் மூன்றுவது இலக்கத்துடன் 1கூட்ட மூன்றுவது இலக்கமாகிய 7என்பது 8ஆகும். ஆகையால் தள்ளிவிடப்பட்ட பிறகு நின்றதாகிய 627 என்பது 628 ஆகும். இந்த 628 தான் சூரியனுக்கு இராசிவர்க்கத்தில் வந்த ஸ்பஷ்ட அசுபபலம் ஆகும்.

உதாரணம்;— சந்திரன் சூரியனுடைய ஒரையிலிருப்பதாகவும், சந்திரனுக்குக் கஷ்டசட்பலம் 399 என்றும், சந்திரனிருக்கும்படியான ஓராதிபதியாகிய சூரியனுக்குக் கஷ்டசட்பலம் 407 என்றும், சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் அசுபமத்தியபலம் 107 என்றும் வைத்துக்கொண்டு சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் ஸ்பஷ்ட அசுப பலம் கணிப்போம். 399யை 404ஆல் பெருக்க 162393 வரும். இந்த 162393க்கு 35-வது வாக்கியத்தில் சொல்லிய பிரகாரம் மூலம் கணிக்க, மூலம் 403வரும். இந்த 403யை அசுபமத்திய பலமாகிய 107ஆல்பெருக்க 42121 வரும். இதில் முதல் இரண்டு இலக்கங்களைத் தள்ளிவிட 431 நிற்கும். தள்ளிவிடப்பட்ட இலக்கங்களின் தொகையாகிய 21 என்பது 50க்குள் பட்டதால் மூன்றுவது இலக்கத்துடன் 1கூட்ட வேண்டியதவசியமில்லை. ஆகையால் தள்ளிவிடப்பட்ட பிறகு நின்றதாகிய 431 தான் சந்திரனுக்கு ஓராவர்க்கத்தில் வந்த ஸ்பஷ்ட அசுபபலம் ஆகும்.

இந்த புக்தகத்தில் 2-வது அத்தியாயத்தில் 19-வது 20-வது வாக்கியங்களை உபயோகப்படுத்தும் விதத்தில் கிரகங்களின் பார்வை முதலிய எவ்வித பலங்களையும் ரூபம் என்று சொல்லப்பட்ட ஒரு

அளவைக் கொண்டு அளப்பது வழக்கம் என்று முன்னமே சொல்லியிருக்கின்றோம். எல்லா கிரகங்களின் முழுபலம் இத்தனை ரூபம் என்று சொல்லப்படும். ஒருரூபத்தை 60 சமபாகங்களாகப்பங்கிட வருகின்ற ஒருபாகத்திற்கு விரூபம் என்று பெயர். ஆகையால் 1ரூபத்தில் 60 விரூபங்களுண்டு. 1 ரூபத்தை 60ஆல் வகுப்பதைவிட 100ஆல் வகுப்பது கணிதத்தில் சுலபமானதால் இந்த புத்தகத்தில் 1ரூபத்தை 100 சமபாகமாகப் பங்கிட்டு கிரகங்களின் எவ்வித பலமும் 100ல் இத்தனை பங்கு என்று கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஆகையால் இந்த புத்தகத்தில் கொடுத்துள்ள பங்குகளில் 100 பங்கு கொண்டது 1 ரூபமாகும். உதாரணமாக 55-வது கட்டத்தில் சூரியனுக்கு மொத்த ஸ்பஷ்டசுபபலம் 165 என்று கணித்து போட்டிருக்கின்றது. அதாவது சூரியனுடைய மொத்த ஸ்பஷ்டசுபபலம் என்பது 1ரூபத்தை 100சமபாகமாகப்பங்கிட வருகின்ற பாகத்தைப்போன்ற 165 பாகங்கள் உடையது என்பதாம். ஆகையால் 165 என்பது எத்தனை ரூபம்என்று பார்ப்போமானால் 1ரூபமும் 100ல் 65 பங்கு ரூபமும் ஆகும். இவ்விதமாகவே இந்த 55-வது கட்டத்தில் சந்திரனுக்கு மொத்த ஸ்பஷ்டசுபபலம் 467என்று போட்டிருப்பதால் சந்திரனுக்கு மொத்த ஸ்பஷ்டசுபபலம் 4ரூபமும் 100ல் 67 பங்கு ரூபமும் ஆகும். மேலும் 37-வது கட்டத்தில் சூரியனுக்குச் சட்பலம் 573 என்று கணித்து போட்டிருப்பதால் சூரியனுக்குச் சட்பலம் எத்தனை ரூபம் என்று பார்ப்போமானால் 5 ரூபமும் 100ல் 73பங்கு ரூபமும் ஆகும். இவ்விதமாகவே சந்திரனுக்கு சட்பலம் 676 அல்லது 6ரூபமும் 100ல் 76 பங்கு ரூபமும் ஆகும். 100 பங்குகொண்டது 1ரூபமானதால், 75என்பது முக்கால் ரூபமும், 50 என்பது அரைரூபமும் 25 என்பது கால் ரூபமும், $12\frac{1}{2}$ என்பது அரிக்கால் ரூபமும், $6\frac{1}{4}$ என்பது 1விசம் ரூபமும் ஆகும். ஆகையால் மேலே சந்திரனுக்குச் சொல்லிய சட்பலமாகிய 676 பங்கு என்பது $6\frac{3}{4}$ ரூபத்திற்குமேல் கொஞ்சம் அதிகம் என்று ஏற்படும். இவ்விதமாகவே ரூப கணக்கு அறிய வேண்டியது.

கிரகங்களின் சுப அசுபபலத்தை இந்த புத்தகத்தில் சொல்லிய பிரகாரம் கணிதஞ்செய்து அறிவது மகரிஷிகளால் சொல்லப்பட்டது என்று அறியவேண்டியது.

கிரகயுத்தபலம்.

சூரியன் சந்திரன் ஆகிய இவ்விரண்டு கிரகங்களுக்கு "யுத்த பலம்' என்பது கிடையாது. இவை நீங்கலாக மற்ற குஜாதி பஞ்சகிர கங்களுக்கும் கிரகயுத்தம் உண்டு. கிரகங்களின் யுத்த கணிதத்தைப் பற்றி நம் முன்னோர்கள் பலவித அபிப்பிராயமாகச் சொல்லி இருக் கின்றார்கள். குஜாதிபஞ்சகிரகங்களில் இரண்டு கிரகங்கள் ஸ்புட ரீதியாய் ஒரேஸ்புடத்திலிருந்து (அதாவது இரண்டு கிரகங்களின் ஸ்புடங்கள் பாகை, கலைவரையிலும் ஒன்றாய் இருந்து) இரண்டு கிரகங்களின் "விக்ஷேபம்" (Latitude) ஒரேதிசையில் இருந்தால் இந்த இரண்டுகிரகங்களுக்கும் யுத்தம்உண்டு என்றும், ஸ்புடங்களில் ஒரு கலையாகிலும் வித்தியாசம் இருந்தால் கிரகங்களுக்கு யுத்தம் கிடையாது என்றும் சொல்வர் சிலர். இன்னம் சிலர் ஸ்புடங்களில் ஒருகலைகூட வித்தியாசமில்லாமலிருந்து ஒருகிரக பிம்பத்திற்கும் மற்றொருகிரக பிம்பத்திற்கும் இடையிலுள்ளதூரம் ஒருபாகைக் குள் இருந்தால்தான் அந்த இரண்டு கிரகங்களுக்கும் யுத்தம் உண் டென்பர். முன்சொன்ன வகுப்பார் கொள்கைபடி யுத்தங்கள் ஜாதகங் களில் நேரிடுவது அருமையாக விருக்கும். பின் சொன்ன வகுப்பார் கொள்கைபடி ஜாதகங்களில் கிரகயுத்தம் நேரிடுவது மிகவும் அருமை யாக விருக்கும். (நாம் எடுத்துக்கொண்ட உதாரண ஜாதகத்தில் கிரகயுத்தம் நேரிடவில்லை என்பதைக் கவனிக்கவும்). யுத்தத்தில் வடக்கிலுள்ள கிரகம் ஜெயிக்கின்றதென்றும் தெற்கிலுள்ள கிரகம் தோல்வியடைகிறதென்றும் சிலர், சொல்லுவார் பிம்பம் பெரியதாயும் பிரகாசம் அதிகமாயுமுள்ள கிரகம் தெற்கில் இருந்த போதிலும் ஜெயிக்கின்றது என்றுஞ் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் அயனபல ரீதியாய் வடக்கிலுள்ள கிரகம் தெற்கிலுள்ள கிரகத்தை விட வலிவுள்ளதால், வடக்கிலுள்ள கிரகம் பிம்பம் சிறியதாயுடைய தாயினும் ஜெயிக்கின்றது என்பதைப்பலர் அங்கீகரிக்கின்றனர்.

யுத்த பலம் கணிக்க வேண்டுமானால் முதலில் யுத்த கிரகங்களில் பலத்தை அறியவேண்டியது. "பலம்" என்பது (1) ஸ்தானபலம், (2) காலபலம், (3) திக்குப்பலம், (4) அயனபலம் ஆகிய இந்த நான்கு பலத்தையுங்கூட்ட வருகின்ற மொத்தபலம் ஆகும். யுத்தத்

திலுள்ள இரண்டு கிரகங்களின் பலங்களுக்குமுள்ள வித்தியாசத்தை ஒரு சார்பார் இரண்டு கிரகங்களுக்கும் இடையிலுள்ள தூரத்தால் (அதாவது விக்ஷேப வித்தியாசத்தால்) வகுக்க வேண்டுமென்றும், மற்றொருசார்பார் இரண்டு கிரகங்களின் பிம்பங்களுக்கு முள்ள வித்தியாசத்தால் வகுக்கவேண்டும் என்றும் சொல்வர். இப்படி வகுக்க வருகின்ற பலத்தை ஜெயிக்கின்ற கிரகமாகிய வடக்கிலிருக்கின்ற கிரகத்தின் பலத்துடன் கூட்டவேண்டும், தெற்கிலிருக்கின்ற கிரகத்தின் பலத்திலிருந்து கழிக்க வேண்டும்.

கிரககங்களின் விக்ஷேபம் அறிதல்:— இராசி மண்டலமாகிய கிராந்தி மண்டலத்தை விட்டு அதற்கு வடக்கு அல்லது தெற்கில் கிரகங்கள் ஒதுங்கி இருக்குந்தூரத்திற்கு விக்ஷேபம் என்று பெயர். வடக்கே ஒதுங்கி இருந்தால் "வடக்கு விக்ஷேபம்" என்றும், தெற்கே ஒதுங்கி இருந்தால் "தெற்குவிக்ஷேபம்" என்றுஞ் சொல்படும். யுத்த நிர்ணய விதியில் கிரகங்களின் விக்ஷேபம் ஒரேதிசையில் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றது. அதாவது யுத்தத்திலிருக்கின்ற இரண்டு கிரகங்களின் விக்ஷேபம் வடக்கு விக்ஷேபம் அல்லது தெற்கு விக்ஷேபமாக விருக்கவேண்டுமே தவிற ஒன்று வடக்கு விக்ஷேபமாகவும் மற்றொன்று தெற்கு விக்ஷேபகவும் இருக்கக்கூடாது என்பதாம். விக்ஷேபம் கணிக்க வேண்டுமானால் வானசாஸ்திரந் தெரியவேண்டும். வானசாஸ்திரந் தெரிந்தவர்கள் வானசாஸ்திரங்களில் சொல்லிய பிரகாரம் விக்ஷேபங்களைக் கணித்துக் கொள்ளவேண்டியது. வானசாஸ்திரந் தெரியாதவர்கள் இந்த புத்தகத்தில் 47-வது பக்கத்தில் சொல்லியுள்ள "நாடிகல் ஆல்மநெக்" என்ற புத்தகத்திலிருந்து கணித்து அல்லது "எபிமெரிஸ்" (Ephemeris by Raphael or Zadkiel) என்ற புத்தகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

கிரகங்களின் பிம்ப அளவு அடியிற்கண்டபடி ஆகும்.

கிரகங்கள்	பிம்பத்தின் அளவு				
செவ்வாய்	9·36 விகலை	அல்லது	9 விகலை		
புதன்	6·68 ,,	,,	7 ,,		
குரு	194·72 ,,	,,	195 ,,		
சுக்கிரன்	16·80 ,,	,,	17 ,,		
சனி	169·50 ,,	,,	170 ,,	ஆகும்.	

உதாரணம்:— 1925ஆ டிசம்பர்மீ 15ந்உ இரவு 3மணி-47 நிமிஷத்தில் செவ்வாய் சனி இவர்களின் ஸ்புடமும், விக்ஷேபமும், பலமும் அடியிற்கண்டபடி இப்பதாக பாவித்துக்கொண்டு யுத்த பலம் கணிப்போம்.

கிரகங்கள்	ஸ்புடம்	விக்ஷேபம்		பலம்
	பாகை—கலை	பாகை—கலை		
செவ்வாய்	209—24	0—21	வடக்கு	708 பாகம்
சனி	209—24	2— 5	வடக்கு	500 ,,
வித்தியாசம்	0— 0	1—44	வடக்கு	208 ,,

(1) விக்ஷேபவித்தியாச தூரத்தால் வகுக்கவேண்டியது என்று சொல்பவர்களின் கொள்கைபடி கணிக்க:— இரண்டு கிரகங்களின் பலத்தின் வித்தியாசம் 208. இந்த 208யை விக்ஷேப வித்தியாசமாகிய 1பாகை-44கலையால் வகுக்கவேண்டியது. 1பாகை-44 கலை என்பதைக் கலையாக மாற்ற 104 கலைவரும். கிரகபல வித்தியாசமாகிய 208யை 104ஆல் வகுக்க ஈவு 2வரும். செவ்வாய், சனி இவர்களில் சனி என்பது செவ்வாய்க்கு வடக்கில் இருப்பதால் யுத்தத்தில் சனி ஜெயித்தகிரகம். ஆகையால் மேலேவந்த 2யைச் சனியின் பலமாகிய 500உடன் கூட்டவேண்டியது. இப்படிச்செய்ய சனியின் பலம் 502 ஆகும். செவ்வாய் தோல்வியடைந்த கிரகமாதலால் செவ்வாயின் பலமாகிய 708ல் இருந்து மேலே வந்த 2யைக் கழிக்க 706 வரும். ஆகையால் யுத்தபல கிரியைச் செய்தபிறகு சனிக்குப்பலம் 502ம் செவ்வாயிற்குப் பலம் 706ம் ஆகும்.

குறிப்பு:— (1) யுத்த கிரியை செய்வதற்கு முந்தியுள்ள செவ்வாய் சனி பலத்தைக்கூட்ட அதாவது 708யையும் 500யையுங்கூட்ட 1208 வரும். யுத்தபல கிரியை செய்தபிறகு இவர்களுக்கு வரும் பலங்களாகிய 706யையும் 502யையுங்கூட்ட 1208வரும். ஆகையால் யுத்தபல கிரியை செய்தலுக்கு முந்தியும் பிந்தியும் இவர்களின் பலத்தைக்கூட்ட வருந்தொகை ஒன்ருய் இருக்கவேணும் என்று அறியவும்.

குறிப்பு:— (2) ஈவு கிரகபல வித்தியாச எண்ணிற்குமேல் அதிகமாகவருமானல் ஈவிற்குப் பதிலாக கிரகபல வித்தியாச எண்

ணையே ஈவாக பாவிக்க வேண்டியது. அதாவது கிரகபல வித்தியாசத்தையே ஜெயித்த கிரகபலத்துடன் கூட்டவேண்டியது, தோற்ற கிரகத்திலிருந்து கழிக்க வேண்டியது.

(2) பிம்பவித்தியாசத்தால் வகுக்க வேண்டியது என்று சொல்பவர்களின் கொள்கைபடி கணிக்க:— மேலே எடுத்துக் கொண்ட உதாரணத்தில் இரண்டு கிரகங்களின் பலத்தின் வித்தியாசம் 208 ஆகும். சனியினுடைய பிம்ப அளவு 170 விகலை. செவ்வாயின் பிம்ப அளவு 9 விகலை. 170க்கும் 9க்கும் உள்ளவித்தியாசம் 161 விகலை ஆகும். பலத்தின் வித்தியாசமாகிய 208யை பிம்ப வித்தியாசமாகிய 161ஆல் வகுக்க ஈவு 1வரும். இந்த 1யை ஜெயித்த கிரகபலமாகிய 500உடன் கூட்ட சனிக்கு 501வரும். இந்த 1யைத் தோல்வியடைந்த கிரகமாகிய 708லிருந்து கழிக்க செவ்வாயிற்கு 707 வரும். ஆகையால் யுத்தபல கிரியை செய்தபிறகு செவ்வாயிற்குப் பலம் 707ம், சனிக்குப்பலம் 501ம் ஆகும்.

குறிப்பு:— ஈவு, கிரகபல வித்தியாச எண்ணிற்குமேல் அதிகமாய் வருமானால் கிரகபல வித்தியாச எண்ணையே முன்போல ஈவிற்குப்பதிலாக வைத்துக் கொள்ளவேண்டும்.

யுத்தபல கிரியை செய்தபிறகு மேலே வந்த ஈவை 37-வது கட்டத்தில் வரிசை எண் 8ற்கு நேராய் ஜெயித்த கிரகத்தின் கீழ் கொடுத்துள்ள எண்ணுடன் கூட்ட வருவது ஜெயித்த கிரகத்தின் சட்பலமாகும். இந்த ஈவை 37-வது கட்டத்தில் 8-வது வரிசை எண்ணிற்கு நேராய் தோல்வியடைந்த கிரகத்தின்கீழ் கொடுத்துள்ள எண்ணிலிருந்து கழிக்கவருவது தோல்வியடைந்த கிரகத்தின் சட்பலமாகும் — நாம் எடுத்துக்கொண்ட உதாரண ஜாதகத்தில் கிரக யுத்தம் கிடையாது.

42-வது—வாக்கியம்— ஆயுள்நிர்ணய கணிதம்

இங்கு இனிமேல் சொல்லப்படும் படியான ஆயுள் நிர்ணய கணிதம், வராஹ மிகிராச்சாரியார் அருளிச்செய்த பிருஹத் ஜாதகத்தின் 7வது அத்தியாயத்திலும்: கல்யானவர்மான் அருளிச் செய்த ஜாதகபாரி ஜாதத்தின் 5-வது அத்தியாயத்திலும் சொல்லியதாகும். ஆயுள் நிர்ணய கணிதத்திற்கு கிரகங்களின் பலம் தெரிய

வேண்டிய தவசியமானதால் ஆயுள் கணிதம் என்பது கிரகங்களின் சட் பல கணிதத்தை முதற் கருவியாக உடையது என்று சொல்லாமலே விளங்கும்.

ஆயுள் மிகவும் முக்கியமானபடியால் ஜோதிட சாஸ்திரத்தில் வல்லவர்கள் அனேகர் ஆயுளைக்கணிதம் ரீதியாய் நிர்ணயஞ் செய்யும் வழியைப்பற்றித் தங்கள் புத்திக்கு எட்டின வரையிலும் ஆராய்ச்சி செய்து தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகையால் ஆயுள் நிர்ணய கணிதங்களில் பலவித அபிப்பிராயங்களும், பலவிதமான வழிகளும், பலவிதச் சந்தேகங்களுடனுமிருக்கின்றன. இதனாலேதான் பிருஹத்ஜாதகத்தில் ஆயுள் நிர்ணய அத்தியாயம் மிகவுங்கஷ்டமான அத்தியாயம் என்று பலர் அபிப் பிராயப் படுகின்றார்கள். ஆயுள் நிர்ணயத்தைபற்றி பராசர் தன்னுடைய ஓராசாஸ்திரத்தில் 32 விதமான வழிகளைக் கொடுத்திருக்கின்றார். லக்கினம் ஒன்றும் சாயையையுடைய கிரகங்கள் ஏழும் ஆக 8 அம்சங்கள் ஒரு ஜாதகத்திலிருப்பதால் சிலர் 8 விதமான ஆயுள் கணிதவழிகளைக் கொடுத்திருக்கின்றார்கள். அவைகள் அடியிற்கண்டபடி ஆகும்.

1 பிண்டஜ ஆயுர்தாயம்—சூரியன் வலிவாயிருக்கும் போதும்
2 நைசர்கஜ ஆயுர்தாயம்—சந்திரன் ஷை
3 பிண்டாஷ்டகவர்கஜ ஆயுர்தாயம்—செவ்வாய் ஷை
4 ரசிமஜ ஆயுர்தாயம்—புதன் ஷை
5 நக்ஷத்திர ஆயுர்தாயம்—குரு ஷை
6 காலச்சக்கிர ஆயுர்தாயம்—சுக்கிரன் ஷை
7 சாமுதாய ஆயுர்தாயம்—சனி ஷை
8 அம்சஜ ஆயுர்தாயம்—லக்கினம் ஷை

உபயோகப்படுத்தவேண்டும். இந்த 8வித ஆயுர்தாயவழிகளில் வராஹ மிகிராச்சாரியார் பிண்டாயுர்தாயம் (என்ற பிண்டஜ ஆயுர்தாயம்) அம்சாயுர்தாயம் (என்ற அம்சஜஆயுர்தாயம்) ஆகிய இவ்விரண்டு ஆயுர்தாயங்களை பிரஹத் ஜாதகம் 7-வது அத்தியாயத்திலும், நைசர்கிக ஆயுர்தாயம் (என்ற நைசர்கஜ ஆயுர்தாய) த்தை பிரஹத் ஜாதகம் 8-வது அத்தியாயம் 1-வது சுலோகத்திலுஞ்சொல்லி யிருக்கின்றார்.

பிண்டாயுர்தாயம் அம்சாயுர்தாயம் நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய விசேஷமான இம் மூன்றுவித ஆயுர்தாய கணிதங்களில் சூரியன் வலிவாயிருக்கும்போது பிண்டாயுர்தாயவழியையும் சந்திரன் வலிவாயிருக்கும்போது நைசர்க்கிக ஆயுர்தாயவழியையும் லக்கினம் வலிவாயிருக்கும்போது அல்லது லக்கினாதிபதி வலிவாயிருந்து சுபரால் பார்க்கப்படும்போது அம்சாயுர்தாய வழியையும் உபயோகப் படுத்தவேண்டும் என்று சிலர் சொல்லுகின்றார்கள். லக்கினம் வலிவு என்பதை சிலர் லக்கினாதிபதி மற்ற கிரகங்களைவிட வலிவாயிருத்தல் என்றும், சிலர் லக்கினபாவம் கிரகங்களைவிட வலிவாயிருத்தல் என்றுஞ் சொல்லுகிறார்கள் (லக்கினபாவம் பெரும்பாலும் எப்போது கிரகங்களைவிட வலிவாயிருக்குமாதலால், லக்கினம் என்றால் லக்கினாதிபதி என்றே அர்த்தம் கொள்வது உத்தமமாயிருக்குமே தவிர லக்கினபாவம் என்று அர்த்தங்கொள்வது உத்தமமாக விராது) இன்னஞ்சிலர் அம்சாயுர்தாய வழியை எப்போதும் உபயோகப்படுத்த வேண்டும் என்றும், இன்னஞ் சிலர் எப்போதும் பிண்டாயுர்தாய வழியையும் அம்சாயுர்தாய வழியையும் ஆக இவ்விரண்டு வழிகளையும் ஏககாலத்தில் உபயோகப்படுத்தி இவ்விரண்டு வழியாகவும் ஆயுள் முதலிய பலாபலன்களைச் சொல்லவேணும் என்றும், இன்னஞ்சிலர் பிண்டாயுர்தாயம், அம்சாயுர்தாயம், நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய இம்மூன்று ஆயுர்தாயங்கள் ரீதியாய் ஒவ்வொரு கிரகங்களுக்கும் வருகின்றன வருஷங்களை ஒன்றாய்க்கூட்ட வருகின்றதை மூன்றால் வகுக்க வருகின்றதுதான் அந்த கிரகம் கொடுக்கின்ற ஆயுள் என்றுஞ் சொல்லுகின்றார்கள். ஆகையால் பின்வருமாறு ஆயுள்கணிதம் செய்வது உத்தமம் என்று தோற்றுகின்றது. ஆயுள் கணிதம் செய்து பார்க்கும்போது நாம் கணித்து கணிதத்தினால் வருகின்ற ஆயுள் தவறுதலாயிருந்தால் இது ஆயுள் கணிக்கக் கொடுத்துள்ள பலவிதமதபேதங்களாலும் அபிப்பிராய பேதங்களாலும் உண்டானது என்று கருதவேண்டுமே தவிற கிரகசட்பல கணிதத்தால் உண்டானதென்றும், கிரகசட்பல கணிதவழி தவறுதலாயிருக்கும் என்றும் ஒருபோதுங் கருதவேகூடாது. மேலும் நல்ல வழியிலிருந்து சன்மார்க்கக் காரியங்களில் ஈடுபட்டு கடவுளையும் பிரம்மக்கியானமுடையவர்களையும் தொழுது தேகத்திற்கு ஆரோக்கி

யத்தை உண்டு பண்ணக்கூடிய நல்ல போஜனம் உண்டு, தங்களுடைய பஞ்சேந்திரியங்களேயும் அதிகமாய் உபயோகப்படுத்தாமல் சரிவர உபயோகப்படுத்தி தங்களுடைய குலாச்சாரத்திற்குத் தக்கவாறு நடந்து கொள்ளப்பட்டவர்களுக்குத்தான் பராசர் முதலிய பலரும் சொல்லியுள்ள பலவித ஆயுர்தாயகணித முறைகளால் ஆயுள் நிர்ணயஞ் செய்ய முடியும் என்று வராஹமிகிராச்சாரியார் முதலிய பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பாவத்தொழிலில் எப்போதும் ஈடுபட்டும் அல்லது பேராசையாலும் களவாலும் பிறருடைய சொத்தை அபகரிக்கும் எண்ண முடையவராய் துற்கர்மங்களேச் செய்தும் அல்லது தெய்வ துவேஷம், பிரம்ம துவேஷமுடையவர்களாய்க் குலாச்சாரங்களேக் நகிழவிட்டும் அல்லது பெருந்திண்டி தின்றும் அல்லது எல்லோரும் கண்டால் அஞ்சும்படியாய்த் துன்மார்க்கச்செயல்களேச் செய்தும் வாழ்பவர்களுக்கு அகாலமரணம் நேரிடும். ஆதலால் இதில் சொல்லிய ஆயுர்தாயகணிதவழி பிரகாரம் அவர்களுக்கு ஆயுள்கணிக்கக்கூடாதென்லும் கணித்தால் அது தவறிப்போகும் என்றுஞ் சொல்லுகின்றார்கள்.

இனிமேல் (1) பிண்டாயுர்தாயம் (2) அம்சாயுர்தாயம் (3) நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய இந்த மூன்று ஆயுர்தாயங்களேக் கணிக்கும் வழிகளேப்பற்றிக் கவனிப்போம்.

(1)வது அயிட்டம் :-முதலில் கீழ்கண்ட உதாரணத்தில் காட்டியபிரகாரம் ஒவ்வொருகிரகத்திரத்திற்கும் ஆயுள் கணிக்க வேண்டியது.

(2)வது அயிட்டம் :-பிறகு கீழ்கண்ட அரணங்களே 1-வது அயிட்டத்தில் கணித்து வந்த ஆயுளுக்குச் செய்யவேண்டியது.

(எ) சத்ரு க்ஷேத்திர அரணம்:— ஒரு கிரகம் சத்ருக்ஷேத்திரத்தில் இருந்தால் 1-வது அயிட்டத்தில் அந்த கிரகத்திற்குக் கணித்து வந்த ஆயுளில் மூன்றில் ஒருபங்கு கழித்து விடவும். அந்த கிரகம் வக்கிரகெதியிலிருந்தால் சத்துரு க்ஷேத்திர அரணம் அந்த கிரகத்திற்குச் செய்யக் கூடாது (குறிப்பு சிலர் சத்ரு க்ஷேத்திரத்தில் இருக்கும் கிரகம் செவ்வாயானுல் மாத்திரம்தான் இந்த அரணஞ் செவ்வாய்க்கு மாத்திரம் செய்யக் கூடாதென்றும் கிரகங்கள் வக்கிர கெதியில் இருந்தால் அந்த கிரகங்களுக்கூட அரணஞ் செய்ய

வேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றார்கள். இது அனேகரால் அங்கிகரிக்கப்படவில்லை. சத்ரு க்ஷேத்திரத்தில் இருக்கும் கிரகம் வக்கிரகெதியில் இருந்தால் இந்த அரணம் அந்த கிரகத்திற்குச் செய்யவேண்டியதில்லை என்பது அனேகருடைய கொள்கை யாதலால் அதை இங்கு அங்கீகரிக்கப்பட்டுளது.

(பி) அஸ்தங்கத அரணம்:— அஸ்தங்கதமாய் இருக்கின்ற தஒரு கிரகத்திற்கு 1-வது அயிட்டத்தில் அஸ்தகிரகத்திற்கு வந் ஆயுளில் பாதிகழித்துவிட வேண்டியது. சுக்கிரனுக்கும் சனிக்கு மாத்திரம் இந்த அரணஞ்செய்யக் கூடாது. (குறிப்பு ஒரேகிரகத் திற்குச் சத்ருக்ஷேத்திர அரணமும் அஸ்தங்கத அரணமும் ஆகிய இவ்விரண்டு அரணங்களும் செய்யும்படி நேரிடும்போது மாத்திரம் பெரிய அரணமாகிய அஸ்தங்கத அரணஞ்செய்ய வேண்டுமே தவிர சத்ருக்ஷேத்திர அரணமுஞ் செய்யக்கூடாது).

(2) சக்கிரபாத அரணம் செய்ய:— 1-வது அயிட்டத்தில் சொல்லியபடி ஒரு சுப கிரகத்திற்குக் கணித்து வந்த ஆயுளில், அந்த கிரகம் லக்கினத்திற்கு,

(1) 12-வது பாவத்தில் இருந்தால் முழுதும் கழித்து விடவும்
(2) 11-வது ,, பாதி கழித்து விடவும்
(3) 10-வது ,, மூன்றில் ஒருபங்கு கழித்து விடவும்
(4) 9-வது ,, நாலில் ஒருபங்கு கழித்து விடவும்
(5) 8-வது ,, ஐந்தில் ஒருபங்கு கழித்து விடவும்
(6) 7-வது ,, ஆறில் ஒருபங்கு கழித்து விடவும்

இங்கு சுபகிரகம் என்பது, குரு, சுக்கிரன், புதன், சந்திரன் என்பனவாம்.

1-வது அயிட்டத்தில் சொல்லியபடி ஒருபாபகிரகத்திற்குக் கணித்து வந்த ஆயுளில் அந்த கிரகம் லக்கினத்திற்கு

(1) 12-வது பாவத்தில் இருந்தால் பாதி கழித்து விடவும்
(2) 11-வது ,, நாலில் ஒருபங்கு கழித்து விடவும்
(3) 10-வது ,, ஆறில் ஒருபங்கு கழித்து விடவும்
(4) 9-வது ,, எட்டில் ஒருபங்கு கழித்து விடவும்
(5) 8-வது ,, பத்தில் ஒருபங்கு கழித்து விடவும்
(6) 7-வது ,, பன்னிரண்டில் ஒருபங்கு கழித்து விடவும்

இங்கு பாப கிரகம் என்பது சூரியன், செவ்வாய், சனி என்பன வாம். இந்த சக்கிரபாத அரணம் பாவசக்கிரத்தைக் கொண்டு செய்ய வேண்டுமே தவிற இராசிச்சக்கிரத்தைக் கொண்டு செய்யக்கூடாது அதாவது லக்கினத்திற்கு 12-வது பாவம் என்றால் பாவச்சக்கிரத் தில் லக்கினத்திற்கு 12-வது பாவம் என்பதாம். இப்படியே மற்ற பாவங்களையும் அறியவும். மேலும் ஒரேபாவத்தில் ஒன்றுக்கு மேல் பட்ட பலகிரகங்கள் கூட்டமாய் இருந்தால் அந்த பலகிரகங்களில் மிகவும் வலிவாயுள்ள ஒரு கிரகத்திற்கு மாத்திரம் சக்கிரபாத அர ணஞ் செய்ய வேண்டுமே தவிற கூட்ட கிரகங்களில் இதர கிரகங் களுக்குச் செய்ய வேண்டியதவசியமில்லை. கிரகசட்பலத்தைப் பார்த்து மிகவும் வலிவான கிரகம் எதுஎன்பதை அறியவும்.

குறிப்பு:— இதுவரையிலுஞ் சொல்லிவந்த சத்துரு க்ஷேத்திர அரணம், அஸ்தங்கத அரணம், சக்கிரபாத அரணம் ஆகிய இம் மூன்று அரணங்களும், பிண்டாயுர்தாயம், அம்சாயுர்தாயம், நைசர்க் கிக ஆயுர்தாயம் ஆகிய இம்மூன்று ஆயுர்தாய வழிகளுக்கும் பொது வானது.

குருரோதய அரணம்:— (இது பிண்டாயுர்தாயம் நைசர்க்கிக ஆயுர்தாயம் ஆகிய இவ்விரண்டிற்கு மாத்திரம் செய்யவேண்டுமே தவிர அம்சாயுர்தாயத்திற்குச் செய்யக்கூடாது). லக்கினத்தில் பாப கிரக மிருந்தால் இந்த அரணஞ்செய்ய வேண்டும். சுபகிரகம் இருந் தால் இந்த அரணஞ் செய்ய வேண்டியதில்லை. சுபகிரகமும் பாபகிர கமும் லக்கினத்தில்இருந்தால் லக்கினத்திற்கு அருகில்எது இருக்கின் றதோ அதை அனுசரித்துச் செய்யவேண்டியது. அதாவது சுபகிர கத்தைவிட பாபகிரகம் லக்கினத்திற்கு அருகில் இருந்தால் அரணஞ் செய்யவேண்டும். பாவ கிரகத்தைவிட சுபகிரகம் லக்கினத்திற்கு அருகில் இருந்தால் அரணஞ்செய்ய வேண்டியதில்லை. அரணம் கீழ் கண்டபடி செய்யவும்.

லக்கின ஸ்புடத்தில் வந்த முழுராசிகளைத் தள்ளிவிட வேண்டி யது. தள்ளிவிட்டபிறகு நின்ற பாகை கலையைக் கலையாக மாற்ற வேண்டியது. இப்படிக் கலையாக மாற்ற வந்த எண்ணால் ஒவ்வொரு கிரகத்திற்கும் 1-வது அயிட்டத்தில் சொல்லிய பிரகாரம் கணித்து வந்த ஆயுளைப் பெருக்கி 21600 ஆல் வகுக்க வருகின்ற ஈவு வருஷ

மாகும். மிச்சத்தை 12 ஆல் பெருக்கி 21600 ஆல் வகுக்க வருகின்ற ஈவு மாசமாகும். 12 ஆல் பெருக்கி வகுத்த பிறகு வந்த மிச்சத்தை 30 ஆல் பெருக்கி 21600 ஆல் வகுக்க வருகின்ற ஈவு நாள்களாகும். 30 ஆல் பெருக்கி வகுத்து வந்த மிச்சத்தை 60 ஆல் பெருக்கி 21600 ஆல் வகுக்க வருகின்ற ஈவு நாழிகையாகும். 60 ஆல் பெருக்கி வகுத்து வந்த மிச்சம் 10800ம், 10800க்கு மேற்பட்டுமிருந்தால் அர்த்தாதிக மாகையால் கணித்து வந்த நாழிகையுடன் ஒருநாழிகை சேர்க்கவும். இப்படிச் செய்ய வந்த வருஷம் மாதம் நாள் நாழிகையைக் குரூரோதய அரணத்திற்காக 1வது அயிட்டம் பிரகாரம் கணித்து வந்த ஆயுளிலிருந்து கழித்து விட வேண்டியது. லக்கினத்தில் இருக்கும் பாபகிரகத்தை ஒரு சுபக்கிரகம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சுபக்கிரகங்கள் பார்த்தால் மேலே சொல்லியபடி 21600 ஆல் வகுத்து வந்த வருஷம், மாதம், நாள், நாழிகையில் பாதிதான் கழித்துவிடவேண்டியது. (இங்கு சுபக்கிரகங்கள் பார்ப்பது என்பதை புதன், சுக்கிரன், சந்திரன் இவர்களுக்கு 7-வது பார்வையும், குருவிற்கு 5, 7, 9-வது பார்வையுங் கவனிக்க வேண்டுமே தவிர மற்றப்படி கிரகத்திருக்பலம் கணிக்கும் போது கிரகங்கள் பொதுவாய் 12, 1, 2 ஆம் வீடுகள் தவிர மற்ற வீடுகளைப்பார்க்கின்றன என்ற கொள்கையை எடுத்துக் கொள்ளக் கூடாது) கிரகங்களுக்குக் குரூரோதயஞ் செய்வது போலவே லக்கிஞயுர்தாயத்திற்குங் குரூரோதய அரணஞ் செய்ய வேண்டியது.

லக்கிஞயுர்தாயம் கணிக்க:— லக்கிஞயுர்தாயத்தைக் கணிக்கும் வழியைப் பற்றி பலஅபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஆயினும் சூரியன் வலிவாயிருக்கும்போது பிண்டாயுர்தாயம் ரீதியாய் (அதாவது கிரகங்கள் ராசியிலிருக்கும் நிலையை அனுசரித்து) கணிக்கவேண்டும் என்றும் லக்கினம் வலிவாயிருக்கும்போது அம்சாயுர்தாயரீதியாய்க் கணிக்க வேண்டுமென்றும் முன்னமே சொல்லியிருப்பதால் அதற்கு இணங்க பிண்டாயுர்தாயத்தில் லக்கின ஸ்புடத்தில் மேஷம் முதல் செல்லான ராசிகளைக் கொண்டு லக்கிஞயுர்தாயமும், அம்சாயுர்தாயத்தில் லக்கினஸ்புடத்தில் மேஷம் முதல் செல்லான நவாம்சை எத்தனை (அதாவது நாவம்சை சக்கிரத்தில் நவாம்சை லக்கினமிருக்கும் ராசி மேஷம் முதல் எத்தனையாவது ராசி) என்பதையும் அனு

சரித்து லக்கினயுர்தாயமும் கணிக்கவேண்டும் அதாவது பின்வருமாறு கணிக்க வேண்டியது.

(1) பிண்டாயுர் தாயத்தில் லக்கினயுர்தாயம் கணிக்க:- லக்கினஸ்புடத்திலுள்ள ராசி, பாகை, கலைகளுக்கு ராசி ஒன்றுக்கு ஒரு வருஷமாகக் கணக்கிட்டு உதாரணத்தில் கண்டபடி கணிக்கவும்.

(2) அம்சாயுர்தாயத்தில் லக்கினயுர்தாயம் கணிக்க:- அம்சாயுர்தாயத்தில் கிரகங்களுக்கு 1-வது அயிட்டத்தில் சொல்லியபடி ஆயுள் கணித்தது போலவே லக்கினயுர்தாயங் கணிக்க வேண்டியது உதாரணம் பார்க்கவும்.

(3) நைசர்க்கிக ஆயுர்தாயத்தில் லக்கினயுர்தாயங் கணிக்க:— பிண்டாயுர்தாயத்தில் லக்கினயுர்தாயம் கணித்தது போலவே கணிக்க வேண்டியது. உதாரணம் பார்க்கவும்.

